Title: **Cosmic Secrets A Journey with Mystic Tirumular**

பிரபஞ்ச ரகசியங்கள் சித்தர் திருமூலருடன் பரவெளிப் பயணம்

Tamil, English bilingual version

Author: **M. Namasivayam**

Compiler, editor & co-author: **S. Kumar**

Book Classification: Yoga, Meditation, & Tamil Mysticism

ISBN: 9789353514549

Published By: **KUMAR PUBLICATION,** 4/166 Vasuki Illam, Vennavasal Village, Koradacheri-613703, Thiruvarur District, Tamil Nadu India, Hp+ 91 90927 55532

MSME: UDYAM-TN-25-0005972

email: cosmicsecretsbook@gmail.com | kumarvennavasal@gmail.com

Copy right: Author
Publishing right: S. Kumar
Price: **Indian Rupees 3000/-**

Trade Mark is registered in India



COSMIC SECRETS

A JOURNEY WITH MYSTIC TIRUMULAR

AUTHOR
M.NAMASIVAYAM

பிரபஞ்ச ரகசியங்கள்

சித்தர் திருமூலருடன் பரவெளிப் பயணம்

ஆசிரியர்
மு.நமசிவாயம்

About Author

Vanakkam

Thank you for your great support of entering Tirumular consciousness. The cosmic treasure you are having in your hands. I, M. Namasivayam, author of this book would like to share the history, how this book came to you.

When i worked with Tamil Nadu Archives and Historical Research Department, Chennai, Egmore as Librarian (1983 - 2009). In 1999, i was advised to learn meditation for my medical ailment of inner turbulence and stress. I learnt the yoga-meditation with physical exercises in Chennai and practiced the methodology every day at my home, as per instruction. Daily I felt the inner vibration in my brow-chakra and attained trance which took me beyond the galaxy and saw some new places in the Samadhi-state of mind, received many spirit art pictures day-by-day. The next day cosmic spirit forced me to draw what i received the day before and compiled hand drawn manuscript.

My library is the Tamilnadu historical research institute where colonial records, Government gazette and confidential data are preserved. Many research scholars, students, and experts from all over the world often visit for their data collection. I used to show my hand drawn pictures to some visiting experts and one day a visiting sadhu after seen my pictures advised me to read Tirumantiram. Then I immediately went thru the Tirumular's Tiruman-

tiram. Some Tirumantira hymns came to my mind and indicated that those pictures have connection with Tirumantiram then I coined some hymns with each picture, guided by cosmic link. Later, I sowed these hand drawn pictures in many social network blogs to younger generation for further deep studies.

Thus 240 cosmic communications are deciphered by my deep meditative mood and my health condition was improved and i became energized. I sowed these hand drawn pictures in many social network blogs to younger generation for further deep studies. 2015 Tirumular Trust approached and requested me to compile all the pictures in a book form. Here is the story of "Cosmic Secrets: A journey with mystic Tirumular with 202 pictures on Tirumantiram. There I confirmed that Tirumular also did astral travel thru his deep samadhi-state, visualized 3000 astral aakashic records which made him astonished and he documented the truth (cosmic bliss) in Tamil called Tirumantiram and Tirumular with his blessing allowed me to decipher 240 pictures from his 3000 hymns.

This is not a mere literal translation

work but what my inner vision deciphered in transcendental meditation with Tirumular and Tirumantiram, here I carved. In future, people from all over the world may further do research on this subject thru deep meditation with spiritual quest in association with Tirumular Trust, and its editor. I wholeheartedly thank them for this great book mission into leading world languages to the upcoming generation for next practice.

With love and blessings

M. Namasivayam
Guduvancheri
Chennai
Tamilnadu

ஆசிரியர்...

சத்தியம் சொன்னோம் சதா நந்தி ஆணையே: வணக்கம்!

உங்கள் கையில் தவழும் இந்த பிரபஞ்ச ரகசிய புத்தகம் நிரம்ப அதிர்வலைகளைக் கொண்டது. திருமூலரோடு நேரடித் தொடர்புள்ளது. வானவர்களின் வான்மறை ரகசியம். விரும்பி விலைகொடுத்து வாங்கிய உங்கள் செயல், திருமூலரை வரவேற்று, வீடுதோறும் இறை யுணர்வை கொண்டுவர உதவும்.

மருத்துவர் ஆலோசனைப்படி சிற்சில உடல் உபாதைகளுக்காக 1999இல் தியானம் கற்றுக் கொண்டேன். முறையான உடற்பயிற்சிகளையும் தவமுறை களையும் கற்றுக் கொடுத்தனர். அதையெல்லாம் புரிந்துகொண்டு தினம்தோறும் காலை, மாலை ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தியானம் செய்யத் தொடங்கினேன். உடலில் புருவமத்தியில் சில குறு குறுப்புகள் வந்தன. பின்னர் எங்கோ புதிய புதிய விண்வெளி இடங்களுக்கு தினம்தோறும் தூக்கிச் செல்லப்பட்டேன். தியான அகக்காட்சிகள் ஒன்றன்பின் ஒன்றாக கண்டேன். தவத்திலிருந்து மீண்டு வந்த பிறகும் அந்த அகக் காட்சி படங்கள் என்னை புளகாங்கிதம் அடையவைத்தன. அப்படி கிடைத்த 240 தவ- அகக் காட்சிப் படங்களை என் கைப்பட காகிதத்தில் வரைந்தேன்.

பின்னர் நான் வேலை பார்த்த ஆவணக்காப்பக நூலகத்திற்கு வந்த ஒரு சாது, அந்த படங்களை யெல்லாம் பார்த்துவிட்டு, என்னை 6ஆம் திருமுறையை படிக்கச் சொல்லி சென்றுவிட்டார். என் காதில் அது 6ஆம் திருமந்திரம் என்று ஒலித்துவிட்டது. ஆவணக் காப்பகத்தில் இருந்த திருமூலரின் திருமந்திரத்தை படிக்க ஆரம்பித் தேன். திருமந்திரங்களை படிக்க படிக்க அதில் சில குறிப்பிட்ட திருமந்திரங்கள் என்னைக் கவர்ந்தன. நான் வரைந்து வைத்துள்ள அகக்காட்சி படங்களோடு அந்த திருமந்திரங் கள் தொடர்புடையது என்று என் ஆழ்மனதுக்கு புலப்பட்டது. உடனே அந்தந்த படங்களோடு திருமந்திரப் பாடல்களை இணைத்து ஒழுங்குபடுத்தி ஆவணப்படுத்தினேன்.

தவம் செய்ய செய்ய எனக்கு அகக்காட்சிகள் கிடைத்தன. புதிய புத்துணர்வு உடலிலும், மனதிலும் பெருகியது. உடல் உபாதைகள் நீங்கப்பெற்றேன்.

திருமூலர், அவரது காலத்தில் தவத்தால் விண்வெளியில் பயணித்து அண்டங்களுக்கு அப்பால் சென்று பிரபஞ்ச ரகசியங்களை எல்லாம் தனது அகக்காட்சியில் கண்டு, வியந்து, திருமந்திரமாக தமிழில் தொகுத்திருப்பார் என்றுணர்ந்தேன். அவர் கண்டு வியந்த அந்த ஆகாயப் பேரேட்டு அகக் காட்சிகளில் சில காட்சிகளை என்னையும் தவத்தால் திருமூலர் காணவைத்துள்ளார் என்பதையும் உணர்ந்தேன்.

திருமந்திரம் உலக மக்களுக்குக் கிடைத்த ஆகாயப் பெருவெளி பிரபஞ்ச ரகசியங்கள். இங்கே அகக்காட்சிப் படங்களே முக்கிய கருப்பொருள். 203 திருமந்திரங்களுக்கும் நான் அப்படியே உரை எழுதவில்லை. தியானத்தில் உணர்ந்த அகக்காட்சிகள் என்னில் என்ன உணரவைத்ததோ அதை சில வரிகளில் தொகுத்துள்ளேன். அதையே ஆங்கில விளக்கமாக கொடுக்க முயற்சித்துள்ளேன். எதிர்கால சந்ததிகள் தான் இந்தப் படங்களை ஆய்ந்து, ஆராய்ந்து, தியானித்து உணர்ந்து கொள்ளவேண்டும்.

நான் தவத்தால் பிரபஞ்சவெளியில் பயணித்து கண்ட காட்சிகள் இப்போதும் என் மனதுக்குள் சுழன்று கொண்டுதான் இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் பிரபஞ்சப் பெருவெளிக்கு போக உதவும் தியான - வாகனங்கள். எனக்கு கிடைத்த அகக்காட்சிகளை பல சமூக வலைதளங்களில் நான் விதைத்திருந்தாலும் மேலும் அது உலகமக்கள் ஒவ்வொருவரின் இல்லங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்கிற உயர்ந்த நோக்கத்தில் திருமூலர் அறக்கட்டளை இப்புத்தகத்தை தொகுத்து வெளியிட்டுள்ளது. மேலும் உலகின் பல முன்னணி மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்படஉள்ளது.

அகக்காட்சி படங்கள் உங்களுடன் தொடர்பு கொள்ளும். உங்களுக்குப் பிடித்த அகக்காட்சி ஒன்றைத் தேர்ந்தெடுத்து நீங்கள் தவம் செய்ய செய்ய இன்னும் பற்பல பிரபஞ்ச ரகசிய புதிர்களை உங்களுக்குள் உணர வைப்பார் என்று திருமூலரின் திருமந்திரத்தின் மீது ஆணையிட்டு வாழ்த்துகின்றேன்.

வாழ்க வளமுடன் நன்றி வணக்கம்!

ர.நடராஜன்,
கூடுவாஞ்சேரி, சென்னை.

Tirumular
The living consciousness

Tamil research scholars and Saivite research experts found the Tirumular's time and his contribution of Tirumantiram with the supporting documents from Oriental Research Institute and Library Thiruvananthapuram, Government Oriental Manuscript library Chennai, Thajavur Saraswathi Mahal library, French national library (Bibliotheque nationale de France) Paris, French Institute of Pondicherry and Tamilnadu saivite mutt libraries. But here we never refer or authenticate the time and century of Tirumular, because the Tirumular consciousness still revolves in galaxy.

Tirumular clearly documented in a hymn that his name was Sundaraanathar in his pre-birth. He felt deep meditation and trance in many decades under the holy feet of Aathi yogi, the creator in the space of Sivakalam, done penance, received many cosmic communications.

Later in his spiritual journey to Tamil Nadu, Sundaraanathar is transmigrated as Mulan and he reached Thiruvavuduthurai where he did penance under peepal tree and attained trance and cosmic bliss. Through his deep meditation, he went beyond galaxy and found the "Orion-constellation as God's kingdom by astral-travel. He received many cosmic secrets and documented them "Sathasiva-aagamam or Thirumantira maalai" in Tamil, later named Tirumantiram. By his inner journey, Tirumular found his own experience that God resides within every human in the name of SIVA, Nanthi, Nathan, Aathma and the God's particle.

It is believed by many enlightened sages, that after the compilation of Holy Tirumantiram, Tirumular reached Chidambaram and merged with dancing Siva there. Tamil Sittha-mandalam is ever living cosmic consciousness in galaxy where Tirumular is the spiritual emperor.

ஒன்றே குலமும்
ஒருவனே தேவனும்

பிரபஞ்சவெளியில் ஆடும் சிவசக்தி திருக்கூத்தின் சிறப்பைச் செப்ப வந்தேன். இப்பிரபஞ்சத்தில், பகல் இரவு அற்ற இடத்தில், அந்த ஆதியோகியின் இணையடியின் கீழே எண்ணிலி கோடி வருடம் மோனநிலை தியானத்தில் இருந்தேன். வானவர் போற்றும் நந்தியெம் பெருமானின் திருவடியின் கீழே தவமிருந்தேன். அதனால் ஒளிஉடம்பு பெற்றேன். சுந்தரானந்தராக தென்னாட்டிற்கு வரும் வேளையில் மூலனின் உடலில் புகுந்து திருவாவடுதுறை பட்அரசின்கீழ் பல ஆண்டுகள் தவமிருந்தேன். அப்பன், நந்தி, ஆதிபோகி, சோதி, அத்தன், சித்தன், நாதன் எனும் நாமங்களை தரித்த இறைவனை என்னுள்ளே தரிசித்தேன். அவனது சிவநாமங்களை போதியின்கீழ் ஓதி மகிழ்ந்தேன், என்று திருமூலரே தன் வரலாற்றை திருமந்திரத்தில் இப்படி அறிவிக்கின்றார்.

சென்னை மற்றும் திருவனந்தபுரம் கீழ்த்திசை – சுவடிகள் காப்பகம், சரஸ்வதி மஹால் சுவடிகள், ஆதினங்களின் சுவடிகள், பதுச்சேரி நூலகம், பாரிஸ் நகரத்து French national library (bibliotheque nationale de france) போன்ற பல சுவடிகளிலிருந்து நம் தமிழ் மொழி ஆராய்ச்சியாளர்கள், சைவ-சமய அறிஞர்கள் திருமூலரது காலம் என்ன, எங்கிருந்து வந்தார் என்பது போன்ற பெரும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு விளக்கியுள்ளனர். நாம் அந்த கால-எல்லைகளுக்குள் போகவில்லை.

ஒளியுடம்பில் இருந்து திருமூலர் தவமிருக்க தவமிருக்க, அவருக்கு பல அகக்காட்சிகள் கிடைகின்றன. அண்டங்கள் ஏழினுக்கு அப்புறத்து அப்பால் சென்று பிரபஞ்ச ரகசியங்களை காண்கிறார். அந்த காட்சிகளையும், சூக்குமங்களையும் கண்டு, வியந்து வியந்து அந்த தியான யோக அகக்காட்சிகளை சதாசிவ ஆகமம் என்னும் திருமந்திரமாலையாக பதிவு செய்கிறார் மேலும் ஆறு ஆதாரங்களைக் கடந்து, துரிய, துவாதசாங்க ஏணியில் ஏறி, ஏழு கடலையும் கண்டு இறை இருப்பிடமான, 'திருவாதிரை' (ஓரியன்) நட்சத்திரத்தைக் கூட்டத்தைக் கண்டேனே என்கிறார்.

ஆதியோகியே இப்பூமிக்கு சிவமாக இறங்கிவந்து சிவயோக கலையை, விரிவாக போற்றி தவத்தின் மூலம் பதிஞானம் என்கிற வான்மறைபொருள் அமிர்தத்தை தந்தருளியுள்ளார். காலநேர வர்த்தமானம் எதுவாயினும் என்றும் வாழும் இறையாற்றல் திருமூலர்.



Significance of Tirumantiram

Tirumantiram consists of 3000 holy hymns in Tamil language. They are the higher spiritual knowledge, received by Tirumular in his deep samadhi state. One-clan and One-God is the main core. The oneness remains subtle in the form of great holy light from earth to entire universe.

The vertical spinal-cord is the great gift to human beings to receive the cosmic communications from the Akashic records in padmasana yoga posture. It may lead to the micro-macro link in deep meditation. The spiritual seekers can read them and may go to astral-travel by prescribed Tirumular's yogic principles. Tirumular further declares that human body is the real temple. Through proper breathing exercises, one can preserve the valuable life and body, will endure life forever. The astral travel to various galaxies and beyond the universe is possible to Tirumular disciples if they follow his subtle methodology and they can feel and see the holy aliens in their meditative - astral travel.

Breath is the main core and gives the vital energy to all human to survive. The constant circulation of inhaling and exhaling in human body is the core

dance which resembles the cosmic function and connects the micro-macro link. The total universal energy is the combination of positive and negative forces that denotes Thiruvambala chakkaram. The entire universe is expanding itself day-by-day and another side depleted living particles, stars, and planets all are absorbed by the rotating cosmic pillar, the black hole. Tirumular deciphers the truth that Akashic records have registered all past, present and future events.

Tirumantiram further talks about human body, the breath, secrecy of semen, soul within body, its size, mind and its expansion with universe, aathma and its wisdom. Tirumular clearly states where souls travel for classifications or the reaching destination. Finally, he confirms the Orion constellation is the place of heavenly kingdom. Tirumantira hymns are all keys to enter the cosmic truth. 202 astral-travel pictures with Tirumantira hymns are here depicted and they are the star gates of your deep meditation to experience the cosmic secrets as next practice.

திருமந்திரத்தைப் பற்றி சில அறிய குறிப்புகள்

பூமியில் மனிதனின் படைப்பு ஓர் அற்புதமான படைப்பாகும். அதற்கு காரணம் மனிதமூளை - முதுகுதண்டு - மூலாதாரம் மூன்றும் ஒரு நேர்க்கோட்டில் இயங்கி பிரபஞ்ச தொடர்பு தவறாமலையில் கிடைக்கப்பெறுகிறது. இது உலகில் மற்ற எந்தவொரு உயிரினங்களுக்கும் கிடைக்காத ஓர் உன்னதப் பரிசாகும். மனித உடம்பில் உறையும் குண்டலினி சக்தியை விழிப்படையச் செய்து, மூலக்கனலை எழுப்பி சுழுமுனைநாடி வழியே செலுத்தி, விசுத்தி மற்றும் ஆக்கினை வழியாக குளிரச் செய்து சஹஸ்ராரத்தில் அருட்சக்தியுடன் சேர்ந்து அங்கு பெருகும் அமுதம் பருக வழிசெய்யும் தவநெறியே திருமந்திரம்.

எனவே மனிதன் யோகநெறியை கடைபிடித்து அதன் சூக்குமங்களைப் பற்றியும், ஆகாயப் பேரேட்டைப் பற்றியும் மனித உடலினை அழியவிடாமல் பாதுகாப்பது குறித்தும், ஊனுடம்பை விட்டு விலகி ஒளியுடம்பு பெற்று பூமியைத் தாண்டி, பல்வேறு வரிமண்டலங்களுக்கு பயணிக்கவும், வானவர்களாக மாறவும் திருமந்திரம் வழிகாட்டுகிறது.

காற்றே கடவுள், சுவாசமே உயிர்மூச்சு, அதுவே இறைவனின் திருநடனம். உடலியக்கமே பிரபஞ்ச இயக்கம் (ஷத்து, கூத்தன்), உடலியக்கமும் பிரபஞ்சமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது; நேர்மறை, எதிர்மறை சக்திகளே பிரபஞ்ச இயக்கத்திற்கு காரணம், அதன் காரணமாகவே அண்டங்களும், பேரண்டங்களும், நட்சத்திர பால்வெளி மண்டலங்களும் இப்பிரபஞ்சத்தில் ஒருபுறம் புதிது புதிதாய் தோன்றி விரிவடைந்து கொண்டிருந்தாலும் மறுபுறம் வலுவிழந்து கருந்துளை

யால் கவரப்பட்டு அழிந்து கொண்டும் இருக்கின்றன. இவையாவுமே ஆகாயப்பெரேட்டில் பதிவு செய்யப் பட்ட பதிவாகவும் உள்ளது. இதுபோன்ற பிரபஞ்சத் தகவல்களைக் கொண்டது திருமந்திரம்.

மனிதனின் உடலைப் பற்றியும், மூச்சுக்காற்று,

விந்தணு சுக்குமம், உடலில் ஒடுங்கிய உயிர்,

அதன் வடிவம் குறித்தும், மனம் பற்றியும், அதன் பிரபஞ்ச வீச்சு குறித்தும், அறிவைப்பற்றியும், அதனுள் அமர்ந்திருக்கும் ஆன்மாவைப் பற்றியும், மேலும் உடலைவிட்டு உயிரானது செல்லுமிடம், அதன் மறுபிறப்பு, இறையுடன் கலத்தல் பற்றியும் விளக்குகிறார். இறுதியில் இறை இருப்பிடம் ஓரியன் (திருவாதிரை) நட்சத்திரக் கூட்டம் குறித்தும் சூக்குமமாக திருமந்திரத்தில் அறிவிக்கின்றார் திருமூலர். உங்களை ஈர்க்கும் இப்பகுதியின் அகக்காட்சிப் படங்களில் சில படங்களை உங்கள் சுழுமுனையில் கவனித்து, கவனித்து தவம் செய்து வர, வானவர்கள் உங்களுக்கு சிவத்தை, பதிஞானத்தை உணர வைப்பார்கள். வானவர் நாட்டிற்க்கான வாசலைத் திறந்து வரவேற்ப்பார்கள்.

Contents

Chapter 1. Aliens ..... 20 - 49

Chapter 2. Akashic Record ..... 52 - 75

Chapter 3. Consciousness ..... 78 - 97

Chapter 4. Cosmic secrets ..... 100 - 137

Chapter 5. Delta ..... 140 - 191

Chapter 6. Earth ..... 194 - 245

Chapter 7. Global Citizen ..... 248 - 267

Chapter 8. Micro-Macro link ..... 270 - 305

Chapter 9. Space ..... 308 - 329

Chapter 10. Universe ..... 332 - 355

Chapter 11. Wisdom ..... 358 - 409

Chapter 12. Sivanubavam ..... 412 - 447

உள்ளடக்கம்



அத்தியாயம் 1. வேற்றுலகவாசிகள் ..... 20 - 49

அத்தியாயம் 2. ஆகாயப் பேரேடு ..... 52 - 75

அத்தியாயம் 3. உயிருணர்வு ..... 78 - 97

அத்தியாயம் 4. பிரபஞ்ச ரகசியங்கள் ..... 100 - 137

அத்தியாயம் 5. தியான முக்கோணம் ..... 140 - 191

அத்தியாயம் 6. பூமி ரகசியம் ..... 194 - 245

அத்தியாயம் 7.
ஒன்றே குலம் ஒருவனே தேவன் ..... 248 - 267

அத்தியாயம் 8. பிண்டத்தில் அண்டம் ..... 270 - 305

அத்தியாயம் 9. பரவெளி ..... 308 - 329

அத்தியாயம் 10. பிரபஞ்சம் ..... 332 - 355

அத்தியாயம் 11. பேரறிவு ..... 358 - 409

அத்தியாயம் 12. தவம், வானம், சிவம் ..... 412 - 447



Chapter 1

ALIENS

வேற்றுலகவாசிகள்



Aliens in Giza Pyramid

1.1 ஏறுபடி இறங்குபடியில் 'வானோர்'

காயத்தேர் ஏறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தேர் ஏறி மயங்கும் மவை உணர்
நேயத்தேர் ஏறி நிமலன் அருள் பெற்றால்
ஆயத்தேர் ஏறி அவன் இவணமே

- திருமந்திரம் 1651

Kayather eri manappagan kaikoota
Mayather eri mayangum mavai unar
Neyather eri nimalan arulpetraal
Aayather eri avanivan aame

- Tirumantiram 1651

This picture and Tirumantira hymn explains that while meditating, the inner mind of practitioner may fly the astral travel thru brow chakra to duriyam, duriyadheedam, moon, sun, sakthi-kalam, siva-kalam and vice versa, the mind travel could return moolatharam, the base chakra. In this astral travel, the practitioner may see aliens

தியானத்தில் பயணிக்கும் சாதகன் அல்லது சாதகியர் புருவ மத்தியைக் கடந்து, துரியம் துரியாதீதம் கடந்து, சந்திரர் சூரியர் கடந்து, சக்திக்கலாம் கடந்து, வெட்ட வெளியான சிவகளத்தைக் கண்டுகளித்து, பின்னர் ஏறுபடியில் ஏறியதுபோல, இறங்குபடியில் இறங்கிவரும் பயணத்தில், 'வானோர்' எனப்படும், வேற்றுலகவாசிகளைச் சந்திப்பதற்கு வாய்ப்புள்ளது என்பதை இந்த திருமந்திரப் பாடல் மறைபொருளாக தெரிவிக்கிறது.

Bull-headed alien

1.2 அவனும் நானும் மற்றெவ்வுயிர்களும்

அடங்காத என்னை அடக்கி அடிவைத்து
திடங்காண் பரானந்தத்தே என்னை இட்டு
நடந்தான் செயும்நந்தி நன்ஞானக் கூத்தன்
படந்தான் செய்துள்ளுட் படிந்திருந் தானே

- திருமந்திரம் 2741

Adangatha ennai adakki adivaithu
Thidangaan paraananthathey ennai ittu
Nadanthan seyumNanthi nangnagnak koothan
Padanthan seithullut padinthirun thaane

- Tirumantiram 2741

In every human, the bull-headed alien resides and dances. He was the first alien who came to this Earth, created human beings and all creatures.

அடங்காத என்னை அடக்கி, எனது ஆணவ கன்ம மாயைகளை அடிவைத்து நொறுக்கி, பரானந்தத்திலே அமிழ்த்தினான் கொம்பு முளைத்த இந்தக் கொம்பன்; நன்ஞானக்கூத்தன்.

இவனே வானோர் உலகின் முதல்வன். இப்பூமிக்கு வந்த முதல் வேற்றுலகவாசி. எல்லா உயிரினங்களையும் படைத்திருக்கும் அவனது நுண்ணுகன். அவனே பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் தலைவன்.

Creator of human beings

1.3 பிரபஞ்சப் படைப்பாளி

பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயில பதிபர மாதலாற்
பாசம் பயில பதிபசு வாகுமே

- திருமந்திரம் 2423



Paasam payiluyir thane paramuthal
Paasam payiluyir thane pashuvenba
Paasam payila pathipara maathalaar
Paasam payila pathipasu vagume

- Tirumantiram 2423

He or She is the creator of human beings of our Earth. We call HIM as Nanthi, Aathi yogi or creator. His particles pervade into all creations, called Aathma.

இவரே ஆதியோகி, நந்தி, நாதன் என்றழைக்கப்படும் பிரபஞ்சப் படைப்பாளி. நாம் பார்க்கின்ற இப்பூமண்டலத்தின் தலைவன். எவ்வுயிர்களாயினும் அவ்வுயிர்களிலே இவரது நுண்துகள் ஆன்மாவாக குடியிருக்கும்.

Alien watch

1.4 இது கங்காணியின் பூமண்டலம்

கண்காணி இல்லென்று கள்ளம்பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணி யாகக்கலந் தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவு ஒழிந்தாரே

- திருமந்திரம் 2067

Kankaani illenru kallampala seivaar
Kankaani illaa idamillai kaanungaal
Kankaani yaaga kalnthengum ninraanaik
Kankaani kandaar kalavu ozhinthare

- Tirumantiram 2067

People are sometimes doing all kinds of unethical, illegal, immoral evils deeds, by consoling that nobody looks us. But in our Galaxy, we are being monitored by cosmic watcher, alien watch. It is the omnipresent, always watching us, all our words, deeds and every day-to-day activity. If this is known to every soul, no harm, no evil deeds happen.

நம்மை கண்காணிக்கும் கங்காணி இல்லையென்று கள்வாங்கள் பல செய்ய வேண்டாம். ஏனென்றால், இது கங்காணியின் பூமண்டலம். கண்காணி இல்லா இடமில்லை. எங்கும் அவரது ஆட்சி. இதைத்தான் இங்கே திருமூலர் நம்மிடையே சொல்லி நம் களவு இழிவு செயல்களை விட்டுவிடச் சொல்கிறார்.



Alien foot

1.5 பேரறியாத பெருஞ்சுடரின் பாதங்கள்

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
யாரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமல் விளம்பு கின்றேனே

- திருமந்திரம் 95

Aararivar engal annal perumaiyai
Yaararivar intha agalamum neelamum
Perariyatha perunjudar onruathin
Verari yamal vilampu ginrene

- Tirumantiram 95

This is the one of cosmic spirit art picture received by the author, M. Namasivayam, during his meditative mood, deciphered the "alien foot". Tirumular here thru this Tirumantira hymn expresses that nobody knows the shape and measurement of the alien foot, but he has seen it thru deep meditation.

பல மெய்ஞானிகளுக்குத் தியானத்தில் கிடைத்திடாத அந்த நீள்கழல்கள், இப்பூமண்டலம் முழுவதும் வியாபித்திருக்கும் அந்தப் பேரறியாத பெருஞ்சுடரின் பாதங்களை ஆழ்தியான அகக்காட்சியில் கண்ட திருமூலர் வேரறியாமல் விளம்புகின்றேனே என்று தியானம் கலைந்து திகைத்துப் போகிறார்.

Thuvaathasaangam

1.6 வானவர் வருகை

ஆறெழுத்தாவது ஆறு சமயங்கள்
ஆருக்குநாலே இருபத்து நாலென்பர்
சாவித்திரியில் தலையெழுத்து ஒன்றுள
பேதிக்க வல்லார் பிறவியற்றார்களே

- திருமந்திரம் 994

Aarezhuthavathu aaru samayangal
Aarukkunale irupathu nalenbar
Savithiriyil talaiyezhuthu onrula
Pethikka vallar piraviyatraargale

- Tirumantiram 994

Hill top is the landing place for Aliens who always monitor human society to help. The one feet above human forehead is called 'Thuvathasaangam', the connecting space is to receive the cosmic communications in one's deep meditative mood (alpha wave level).

மலை உச்சிகள் எப்போதும் மனித சமுதாயத்தை கண்காணித்து உதவி செய்யும் வானோர்கள் (ஏலியன்ஸ்) தரையிறங்கும் தளமாகவே கருதப் படுகிறது. அது போல மனிதத் தலைக்கு ஒரு அடி மேலேயுள்ள உயர் தளத்தை 'துவாதசாங்கம்' என்று அழைக்கிறோம். ஆழமான மனநிலையில், ஆல்பா அலை நிலையில், ஒருவர் தியானம் இருக்கையில் அவருக்கு பிரபஞ்சத்தின் செய்திகள் கிடைக்கப் பெறுகிறது. வானோரின் உதவிகள் வந்தடைகிறது.



Maaya or Hindrances

1.7 வானோர் வழங்கும் அறிதம்

உழவன் உழஉழ வானம் வழங்க
உழவன் உழவினில் பூத்த குவளை
உழவன் உழத்தியர்கண் ஒக்கும் என்றிட்டு
உழவன் அதனை உழவொழிந் தானே

- தி.மந்திரம் 1619



Uzhavan uzhauzha vaanam vazhanga
Uzhavan uzhavinil pootha guvalai
Uzhavan uzhathiyarkan okkum enrittu
Uzhavan athanai uzhavozhin thane

- Tirumantiram 1619

When one is being in meditative sadhana, the cosmic is ready to pour its wisdom. But often maaya's disturbances thru sensual desires hinder the one's astral travel not to move further on.

யோக சாதனையாளன் யோக நிலையில் லயிக்கும் போது பிரபஞ்ச ஞானம் கிட்டும். அவனுக்குள் தோன்றும் அகக்காட்சிகள் சாதனையாளனை தடுமாற செய்ய வல்லவை. ஆதலால், யோகி சாதனையைத் தொடர முடியாமல் தடுமாறுகிறான்.

God has no human identity

1.8 கடவுளுக்கு மனித அடையாளமில்லை

வானவர் என்றும் மனிதர் இவரென்றும்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோருந்தனித் தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே

- திருமந்திரம் 109



Vaanavar enrum manithar ivarenrum
Thenamar konrai sivanarul allathu
Thanamarn thorum thanitheivam matrillai
Oonamarn thorai unavarvathu thane

- Tirumantiram 109

Lord Siva creates people and classifies some as ever-living elevated souls, (Aliens-Devas), and more as ordinary human. Some proclaim that they are the gurus and guiding beacons. But human consisting of bio-molecules one day is subject to mingle with nature (five-elements). So here Tirumular clearly enlightens human not to follow false personalities, other than Siva.

சிவபிரான் சிலரை ஆக்கும் உடம்புடன் வானவராகவும், பலரை ஸ்தூல உடம்புடன் மனிதராகவும் படைக்கின்றான். மனிதர்கள் (ஊனமர்ந்தோர்) எல்லாம் ஒருநாள் இயற்கையோடு கலந்து மறைபவர்களே என்றுணர்ந்து சிவனைத் தவிர வேறு எவரையும் கடவுளாக கருதக்கூடாது என்கிறார் திருமூலர்.

Transcendental Meditation

1.9 வானகம் ஏற வழி

ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்
ஞானத்திரியைக் கொளுவி அதனுட்புக்கு
ஊனை இருளற நோக்கும் ஒருவர்க்கு
வானகம் ஏறவழி எளிதாமே

- திருமந்திரம் 2316

Aanaigal ainthum adakki arivennum
Gnanaththiriyaik koluvi athanutpukku
Oonai irulara nokkum oruvarkku
Vanagam earavazhi elithame

- Tirumantiram 2316

By controlling five elements with the help of clear wisdom, one could penetrate oneself by meditation. It is the ascending path to see the glory light where the Almighty resides.

தெளிவான ஞான உதவியுடன், உணர்வு, ஓசை, தசை, ஒளி, நுகர்வு ஆகிய ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி, உள்நோக்கி தியானிக்கும் ஒருவருக்கு வானகம் ஏற வழி எளிதாகும்.



Dreams come true

1.10 பிரணவ கூபத்திலாடும் பெரிய பிரான்

துரியங் கடந்து துரியா தீதத்தே
அரிய வியோகங் கொண்டு அம்பலத்தாடும்
பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே
துரிய வல்லார்க்குத் துரிசில்லை தானே

- திருமந்திரம் 2454

Duriyam kadanthu Duriyaa theethathey
Ariya viyogam kondu ambalatthadum
Periya piranaip pranavak koopathey
Duriya vallarku thurisillai thane

- Tirumantiram 2454

Here Tirumular motivates yoga-practitioners to cross from crown-chakra thru astral-travel to Duriyatheetham where the Almighty is in the form of Black hole in the Universe. If we reach the black hole, we ever enjoy the bliss core.

எழுகின்ற எண்ணங்களை யோக சாதனையில் சீரமைத்து, அவ்வெண்ணத்தை துரியம் எனும் தலை உச்சியில் குவித்து; துரியாதீதம் எனும் பிரணவ கூபத்தில் ஆடும் பெரிய பிரானை அணுக வல்லார்க்கு ஆனந்தம்தானே.

Invisible Pillar pyramid cap

1.11 கலந்து நிற்கும் எம்மிறை

காலினில் ஊரும் கரும்பினிற் கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்
பூவினுள் நாற்றமும் போலுளன் எம்மிறை
காவலன் எங்கும் கலந்து நின்றானே

- திருமந்திரம் 2639

Kaalinil voorum karumpinir kattiyum
Paalinul neiyyum pazhathul irathamum
Poovinul naatramum polulan emmirai
Kaavalan engum kalanthu ninraane

- Tirumantiram 2639

There are so many invisible Pillar pyramid caps in this world and they control every function of human beings, animals and living creations.

பூமியில் வாழும் உயிரினங்கள், சந்திர சூரியர் மற்றும் இதர கோள்கள், அண்ட பேரண்டத்தில் உலவும் பிற நட்சத்திரக் கூட்டங்கள் யாவற்றையும் உயிர்வித்து அவற்றை இயக்குபவனாய் எம்மிறை, எவருக்கும் புலப்படாத பிரமிட் கேப் என்னும், கருவிகளை ஆங்காங்கு அமைத்துள்ளான். அனைத்து இயக்கங்கள், நுகர் பொருட்கள் எல்லாவற்றிலும் கலந்து நிற்கிறான்.



R & D lab of human creation

1.12 ஆன்மாக்களின் உறைவிடம்

மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினின் முப்பத்தாறு முதிப்புள
மூன்றினுள்ளே முளைத்தெழும் சோதியைக்
காண்டலுங் காயக் கணக்கற்ற வாறே

- திருமந்திரம் 2479



Moonrula maaligai moovar iruppidam
Moonrinin muppatharu muthipula
Moonrinulle mulaithezhum sothiyaik
Kaandalung kayak kanakatra vare

- Tirumantiram 2479

Giza Pyramids are the place for human creation, research and development lab, with bottom of Pyramid

ஆன்மாக்களின் உறைவிடம் GIZA பிரமிடுதான். ஆன்மாக்கள் மூன்று வகைப்படும் அவை: விஞ்ஞானகலர், பிரளயகலர், சகலர். இந்த மூன்று வகை ஆத்மாக்களும் தன்னுள்ளே முளைத்தெழும் சிவசோதியை தரிசிக்க முயற்சிக்கும். அதில் வெற்றிபெறும் ஆத்மாக்கள் இறையுடன் கலக்கும். அதற்கு வேறு பிறவி கிடையாது. சிவசோதியை காண முடியாத ஆத்மாக்கள் மாயை, கர்ம மாயை, பிரகிருதி மாயை ஆகியவற்றினால் உடல்களைப் பெற்று பூமியில் மீண்டும் பிறக்கும்.



Lamps in Orion / Belt stars

1.13 சர்வ வல்லமை கொண்ட இறையின் இருப்பிடம்

திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சள் நரிக்குட்டி நாலு
வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைகள் ஐந்து
பகைக்கின்ற நெஞ்சுக்கு பால் இரண்டு ஆமே

- திருமந்திரம் 2214

Thigaikinra sinthaiyul singangal moonru
Nagaikinra nenjul narikutti naalu
Vagaikinra nenjinul aanaigal ainthu
Pagaikinra nenjukku pal iranduaame

- Tirumantiram 2214

Tirumular allegorically denotes in this hymn that the Orion constellation has the belt stars and that is the abode of Omnipotent.

ஓரியன் நட்சத்திரக் கூட்டத்திற்கும் இப்பாடலுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. மூன்று சிங்கங்கள் என்று இங்கே குறிப்பிடப்படுவது பெல்ட் ஸ்டார் (Belt stars) எனப்படும் இடைவார் நட்சத்திரங்களே. நரிக்குட்டி நாலு என்பது தி நவாதிரை உட்பட நான்கு காவல் நட்சத்திரங்கள். இது சர்வவல்லமை கொண்ட இறையின் இருப்பிடம்.

Star gate

1.14 வானவர் தொடர்பு

தத்துவம் எங்குண்டு தத்துவன் அங்குண்டு
தத்துவம் எங்கில்லை தத்துவன் அங்கில்லை
தத்துவ ஞானத்தின் தன்மையை அறிந்தபின்
தத்துவன் அங்கே தலைப்படுந் தானே

- திருமந்திரம் 2817

Thathuvam engundu thathuvan angundu
Thathuvam engillai thathuvan angillai
Thathuva gnanathin tanmayai arinthapin
Thathuvan ange thalaipadum thane

- Tirumantiram 2817

Star gate is the threshold point to enter other galaxy, aliens' path.

இறைஞானம் உள்ளவரிடம் இறைவன் இருப்பான். இறைஞானம் இல்லாதவரிடம் இறைவன் இருப்பதில்லை. இறைஞான உபதேசம் பெற்ற பின், இறைஞானியான வானவன் (Alien) காட்சி தருவான்.



Alien craft

1.15 வேற்றுலகவாசிகளின் வானூர்தி

ஏரொளி உள்எழு தாமரை நாலிதல்
ஏரொளி விந்துவினால் எழுநாதமாம்
ஏரொளி அக்கலை எங்கும் நிறைந்தபின்
ஏரொளிச் சக்கர அந்நடு வன்னியே

- திருமந்திரம் 1255



Eroli ulezhu thamarai naalithazh
Eroli vinthuvinal ezhunaathamam
Eroli akkalai yengum nirainthapin
Erolich chakkara annadu vanniye

- Tirumantiram 1255

In this Tirumantira hymn, Tirumular declares that human vertical spinal cord is the cosmic gift. But here carved art is the alien craft received as cosmic picture by this author, while he was in transcendental meditative mood.

Because of this spinal cord human being gets micro-macro link possible.

இப்பாடலில் எம்ஆர்ஐ திருமூலம் கூறும் பொதுநிதி மனிதனின் நேர்நடு முதுகுத் தண்டுவடம் அவனுக்கு இயற்கை கொடுத்த பெரும் கொடை. அதன் மூலம்தான் அவனது பரவெளிப் பயணமே உள்ளது. தியானத்தின்போது இந்நூலாசிரியருக்குக் கிடைத்த வேற்றுலகவாசிகளின் வானூர்தி இது (Alien craft).

Chapter 2

AKASHIC RECORD

ஆகாயப் பேரேடு



The book of Enoch

2.1 ஆகாயப் பேரோடு

கற்ற பசுக்கள் கதறித் திரியினும்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினும்
முற்ற பசுக்கள் ஒருகுடம் பால்போலும்
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே

- திருமந்திரம் 2015

Katra pasukkal kathari thiriyinum
Kotrapasukkal Kurikatti meyinum
Mutrapasukkal orukudam paalpolum
Matraip pasukkal varalpasu thane

- Tirumantiram 2015

Learned men always tom tom themselves They always influence people to get feelingof importance.

But matured people in mouna are the cosmic receivers. Others are food for Maaya, no use to human kind

நம்மில் பலர் தங்களுடைய ஏட்டுக் கல்வித்தான்பேரியது என்ற நினைப்பில் தான்தான் உயர்ந்தவன்!ள் என்கிற ஆணவத்துடன் திரிவர். இன்னும் சிலர் அதிகப் ஆதுமையோடு குறிகட்டி மேய்வர். ஆனால் இவர்களை மேய்ச்சலில் வறட்டுப் பசுக்கள் என்கிறார் திருமூலர். கற்றறிந்த நல்ஆன்மாக்களை மட்டுமே பால் சுரக்கும் முற்றபசுக்கள் என்கிறார்.

இங்கே இந்தப் படம் குறிகாட்டும் பொருள் அந்த ஆகாயப்பேரோட்டில் இருக்கும் அறிவே உயர் அறிவு. அதை கற்க வி நயம் சீலங்களே மேம்படுக்கள்.

Akashic records

2.2 எழுதாத புத்தகமே - அது ஆகாயப் பேரேடு

எழுதாத புத்தகத் தேட்டின் பொருளைத்
தெருளாத கன்னி தெளிந்திருந்து ஓத
மலராத மோட்டின் மணத்தின் மதுவை
பிறவாத வண்டு மணமுண்டவாறே

- திருமந்திரம் 2885

Ezhuthatha putthagath thettin porulai
Therulatha kanni thelinthirunthu ootha
Malaratha mottin manathin mathuvai
Piravatha vandu manamundavare

- Tirumantiram 2885

In our Universe, the Aakashic records have stored all happening moments of past, present and future events. Yoga-meditative practitioner can read and receive some data from there in deep samadhi state, like a human satelite earth station.

எழுதாத புத்தகமான ஆகாயப் பேரேட்டில் இந்தப் பிரபஞ்சத்தின் நிகழ்வுகள்யாவும் பதிவாகியிருக்கிறது. இதையே ஞானிகளும் தவிர்ச்சித்தர்களும் அவர்களது தலையிணையால் தியானித்து ஆழ்நிலையில் உள்வாங்கி, மனவோவைச் சுவடியில் பதிந்து வைத்துள்ளனர். இந்த ஆகாயப் பேரேட்டுப் பதிவுகளை சாதாரணமாக எல்லோராலும் வாசிக்க இயலாது. யாரொருவர் யோக சாதனையின் துணையோடு சிவனுபவத்தை உணர்ந்து அப்பாதையில் பயணிக்கின்றாரோ, அவர்களது சிந்தனை இந்த ஆகாயப் பேரேட்டுப் பதிவுகள் சிலவற்றைப் பெறக்கூடும்.

The Holy book

2.3 யாரிக்கதேவின்மை பாவிப்பதற்கு

காட்டும் குறியும் கடந்த அக்காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத்து என்பயன்
கூட்டும் குருநந்தி கூட்டிடின் அல்லது
ஆட்டின் கழுத்தில் அதர் கிடந்தற்றே

- திருமந்திரம் 2937

Kaatum kuriyum kadantha akkaranam
Eetin purathil ezhuthivaithu enpayan
Koottum Gurunanthi kootitin allathu
Aattin kazhuthil athar kidarnthtare

- Tirumantiram 2937

Akashic record is the only book to be read by enlightened yogis and the people who are in the spiritual path.

உயிருணர்வின் துணையினால் பரம்பொருளைப் பற்றிய அறிவை, ஆகாயப் பதிவேட்டிலிருந்து கற்காமல்; பக்தி இலக்கிய நூல்களை வருந்திக் கற்பது, ஆட்டின் கழுத்தில் தொங்கும் தேவையற்ற மடிக்காம்பில் பால் கறப்பது போலாகும்.

Lord the creator

2.4 கண்ணுதல் நந்தி

எட்டுத் திசையும் எரிகின்ற காற்றொடு
வட்டத் திரையனல் மாநிலம் ஆகாயம்,
ஒட்டி உயிர்நிலை என்னும்இக் காயப்பை
கட்டி அவிழ்க்கின்ற கண்ணுதல் காணுமே.

- தி.மந்திரம் 441

Ettuth thisaiyum erikinra kaatrodu
Vattath thiraiyanal, maanilam, aagayam
Otti uyirnilai ennumik kayappai
Katti avilkkinra kannuthal kaanume

- Tirumantiram 441

God creates all living creatures with five fundamental elements and finally destroys everything HE has created, makes them dilute with the fundamental elements.

பஞ்ச பூதங்களினால் உயிரினங்களைப் படைத்துப் பின்னர், அப்பூதங்களைப் பிரித்து, உயிரினங்களை அழித்து, அப்பஞ்சபூதத்தில் கலக்கவிடுகிறார். இது இறைவனின் செயல்பாடே.

Aathma jothi

2.5 ஓடி நீங்கா ஒருவன்

உள்ளத்து ஒருவனை உள் உறு சோதியை
உள்ளம் விட்டு ஓடி நீங்கா ஒருவனை
உள்ளமும் தானும் உடனே இருக்கினும்
உள்ளம் அவனை உரு அறியாதே.

- தி.மந்திரம் 431

Ullatthu oruvanai uloru sothiyai
Ullam vittu oradi neenga oruvanai
Ullamum thanum udane irukkinum
Ullam avanai uru ariyathey

- Tirumantiram 431

Aathma resides in human body like a bright holy light and always guides through inner voice. The luminous aathma represents the creator, which always is within us, inseparable. But mind never knows about this secrecy.

உள்ளம் விட்டு ஓடி நீங்காமல், உள்ளத்தின் உள்ளே சோதி வடிவில் விளங்கும் ஆன்மாவாகிய இறைவனை மனம் அறியாதது மட்டுமல்லாமல், அந்த ஆன்மாவின் உருவத்தையும் மனம் அறியாது.



Spiders and the Almighty

2.6 சிலந்தியும் இறைவனும்

மத்திமம் ஒத்த சிலந்தி வலை: அத்துள்
ஒத்து அங்கு இருந்து, அங்கு உயிர் உண்ணுமாறு போல்
அத்தனும் ஐம்பொறி ஆடு, அகத்துள் நின்று
சத்தம் முதல் ஐந்தும் தான் உண்ணுமாறே

- திருமந்திரம் 2170

Matthimam ottha silanthi valai: atthul
Otthu angu irunthu angu uyir unnumaaru pol
Atthanum aimpori aadu, agathul ninru
Sattham muthal ainthum than unnummare

- Tirumantiram 2170

The spider, which lives in the middle of the web, catches and eats small insects around the web. Similarly, a man experiences all sensual pleasures. These pleasures also felt by the Almighty who resides in the man.

வலையைப் பின்னி அதன் மத்தியில் குடியிருக்கும் சிலந்தியானது, வலையில் சிக்கும் சிறு பூச்சிகளை உணவாக உட்கொள்ளும். அதுபோல மனிதன் ஐம்புலன்களின் மூலமாக நுகரும் அனுபவத்தை, அவனது உடலில் தங்கியிருக்கும் இறைவனும் உணர்கிறார்.



Cosmic energy

2.7 பிரபஞ்ச சக்தி

ஆதி நடம்செய்தான் என்பர்கள் ஆதர்கள்
ஆதி நடம் செய்கை ஆரும் அறிகிலர்
ஆதி நடமாடல் ஆரும் அறிந்தபின்
ஆதி நடமாடல் ஆம் அருட்சக்தியே

- திருமந்திரம் 2787

Aathi nadamseithan enbargal aathargal
Aathi nadam seigai aarum arikilar
Aathinadamadal aarum arinthapin
Aathi nadamadal Aam arutsakthiye

- Tirumantiram 2787

Nobody knows the secrecy of universal functions. If anyone realizes the core of the function, he can understand the cosmic energy, called SAKTHI that exists within everyone

பிரபஞ்ச இயக்க ரகசியத்தைப் பற்றி யாரும் அறியமாட்டார்கள். அதனை அவர்கள் அறிந்த பிறகு அருட்சக்தியே பிரபஞ்ச இயக்கம் என்று உணர்வார்கள்.

Blissful dance

2.8 அற்புதக் கூத்து

புரிந்து அவன் ஆடின் புவனங்கள் ஆடும்
தெரிந்து அவன் ஆடும் அளவு எங்கள் சிந்தை
புரிந்து அவன் ஆடின் பல்பூதங்கள் ஆடும்
எரிந்து அவன் ஆடல்கண்டு இன்புற்றவாறே

- தி நாலந்திரம் 2786

Purinthu avan aadin puvanangal aadum
Therinthu avan aadum alavu engal sinthai
Purinthu avan aadin palpoothangal aadum
Erinthu avan aadal kandu inputravaare

- Tirumantiram 2786

The movement of the Universe is vital dance. The knowledge about Universe is limited and subject to human thinking. But the fifth element, SKY, has thousands of unknown elements. The ultimate divine dance of God is like the gentle movement of flame in a lamp and will be blissful to those whoever see the cosmic dance.

பிரபஞ்ச இயக்கமே இறை நடனம். இறை நடனத்தின் அளவு எங்கள் சிந்தைக்கு உட்பட்டது. இறை நடனத்தினுள் ஐம்பூதங்களைத் தாண்டி பல்லாயிரம் பூதங்கள் ஆடுகின்றன. இறைவனின் நடனமென்பது சோதி வடிவில் இறைவன் அசைவதாகும். அந்த ஆடல் பேரின்பத்தை நல்கும்.

Universe and five elements

2.9 பஞ்ச பூதங்களும்

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதல் பூதமே

- திருமந்திரம் 2290

Marathai maraithatu maamatha yaanai
Marathin marainthatu maamatha yaanai
Parathai maraithatu paarmuthal pootham
Parathin marainthatu paarmuthal poothame

- Tirumantiram 2290

When we see a wooden elephant toy, the tree disappears. But before making the toy, it was a living tree, no elephant toy. Universe is made up of five fundamental elements. When we look out the fundamental elements, the Universe disappears.

மரத்தால் செய்யப்பட்ட யானை பொம்மையைப் பார்க்கும்போது, அதனுள் பொதிந்திருக்கும் மரம் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை; அதுபோல அது மரமாக இருந்த போது, இந்த யானை வெளிவந்ததில்லை. பஞ்சபூதங்களாகிய இப்பரத்தை நோக்கும்போது பார்ப்பவரின் கண்களுக்குத் தெரிவதில்லை. பார்ப்பவரை மெய்யுணர்வால் உணர்ந்தவருக்கு பஞ்சபூதங்கள் தோன்றாது.



ω

Aathma's journey into Paramaathma

2.10 ஆத்மா பரமாத்மாவுடன் கலத்தல்

புரையற்ற பாலினுள் நெய் கலந்தாற்போல்
திரையற்ற சிந்தையுள் ஆரியன் செப்பும்
உரையற்று உணர்வோர் உடம்பு இங்கு ஒழிந்தால்
கரையற்றசோதி கலந்த சத்து ஆமே

- திருமந்திரம் 134

Puraiyatra paalinul nei kalantharpol
Thiraiyatra sinthaiyul aariyan seppum
Uraiyatru unarvor udampu ingu ozhinthaal
Karaiyatra sothi kalantha satthu aame

- Tirumantiram 134

Here Tirumular points out that when one who is in the state of Samadhi, he receives the cosmic invitation to travel into the kingdom of God. Then the Aathma of the receiver leaves his body behind and starts the holy astral travel to join with Paramaathma, the cosmic Light in the Orion constellation.

மாசற்ற பாலில் நெய் கலந்து நிற்பது போல; சமாதி நிலையில் இருக்கும் சாதகரின் அந்தராத்மாவிற்கு இறைவனிடமிருந்து அழைப்பு வந்தவுடன் உடம்பை உகுத்து, அந்த கரையற்ற சோதியாகிய பரமாத்மாவை அடைய உடலற்ற ஆத்மா பயணிக்கிறது என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.

Cosmic communications

2.11 சமாதி நிலை

செயலற்று இருக்கச் சிவானந்தம் ஆகும்
செயலற்று இருப்பார் சிவயோகம் தேடார்
செயலற்றுஇருப்பார் செகத்தோடும் கூடார்
செயலற்று இருப்பார்க்கே செய்தி உண்டாமே

- திருமந்திரம் 2319

Seyalatru irukkach sivanantham aagum
Seyalatru iruppar sivayogam thedaar
Seyalatru iruppaar segathodum koodaar
Seyalatru irupparkke seithi undaame

- Tirumantiram 2319

If yoga practitioner properly attains the state of samadhi, he will receive the cosmic communications.

அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பர். பிரபஞ்சத்தில் இயக்கங்கள் யாவும் முன்னமே தீர்மானம் செய்யப்பட்டவை. இக்கருத்தை உணராதவர்கள், செயல்கள் பல செய்து அங்கும் இங்கும் அலைவர். அவ்வாறு இல்லாது செயலற்று இருக்கும் யோக சாதனையாளர்களுக்கு, பிரபஞ்சத்திலிருந்து செய்திகள் வந்துசேரும்.

The secrecy of child birth

2.12 கர்ப்பக் கிரியை ரகசியம்

விழுந்தது லிங்கம் விரிந்தது யோனி
ஒழிந்த முதல்ஐந்தும் ஈரைந்தொ டேறிப்
பொழிந்த புனல்பூதம் போற்றும் கரணம்
ஒழிந்த நுதல்உச்சி உள்ளே ஒளித்ததே

- தி.நூ.எண்: 455

Vizhunthathu lingam virinthathu yoni
Ozhintha muthalainthum eeraintho derip
Pozhintha punalpootham potrum karanam
Ozhinth nuthalucchi ulle olithathey

- Tirumantiram 455

Men and women enjoy the copulation during which the semen secregate with processing bio-molecules. The semen entering womb connects the inner link of pituitary (brow chakra) and pineal gland (crown chakra) of couple. Tirumular talks about some secrecy of one's life

ஆண் பெண் கலவியின் போது முக்கியப் பங்காற்றும் தத்துவங்கள், பஞ்சபூதங்கள், ஞானேந்திரியமாகிய ஐம்புலன்கள், கன்மேந்திரியமாகிய ஐந்தொழில்கள் மூலம் சக்கிலம் வெளிவருகிறது. அது தன்மாத்திரையாகிய சுவை, ஒளி, ஊறு, ஒலி, நாற்றம் ஆகியவற்றுடன் மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகிய கரணங்களுடன் பூரு வாத்தியிலும் உச்சிக்கண்ணிலும் பொருந்தி கருப்பக் கிரியை நடத்துகிறது.


Chapter 3

CONSCIOUSNESS

உயிருணர்வு



Cosmic potter

3.1 கமழ்கின்ற நந்தி

காயக் குழப்பனைக் காய நன்னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்துளே எங்கும் தேடித் திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறியாரே

- திருமந்திரம் 2071 / 2550



Kayak kuzhappanaik kaaya nannadanai
Kayathi nulle kamalginra nanthiyait
Theyathule engum thedi thirivargal
Kayathul ninra karuthariyaare

- Tirumantiram 2071 / 2550

Here Tirumular questions us why we wander around the world while the cosmic potter resides within the pot with overflowing aroma. The pot here resembles our body and the potter is the creator, treasure within us.

அந்தப் பரம்பொருளின் சிறுதுகள் (God's particle) நமது உடம்புக்குள்ளே கமழ்கின்ற நந்தியாக உள்ளது. அதை அறிந்து அணுகாமல் மக்கள்எல் உலகெங்கும் தேடித் திரிகிறார்கள் என்று திருமூலர் வினவுகிறார்.

Breath

3.2 மூச்சே நந்தி / மனமே கடவுள்

கண்டறிவார் இல்லைக் காயத்தின் நந்தியை
எண்டிசை யோரும் இறைவன் என்று ஏத்துவர்
அண்டங்கடந்த அளவிலா ஆனந்தத்
தொண்டர் முகந்த துறையறி யோமே

- திருமந்திரம் 2942

Kandarivaar illaik kayathin nanthiyai
Endisai yorum iraivan enru eathuvar
Andangkadantha alavilaa ananthath
Thondar mugantha thuraiyari yome

- Tirumantiram 2942

Breath is the only the driving force that makes us live and reach the inner bliss.

இந்த உடம்புக்குள்ளே இருக்கின்ற நந்தியை; அந்த அளவில்லா ஆனந்தத்தை இறைவன் என்று உணர நம் சுவாசமே உறுதுணை புரிகிறது.

Oneness

3.3 அவனும் நானும்

ஆறிட்ட நுண்மணல் ஆறே சுமவாதே
கூறிட்டுக் கொண்டு சுமந்தறிவார் இல்லை
நீறிட்ட மேனி நிமிர்சடை நந்தியைப்
பேறிட்டு என் உள்ளம் பிரியகி லாவே

- திருமந்திரம் 2849

Aaritta nunmanal aare sumavathey
Koorittuk kondusumantharivaarillai
Neerittameninimirsadainanthiyaip
Peruittu enullam piriyagi laave

- Tirumantiram 2849

There is no duality like creation and creator, but oneness only is within us

நான்தான் அவன்; அவன்தான் நான். பெயரிட்டு அவனை என்னால் பிரிக்க முடியவில்லை என்கிறார் திருமூலர்.



Ark of the Covenant

3.4 ஐம்பூத நிலை பெற்ற நந்தியை

மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள் கொண்டு ஆரும் திறந்து அறிவாரில்லைப்
பொய்த்தாள் இடும்பையைப் பொய்யறநீ விட்டங்கு
ஐய்த்தாள் திறக்கில் அரும்பேறு தாமே

- திருமந்திரம் 2605

Meitthal agampadi meviya nanthiyai
Kaitthal kondu aarum thirantu arivarillai
Poitthal idumpayaip poyyara neevittangu
Aitthal thirakkil arumpera thaame

- Tirumantiram 2605

The five consciousnesses in one human body are the physical consciousness, pranic consciousness, mind consciousness, knowledge consciousness, and spiritual consciousness. One should fine tune his nanthi by crossing all these five consciousnesses.

அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்கிற ஐந்து நிலை கடந்து உள்ளுக்குள்ளே உள்ளார் நந்தி. அகம்படி மேவிய நந்தியை தவத்தால் சென்று பார் என்று நம் ஆசான் திருமூலர் நம்மை ஊக்கப்படுத்துகிறார்.

Who is Guru?

3.5 தெளிவு குருவின் சிந்தித்தல்தானே

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே

- திருமந்திரம் 139

Thelivu Guruvin thirumeni kaandal
Thelivu Guruvin thirunaamam seppal
Thelivu Guruvin thiruvaarthai kettal
Thelivu Guruvuru sinthitthal thaane

- Tirumantiram 139

Nobody gets knowledge or enlightenment by chanting master's name, or by rituals, but wisdom or consciousness always guides one in the path of Meditation, Micro-macro link.

தெளிவு பெறவேண்டுமானால் யாரோ ஒருவரை குருவாக ஏற்றுக்கொண்டு அவர் மேனியைப் பார்ப்பதாலும், அவர் பெயரைச் சொல்வதாலும், அவர் கூற்றைக் கேட்பதாலும் தெளிவு கிடைக்காது என்பதனை உள் அர்த்தமாகக் கொண்டு இப்பாடல் எழுதப்பட்டுள்ளது.

புறக் கண்களுக்குத் தெரியும் மனிதர்களை ஒரு வகையில் குருவாக முடியாது என்பதை ஆசுவாசுக் கொண்டிருக்கிறார். எனவேதான் "தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே" என்று சிந்தனை செய்வதன் மூலம் குருவை தொடர்பு கொள்ளுங்கள் என்று திருமூலர் அறிவுறுத்தியுள்ளார். மனிதனின் உடலில் மொத்தம் ஐந்துவிதமான அடங்கியுள்ளன அவை உடல், உயிர், மனம், அறிவு, ஆன்மா ஆகியவை. உடலைத் தவிர மற்ற நான்கும் கண்களுக்குப் புலப்படாது. அவை மெய்ஞானியால் உணரப்படுபவை.

ஆன்மாவை குருவாக அமைத்து நம்முடைய அது பற்றி முதுகுத் தண்டு நேராக நிமிர உட்கார்ந்து (by sitting vertical spinal cord posture as Micro-macro link) நம்மை சிந்திக்கச் சொல்கிறார்.

God is the Guru

3.6 [illegible]

கருடன் உருவங் கருதும் அளவிற்
பருவிடந் தீர்ந்து பயங்கெடு மாபோல்
குருவின் உருவங் குறித்தஅப் போதே
திரிமலந் தீர்ந்து சிவன்அவன் ஆமே

- திருமந்திரம் 2659

Garudan uruvam karuthum alavir
Paruvidang theernthu payangedu maapol
Guruvin uruvang kurithaap pothey
Thirimalam theernthu sivanavan aame

- Tirumantiram 2659

When snake bites one man, the mind of the bitten person gets fear on death. This is the mind-process that makes turbulence and biological change. The poison enters all blood vessels immediately of the man. But here Tirumular indicates in this Tirumantira hymn that strong will power will change such fear of the bitten person by thinking about the Garuda to get rid of poison. Likewise, spiritual seeker thinking of God as Guru, the evils of ego, karmic effect, Maaya, all vanish, and he will become the state of SIVA.

ஒருவனை பாம்பு கடித்தவுடன் பாம்பின் விசம் உடலெங்கும் பரவி, அதனால் இறந்து போய்விடுவோம் என்கிற உயிரச்சம் உண்டாகும். அப்போது மனதளவில் கருடனை நினைத்தாலே போதும் பாம்பின் விசம் உடம்பிலிருந்து நீங்கிவிடும் என்கிற மனோசக்தியின் சூட்சம உண்மையை திருமூலர் வெளிப்படுத்துகிறார். அதுபோல மும்மலங்களால் பாதிக்கப் பட்ட சாதகன், தன்னுடைய குருவாகிய இறைவனை நினைக்கும்பொழுதே மும்மலங்களும் தீர்ந்து, சிவனைப்போல ஆகிவிடுவான் என்கிறார்.



Athmic journey

3.7 ஆன்மாவின் பயணம்

உடலும் உயிரும் ஒழிவு அற ஒன்றின்
படரும் சிவசக்தி தானே பரமாம்
உடலைவிட்டு இந்த உயிர் எங்கும் ஆகிக்
கடையும் தலையும் கரக்கும் சிவத்தே

- திருமந்திரம் 2588

Udalum uyirum ozhivu ara onrin
Padarum sivasakthi thane paramaam
Udalaivittu intha uyir engum aagi
Kadaiyum thalaiyum karakkum Sivatthey

- Tirumantiram 2588

The body with Jiva grows in this earth, consumes all kinds of material fruitful and experiences pleasures and sorrows. At last the Jiva leaves its body behind and merge with Universe, Parasivam

உடலும் உயிரும் ஒன்றையொன்று தழுவி இப்பூவுலகில் பிறந்து சகலவித இன்ப துன்பங்களை நுகரும். பின்னர் உயிரானது தான் பகுந்திருந்த உடலைவிட்டு நீங்கி, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சிவத்துள் கலக்கும்.



Creation of the planet earth

3.8 புவனம் படைப்பார் ஒருவன் ஒருத்தி

புவனம் படைப்பார் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை ஆயன்
புவனம் படைப்பான் அப்புண்ணியன் தானே

- திருமந்திரம் 386

Puvanam padaippar oruvan oruthi
Puvanam padaipparkku putthirar aivar
Puvanam padaippanum poomisai aayan
Puvanam padaippan appunniyan thane

- Tirumantiram 386

The combination of SHIVA and SAKTHI created the planet Earth with the help of 5 fundamental elements, earth, water, fire, air and space.

இந்த உலகை படைத்தது சிவனும் சக்தியும் கலந்த கூட்டுப்பொருளாகும். அந்தச் செயலுக்கு உறுதுணையாய் இருந்தவை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்சபூத தத்துவங்களாகும்.



The very primordial sound

3.9 ஓங்கார சீவன் பரசிவன்

ஓங்காரத்துள்ளே உதித்த ஐம்பூதங்கள்
ஓங்காரத்துள்ளே உதித்த சராசரம்
ஓங்கார அதீதத்து உயிர் மூன்றும் உற்றன
ஓங்கார சீவன் பரசிவன் ரூபமே

- திருமந்திரம் 2677



Ongarathulle uthithaa aimpoothangal
Ongarathulle uthitha saraasaram
Ongara athethathu uyir moonrum utrana
Ongara seevan parasivan roopame

- Tirumantiram 2677

The very Primordial sound "OM" created five fundamental big elements from which SIVA appeared.

பிரபஞ்ச சுழற்சியின் தொகுப்பான ஆதி ஓங்கார நாதத்தில் உதித்த பஞ்சபூதங்கள், சராசரம், அகர உகர மகாரம். அதிலிருந்து தோன்றிய சீவனே, ஆதிசிவன்.



Saayapurusha darishanam

3.10 சாயாபுருட தரிசனம்

அழிகின்ற சாயா புருடனைப் போல,
கழிகின்ற நீரில் குமிழியை; காணில்
எழுகின்ற தீயில் கற்பூரத்தை ஒக்கப்
பொழிகின்றது இவ்வுடல் போம் அப்பரத்தே

- திருமந்திரம் 2587



Azhiginra saaya purudanaip pola
Kazhikinra neeril kumililai kaanil
Ezhuginra theeyil karpoorathai okkap
Pozhikinrathu ivvudal pom apparathey

- Tirumantiram 2587

In the daylight of the young morning, the sun shines our image in their long shadow on the earth, and after a few seconds, it appears in the airspace of our image is called "Saaya Purusha darishanam". In the running water bubbles appear very few seconds. Camphor emits flame very few seconds. Similarly, after death, human body will be diluted in the Universe at once.

இளம் காலைப்பொழுதின் சூரிய வெளிச்சத்தில் பூமியில் தோன்றும் தத்தமது நீண்ட நிழலினைப் பார்த்து, அதனை உள்வாங்கி பின்னர் சில வினாடிகள் வாண்மையில் தோன்றும் நம் உருவத்தை 'சாயாபுருட தரிசனம்' என்பார்கள். அதைப்போல நீரில் சில நொடிகளில் தோன்றி மறையும் நீர்க்குமிழிகளைப் போலவும், கற்பூரத்தில் சில நிமிடம் நின்றெரியும் தீ போலவும், சில காலம் இப்பூமியில் தங்கும் நம்முடல் உடலை விட்டு உயிர் நீங்கியவுடன், சூக்கும உடலானது சில கணங்களில் பரத்தினுள் கலந்துவிடும் என்கிறார் திருமூலர்.

Chapter 4

COSMIC SECRETS

பிரபஞ்ச ரகசியங்கள்

Cosmic eye

4.1 கன்மகாண்டம்



களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே

- திருமந்திரம் 114

Kalimparuth thanengal kannuthal nanthi
Kalimparuth thanarut kanvizhip pithuk
Kalimpanu kaatha kathiroli kaattip
Palingir pavalam pathitthan pathiye

- Tirumantiram 114

Ego, karma, and illusion are the impure sediments and they always pull down one's soul even after his death. Third eyed Nanthi, aathi yogi is the remover of these sediments by shattering and showers his holy light on us to get rid of impurities consecutively, says Tirumoolar.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் மனிதர்களின் ஆன்மாவில் களிம்பு போல ஒட்டிக் கொண்டிருக்கும். இந்த களிம்பை நீக்கவல்லவன் நெற்றியில் கண்ணினை கொண்ட நந்தியாகிய எம்பிரான். களிம்பை நீக்கியபின் மேலும் களிம்புகள் சேராவண்ணம் காக்கவல்ல இறைவனது பேரொளியானது பளிங்கில் பவளம் பதித்தது போல என்னுடன் கலந்து நின்றதுவே என்று உருகுகிறார்.



Cosmic engineer

4.2 பிரபஞ்ச கட்டுமானம்

தன்னினில் தன்னை அறியும் தலைமகன்
தன்னினில் தன்னை அறியத் தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கிலன் ஆகில்
தன்னினில் தன்னையும் சார்தற்கு அரியவே

- திருமந்திரம் 2349

Thanninil thannai ariyum talaimagan
Thanninil thannai ariyath talaippadum
Thanninil thannaich chargilan aagil
Thanninil thannaiyum chartargu ariyave

- Tirumantiram 2349

The supreme power constructs the planetary position, stars, milky ways accurately and monitors their revolving movements, like a cosmic engineer.

பிரபஞ்சத்தின் கோள்கள், நட்சத்திரங்கள், பால்வெளி மண்டலங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், பகுதிகள் அதனதன் ஓடுபாதையில் எவ்வகையில் சுழல வேண்டுமென்பதை தீர்மானித்து, அவை ஒழுங்காக செயல்படுவதைக் கவனித்து மேற்கும் மாபெரும் சக்தியே இந்தப் பிரபஞ்சப் பொறியாளர்.



Five faced cosmic craft

4.3 அஞ்சுக வானூர்தி

நடுவு கிழக்குத்தெற்கு உத்தர மேற்கு
நடுவு படிகநற் குங்கும வண்ணம்
அடைவுள அஞ்சனம் செவ்வரத் தம்பால்
அடியேற் கருளிய முகமிவை அஞ்சே

- தி.மந்திரம் 1735



Naduvu kilakku thergu utthara mergu
Naduvu padiganar kunguma vannam
Adaivula anjanam sevvarth thampal
Adyiyer karuliya mugamivai anje

- Tirumantiram 1735

This five-faced carrier helps yoga-meditation practitioner to cross plane layers as cosmic-craft. It is received by this author in deep meditation which carried him across Universe.

யோக சாதனையாளர்களின் வாகனம், இந்த அஞ்சுமுக வானூர்தி. தியான அகக்காட்சியில் இந்த உரை ஆசிரியருக்குக் கிடைத்த பரிசும் தட்டு. முப்பரப்புகளும் அப்பால் அவரை அழைத்துச் சென்ற அஞ்சு வானூர்தி.



Cosmic Dance / Siva sakthi dance
The function of atom

4.4 பிரபஞ்ச சுழற்சி / திருவம்பல சக்கரம்

இருந்த இவ்வட்டங்கள் ஈராறி ரேகை
இருந்த இரேகைமேல் ஈராறு இருத்தி
இருந்த மனைகளும் ஈராறு பத்தொன்று
இருந்த மனையொன்றில் எய்துவன் தானே

- திருமந்திரம் 914



Irunthaiv vattangal eerari regai
Iruntha eregaimel eeraru iruthi
Iruntha manaigalum eeraru patthu onru
Iruntha manaiyonril eituvanthane

- Tirumantiram 914

This is the Tiruvambala chakra for total Universe circulating; we call it Universal dance, the function of Atom, with negative and positive forces.

பிரபஞ்சத்தின் இயக்கம் நேர்மிறை மற்றும் எதிர்மிறை சக்திகளைக் கொண்டது. இதுதான் மையம். இங்கிருந்துதான் அனைத்து சக்திகளும் உற்பத்தி.

+ சிவம்

X சக்தி

+ பிதா

X அம்மை / அச்சுவேல் அனைத்துவித சுழற்சி.



Movements

4.5 [illegible]

தானே உலகுக்குத் தத்துவனாய் நிற்கும்
தானே உலகுக்குத் தையலுமாய் நிற்கும்
தானே உலகுக்குச் சம்புவுமாய் நிற்கும்
தானே உலகுக்குத் தண்சுடராகுமே

- திருமந்திரம் 1978



Thane ulagukuth tathuvanaai nirgum
Thane ulagukuth taiyalumaai nirgum
Thane ulagukuch sambuvumai nirgum
Thane ulagukuth tansudaragume

- Tirumantiram 1978

Universe is the combination of positive and negative forces, the ultimate result will be a glorious holy light, cosmic pillar which absorbs all particles for a new creation.

சிறுன்றும் ஏர் பின்னுது உலகம். இந்தப் பிரபஞ்சத்தில் அழிவில்லாமல் எதுவுமில்லை.

Cosmic dance (Sakthi)

4.6 உமை காணக்கூத்து

அண்டங்கள் ஏழினுக்கு அப்புறத்து அப்பால்
உண்டென்ற சத்தி சதாசிவத்து உச்சிமேல்
கண்டம் கரியான் கருணை திருவுருக்
கொண்டு அங்குஉமை காணக்கூத்து உகந்தானே

- திருமந்திரம் 2732

Andangal ezhinukku appurathu appaal
Undenrasakthi sathasivathu ucchimel
Kandam kariyan karunai Thiruvuruk
Kondu angu Umai kaanak koothu uganthane

- Tirumantiram 2732

In the Orion constellation, Siva performs the universal dance by witnessing his consort, Sakthi. The same flow happens in every human body at suzhumuna chakra, between Ida & pingala nadis.

திருவாதிரை நட்சத்திரக் கூட்டத்தில் ஒரு ஆட்டம். அது 7 கேலக்ஸி கொண்ட கூட்டம் (Orion). அங்கு உமை காணக் கூத்துநடத்துகிறான். அதுபோல ஒவ்வொரு மனித உடலிலும் சூரியநாடி, சந்திரநாடி இவையிரண்டும் சுழுமுனை நாடியில் கலக்கும் நிகழ்வே உயிராற்றலை வழங்குகிறது.



Future human

4.7 பரமனை கண்டு பற்றினேனே!

நெற்றிக்கு நேரே பருவத்து இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடு மந்திரம்
பற்றுக்குப் பற்றாய்ப் பரமன் இருந்திடம்
சிற்றம் பலமென்று சேர்ந்து கொண்டேனே

- திருமந்திரம் 2770

Netrikku nere puruvathu idaiveli
Utruutrup paarkka olividu manthiram
Patrukkup patraai paraman irunthidam
Sitram palamentru sernthu kondene

- Tirumantiram 2770

Tirumular witnessed the Almighty by using himself as a human spacecraft through deep meditation by using eye brow chakra. He further affirmed that he had found the abode of lord there.

புருவ மத்தியில் ஒளிவிடும் மந்திரத்தை உணர்ந்தேன், சூக்கும ஸரீரியாய் உள்சென்றேன். பரமன் இருப்பிடம் கண்டேன். அதுவே சிற்றம்பலமென்று சேர்ந்து கொண்டேன் என்கிறார் சித்தர் திருமூலர்.



Cosmic function / Siva-sakthi dance

4.8 திருமந்திர உண்மைகள்

அண்டம் எழுகோடி பிண்டம் எழுகோடி
தெண்திசை சூழ்ந்த திசைகள்எழுகோடி
எண்திசை சூழ்ந்த இலிங்கம் எழுகோடி
அண்ட நடஞ் செய்யும் ஆலயம்தானே

- திருமந்திரம் 2773



Andam ezhukodi pindam ezhukodi
Thenthisai soolntha thisaigal ezhukodi
Enthisai soolntha lingam ezhukodi
Andan nadam seyyum aalayam thane

- Tirumantiram 2773

The Universe has infinite varieties of stars, planets, milky ways and galaxies.

All these could be connected with human body and its functions.

இந்த பிரபஞ்சமே ஆலயம். அந்த ஆலயமே நம் உடம்புக்குள் குடிகொண்டுள்ளது.

அண்டத்தில் உள்ளவையாவும் பிண்டத்தில் அடங்கி உள்ளது.



Cosmic suit / Body the Temple

4.9 சித்தம் தெளிந்தது

கோ வணங்கும்படி கோவணமாகிப் பின்
நா வணங்கும்படி நந்தி அருள் செய்தான்
தே வணங்கோம் இனிச்சித்தம் தெளிந்தனம்
போய் வணங்கும் பொருளாயிருந் தோமே

- திருமந்திரம் 2674

Ko vanangumpadi kovanamaagip pin
Naa vanagumpadi Nanthi arul seithaan
Te vanakom inisittham thelinthanam
Poi vanangum porulaairun thome

- Tirumantiram 2674

Sundarananthar was the yogi, transmigrated into dead body of a village cowherd, Mulan and became Tirumular. Then he achieved clairvoyance through his deep meditation and had seen many inner visions and documented them Tirumantiram in Tamil by Nanthi's blessing. So Tirumular here proclaims that human body has all qualities of the entire universe to feel thru tapas.

மூலனின் உடலில் உட்புகுந்ததால் பசுக்கள், எம்மேல் பாசத்தைப் பொழிந்தன. அவர்க்கு அரசெல்லாம் வணங்கும் பெரிய பெருமையினை தந்த நந்தியாகிய எம் இறைவன், என் நா வணங்கும்படி அருள் செய்ததால், திருமந்திரத்தை தமிழில் எழுதத் துணிந்தேன். அதனால் எனது சித்தம் தெளிவடைந்தது. இனிமேல் எந்தவொரு தெய்வத்தையும் வணங்கப் போவதில்லை. எம்முள்ளே இறை இருப்பதை உணர்ந்தோம். பிறரால் வணங்கப்படும் நிலையில் உள்ளோம் என்று திருமூலர் அறிவிக்கிறார்.











God's particles / Cosmic craft
Five faces of all human beings

4.10 தற்பரனின் தனி நடனம்

தெற்கு வடக்குக் கிழக்கு மேற்கு உச்சியில்
அற்புதமானதோர் அஞ்சு முகத்திலும்
ஒப்பில் பேரின்பத்து உபய உபயத்துள்
தற்பரன் நின்று தனிநடம் செய்யுமே

- திருமந்திரம் 2739



Therku vadakku kilakku merkku ucchiyul
Arputha maanathor anju mugathilum
Oppil perinpathu upaya upayathul
Tarparan ninru taninadam seiyyume

- Tirumantiram 2739

Science identified 4 particles in every atom (electron, proton, neutron and quark) but Tirumular deciphers the 5 total particles, remaining one yet to be identified

ஒவ்வொரு அணுவிலும் இறை இயக்கம் ஐவகையாக உள்ளது. அதை அறிவியல் எலெக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான், குவார்க்என நான்காக வரையறை செய்துள்ளது. ஆனால் இன்னும் அறியப்பட வேண்டியது ஒன்றுள்ளது என்பது திருமூலர் கூற்று.

Cosmic drum / Orion constellation

4.11 இறை இருப்பிடம்

காளியோடு ஆடிக் கனகா சலத்தாடிக்
கூளியோடு ஆடிக் குவலயத்தேயாடி
நீடிய நீர் தீ கால் நீள்வான் இடையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே

- திருமந்திரம் 2746

Kaaliyodu aadik kanakasalathadik
Kooliyodu aadik kuvalayatheyadi
Neediya neer thee kaal neelvaan idaiyaadi
Naalura ambala theyadum nathane

- Tirumantiram 2746

Tirumular identifies that Orion constellation is the place of omnipotent

திருமூலர் வானில் காட்டிக்காட்டும் இறை இருப்பிடம் ஓரியன் நட்சத்திரக்கூட்டமே. அது உடுக்கு வடிவில் உள்ளது. அங்கு ஏழு நட்சத்திரங்கள் உள்ளன. அவற்றில் திருவாதிரை நட்சத்திரமே இறை இருப்பிடம் ஆகும்.

Cosmic messenger

4.12 அண்டக் கோளாய்வாளர்கள்

அவனும் அவனும் அவனை அறியார்
அவனை அறியில் அறிவானும் இல்லை
அவனும் அவனும் அவனை அறியில்
அவனும் அவனும் அவனிவன் ஆமே

- திருமந்திரம் 1789



Avanum avanum avanai ariyaar
Avanum ariyil arivanum illai
Avanum avanum avanai ariyil
Avanum avanum avanivan aame

- Tirumantiram 1789

In ancient period, cosmic messengers came to this earth for research purpose as we are now doing in our solar system.

வேற்றுக் கிரகத்தில் என்ன உள்ளது என்பதை அறிவியல் மூலம் மனிதர்கள் ஆராய்ந்தது போல; பல யுகங்களுக்கு முன்னர் ஆராய்ச்சி நோக்கத்தில் இப்பூமண்டலத்திற்கு வந்த வேற்றுலக ஆராய்ச்சியாளர்களே இப்பதவை மனிதர்கள்.



Cosmic bell

4.13 திருமூலரின் ஆத்மாவின் மகிமை

உருவன்றியே நின்று உருவம் புணர்க்கும்
கருவன்றியே நின்று தான் கருவாகும்
அருவன்றியே நின்ற மாயப் பிரானைக்
குருவன்றி யாவர்க்கும் கூட ஒண்ணாதே

- திருமந்திரம் 2840

Uruvanriye ninru uruvam punarkkum
Karuvanriye ninru thaan karuvagum
Aruvanriye ninra mayap piraanaik
Guruvanriye yaavarkkum kooda vonnathey

- Tirumantiram 2840

Tirumular here defines that one can attain the omnipotent thru Aathma (Guru) which resides inside our body.

உருவமில்லாத, கருவுமில்லாத மாயப்பிரானாகிய இறையை நாது உடலினுள் உறைந்திருக்கும் ஆன்மாவாகிய குருவின் துணையின்றி அடைய முடியாதென்பதை மணிவாசகத்துச் சொல்கிறார் திருமூலர்.

Cosmic rhythm

4.14 பிரணாயாமத்தின் மகத்துவம்

சத்தியார் கோயில் இடம்வலம் சாதித்தால்
மத்தியானத்திலே வாத்தியம் கேட்கலாம்
தித்தித்த கூத்தும் சிவனும் வெளிப்படும்
சத்தியம் சொன்னோம் சதாநந்தி ஆணையே

- திருமந்திரம் 730

Satthiyar koyil idamvalam saathithal
Matthiyanathile vaathiyam ketgalam
Thithitha koothum sivanum velippadum
Sathiyam sonnom sathananthi aanaiye

- Tirumantiram 730

One can hear cosmic rhythm through proper pranayamam. The sweet melodies and cosmic dance can be felt through human body, Tirumular affirms it here.

உடம்பாகிய கோயிலில் பிராணயாமம் என்கிற மூச்சுப்பயிற்சி செய்வதன் மூலம் பிரபஞ்சத்தியிலே பிரபஞ்சநாதம் கேட்கலாம் என்று திருமூலர் அறுதியிட்டுக் கூறுகிறார்.



Cosmic pillar / Black hole

4.15 அண்ட கோள்கள் / அண்ட ஜோதி சோதி

பார்த்திடம் எங்கும் பரந்தெழு சோதியை
ஆத்தம தாகவே ஆய்ந்தறிவார் இல்லை
காத்துடல் உள்ளே கருதி இருந்தவர்
மூத்துடல் கோடி யுகங்கண்ட வாறே

- திருமந்திரம் 1042

Paarthidam engum paranthzhu sothiyai
Aathama thagave aaintharivar illai
Kaathudal ulle karuthi irunthavar
Moothudal kodi yugankanda vare

- Tirumantiram 1042

Tamil mystics visualise the Almighty as cosmic pillar (Black Hole) Stars and planets revolving around the cosmic pillar. Science still does many researches on this, but Tirumular meditatively visualised this holy light by sitting under peepal tree at Thiruvavaduthurai, Tamilnadu, many decades back.

பரம்பொருளை மெய்ஞ்ஞானத்தின் மூலம் அறியமுற்பட்ட யோக சாதனையாளர்கள் தமது மனக்கண்ணில் ஆத்மாவை தரிசித்தது; பின்னர் ஆத்ம சாதனை செய்யும்போது அங்கம் தோன்றுகிறது. அங்கம் எனப்படுவது கோடிக்கணக்கான நட்சத்திரக் கூட்டங்களின் ஒளி. அதன் மையம் பற்றியே சுற்றுகின்ற cosmic pillar அல்லது black hole என்று நவீன விஞ்ஞானம் கூறுகிறது. இது போன்ற கோடிக்கணக்கான அதிசயங்களை, கருந்துளைகளை கொண்டது இந்தப் பிரபஞ்சம். மனக்கண்ணில் தோன்றும் கருந்துளையின் மின்னோளி மாபெரும் விண்வெளி அமைந்துள்ளதை உணர்ந்த முன்னோர்களின் ஞானம் பரம்பொருளை தியானத்தோடு இணைத்து விண்வெளித்தினை வர்ணித்து இருக்கிறார்கள்.



Cosmic tunnel / Inside the Sun

4.16 உள்வெளி / அண்ட சிவம் தந்தார்

மேலெறிந்து உள்ளே வெளிசெய்த அப்பொருள்
காலறிந்து உள்ளே கருத்துற்ற செஞ்சுடர்
பாரறிந்து அண்டம் சிறகர நின்றது
நானறிந்து உள்ளே நாடிக் கொண்டேனே

- திருமந்திரம் 1017

Melarinthu ulle veliseitha apporul
Kaalarinthu ulle karuthutra chensudar
Paararinthu andam siragara ninrathu
Naanarinthu ulle nanaadi kondene

- Tirumantiram 1017

Tirumular made a journey into the space through cosmic-tunnel and saw Tiruvambala chakra, found that it is the universal-function.

உடம்பில் ஆகாயத்தில் அனுபவத்தைப் பெறுமாறு செய்த பரம்பொருள்; மூச்சுக்காற்றை தலையுச்சிக்குச் செலுத்தி, உயிருணர்வுக்குப் புலனாகும் அப்பரஞ்சோதி எம் உள்ளத்தில் எழுக கண்டு கொண்டேன் என்கிறார் திருமூலர்.

Almighty

4.17 அத்தன் இவன்

ஒத்த செங்கோலார் உலப்பிலி மாதவர்
எத்தனை ஆயிரம் வீழ்ந்தனர் எண்ணிலி
சித்தர்கள் தேவர்கள் மூவர் பெருமையாய்
அத்தன் இவன் என்றே அன்புருவார்களே

- திருமந்திரம் 1464

Ottha sengolaar ulappili maathavar
Etthanai aayiram veelnthanar ennili
Sitthargal thevargal moovar perumaiyaai
Atthan ivan enre anburuvarkale

- Tirumantiram 1464

Many ancient kings, and rulers lived and perished into ashes. But countless sitthas and saints with clairvoyance still live and love Nanthi, Aathi-Yogi, recharging the Universal energy, the cosmic-dance.

அரசர்க்கு அரசர்கள், மாசில்லாத மாமுனிவர்கள் ஆயிரக்கணக்கில் வாழ்ந்து மடிந்தனர். மேலும் எண்ணிலடங்கா சித்தர்கள் மற்றும் யோகியர்கள் பிரணவ கூபத்தை, அந்தகூத்தப் பிரானை அத்தன் இவனென்று அன்புற்று பெருமையாய் கொண்டாடுகிறார்கள். அதைக் கண்டு இன்புறுகிறார் திருமூலர்.

Cosmic pillar

4.18 கோக்கோயில்

நம்பனை ஆதியை நான்மறை ஓதியைச்
செம்பொனின் உள்ளே திகழ்கின்ற சோதியை
அன்பினை ஆக்கி அருத்தி ஒடுக்கிப் போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டம் இட்டாரே

- திருமந்திரம் 626

Nambanai aathiyai naanmarai oothiyai
Semponin ulle thigalkinra sothiyai
Anbinai aakki arutthi odukkip poik
Komperik kumpittuk koottam ittare

- Tirumantiram 626

The yoga practitioners or truth seekers are in the spiral procession on the cosmic pillar to attain the Siva's kingdom.

யோகநெறியில் சிவஞானம் அடைந்த யோகியர்கள்; சோதிவடிவில் திகழும் இறைவனைக் காண்பதற்கு கருந்துளை (கோள்மிக் பில்லர்) என்று சொல்லப்படும் சிவக்கொம்பினில் ஏறிக் கும்பிட்டுக் கூட்டம் இட்டாரே.



Union with God

4.19 பதி, பசு, பாசம்

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அனாதி
பதியினைச் சென்று அணுகாப்பசு பாசம்
பதி அணுகில், பசு பாசம் நில்லாவே

- திருமந்திரம் 115

Pathi pashu paasam enappagar moonrinil
Pathiyinaip pol pashupaasamanaathi
Pathiyinai senru anugaapashu pasam
Pathi anugil pashu pasam nillave

- Tirumantiram 115

Pathi = God
Pashu = Athma
Paasam = Ego, Karma and Maaya

Aathma, Ego, Karma and Maaya are also eternal like God, the creator. Aathma due to bondage with ego, karma, and maaya cannot reach God alone.

If God feels that the Aathma is worth enough, cleansing happens to get rid of ego, karma, and maaya from aathma. The Aathma conjoins a great link with God.

பதி = இறைவன்
பசு = ஆன்மாக்களாகிய உயிர்
பாசம் = மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை.

அதி அந்தமில்லாதவன் இறைவன். பசுவும், பாசமும் அவ்வாறே. பசுவும், பாசமும் அவை விரும்பியபடி இறைவனாகிய பதியை அடைய முடியாது. கருணைப் பசுவாகிய ஆன்மாவை மும்மலங்களும் பற்றிக் கொண்டிருப்பதேயாகும்.

பதியாகிய இறைவன் விரும்பி அணுகினால், பசுவாகிய ஆன்மாவைப் பற்றியுள்ள மும்மலங்களும் நீங்கிவிடும். பின்னர் பதியாகிய இறைவனோடு பசு இணைந்துவிடும்.

Chapter 5

DELTA

தியான முக்கோணம்

Human body is the real temple

5.1 மனுடம்பே ஆலயம்

உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான் என்று
உடம்பினையான் இருந்து ஓம்புகின்றேனே

- திருமந்திரம் 725

Udampinai munnam izhukenrirunthen
Udampinuk ulle uruporul kanden
Udampule uthaman koilkondan enru
Udampinaiyaan irunthu oompukinrene

- Tirumantiram 725

St Tirumular opines that human body is perishable with all kinds of filthy activities. After self realization he experiences and affirms that the mighty God, (the breath) resides in our body. So, he preserves the holy human body since then.

உடம்பை முன்னம் ஒரு கேவலமான வஸ்து என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவ்வுடம்புக்குள்ளே ஒப்புயர்வற்ற உத்தமனாகிய இறைவன் குடியிருக்கிறான் என்பதை கண்டு கொண்டேன். அதனால் இவ்வுடம்பை நான் பேணிக்காக்கிறேன் என்கிறார் திருமூலர்.



The versatile body

5.2 உடம்பும் அதன் உள்ளடக்க மகிமையும்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே

- திருமந்திரம் 724



Udampaar azhiyil uyiraar azhivar
Thidampa dameignanam seravum maattar
Udampai valarkkum upayam arinthe
Udampai valarthen uyirvalarth thene

- Tirumantiram 724

The human body has invisible subtle elements - life, mind, wisdom and athma (soul). So, preserving human body with yogic methodology will secure all these elements to connect the cosmos, the Param, here Tirumular refers.

உடம்புக்குள்ளே உள்ள உறுபொருள்களான உயிர், மனம், அறிவு, இறை நிலையாகிய ஆன்மா அடங்கியுள்ளது. இந்த உடம்பினைப் பேணுவது அந்தப் பரம்பொருளைப் பேணுவதற்கு சமம்.

Panchakosam

5.3 பஞ்சகோசம்

காயப்பை ஒன்று சரக்கு பலவுள
மாயப்பை ஒன்றுண்டு மற்றுமோர் பையுண்டு
காயப்பைக்கு உள்நின்ற கள்வன் புறப்பட்டால்
மாயப்பை மண்ணா மயங்கிய வாறே

- திருமந்திரம் 2122

Kaayappai onru sarakku palavula
Maayappai onrundu matrmor paiyundu
Kaayaippaiku ulninra kalvan purappattal
Mayappai manna mayangiya vaare

- Tirumantiram 2122

The human body has other four invisible elements, ie, prana, mind, knowledge and Aathma (1+4) When one dies, the mortal body perishes and other four more invisible elements merge with the cosmos (Param).

மனித உடலில் உயிர், மனம், அறிவு, ஆன்மா ஆகிய மற்ற நான்கு கூறுகளும் உள்ளது. ஒருவரின் உயிராகிய இறை நீங்கி விட்டால், உடல் அழிந்து, உயிர், மனம், அறிவு, ஆன்மா ஆகியவை பரத்தில் கலந்துவிடும்.

Preservation of human body and life

5.4 ஜழிக்காலம் வரை உயிருடன் வாழும் வழி

கடைவாசலைக் கட்டிக் காலால் எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயில் கொக்குபோல் வந்து இருப்பார்க்கு
உடையாமல் ஜழி இருக்கலுமாமே

- திருமந்திரம் 591

Kadaivasalaik katti kaalal ezhuppi
Idaivaasal nokki inithul irutthi
Madaivayil kokkupol vanthu irupparkku
Udaiyamal oozhi irukkalu maame

- Tirumantiram 591

When the yoga practitioner properly does the kundalini yoga and pranayama, raising kundalini power upto sushumnanaadi, he can see the divine within and live ever by preserving his own body.

கடைவாசலான எருவாயினை அடைத்து, பிராண வாயுவினால் குண்டலினியாகிய மூலக்கனலினை மேலே ஏற்றி, புருவமத்தியில் கழுமுனை நாடியில் செலுத்தி, உயிருணர்வால் சோதியமாக உள்ள இறைவனைக் காண முயற்சி செய்பவர்கள், உடம்பழியாமல் ஜழிக்காலம் வரை வாழ்வர்.

Mulathar / Base chakra

5.5 மூலாதாரம்

எருவிடும் வாசற்கு இருவிரல் மேலே
கருவிடும் வாசற்கு இருவிரல் கீழே
உருவிடுஞ் சோதியை உள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்து நின் றானே

- திருமந்திரம் 584

Eruvidum vaasargu iruviral mele
Karuvidum vaasargu iruviral keele
Uruvidum sothiyai ulgaval laarkkuk
Karuvidum sothi kalanthu ninraane

- Tirumantiram 584

Here Tirumular exactly points out the Mooiathar chakra is below the naval and above the anus inside human body. There kundalini sakthi core resides as light. If one practises the lighting up the core, practitioner can experience the holy light, world calls it ALMIGHTY.

மூலத்துவாரத்திற்கு இரண்டு விரற்கிடை மேலேயும், விந்து வெளியேறும் வாசலுக்கு இரண்டு விரற்கிடை கீழேயுள்ள பகுதியில் சோதியாய் உறங்கும் குண்டலினி சக்தியை தியானத்தின் மூலமாக நோக்கவல்லார்கட்கு இறைவன் சோதியாய் தோன்ற வல்லான் என்று உடலில் குண்டலினி சக்தி இருப்பிடம் எங்கேயென்று திருமூலர் விளக்குகிறார்.

Refining fundamental elements

5.6 பஞ்சபூத சக்திகரிப்பு

சேர்ந்த கலையஞ்சும் சேரும்மின் குண்டமும்
ஆர்ந்த திசைகளும் அங்கே அமர்ந்திடும்
பாய்ந்த ஐம்பூதமும் பார்க்கின்ற வன்னியைக்
காய்ந்தவர் என்றும் கலந்தவர் தாமே

- திருமந்திரம் 1036

Serntha kalaiyanjum serummin kundamum
Aarntha thisaigalum ange amarnthidum
Paaintha aimpoothamum paarkinra vanniyaik
Kaainthavar enrum kalanthavar thame

- Tirumantiram 1036

The person who does spiritual yoga-meditation with proper inner journey, ie focussing kundalini core to eye brow chakra, feels the great holy fire associated the bio-magnetism of human body and five fundamental elements.

ஜீவகாந்த மின்சுனை யாகிய உடம்பினில் உள்ள பஞ்சபூத அம்சங்களை சக்திகரிக்கும் பொருட்டு; திசையனைத்தும் பாயும் ஒளியாகிய சக்தியை முலாதாரத்தில் காண்பவர் இறைவனோடு கலப்பர்.

Wealth centre

5.7 நெருப்புக்கு முன்னே நீர்

உந்திக் கமலத்து உதித்து எழும் சோதியை
அந்திக்கும் மந்திரம் ஆரும் அறிகிலர்;
அந்திக்கும் மந்திரம் ஆரும் அறிந்தபின்
தந்தைக்கு முன்னே மகன் பிறந்தானே

- திருமந்திரம் 869



Unthik kamalathu uthithu ezhum sothiyai
Anthikkum manthiram aarum arikilar
Anthikkum manthiram aarum arinthapin
Thanthaiku munne magan piranthane

- Tirumantiram 869

Yoga practitioner should meditate in the Panchachatra symbols of the body, NA, MA, SI, VA, YA. They are Swadhishtan, Manipooraga, Anahatha, Visutthi, and Agna, representing land, water, fire, air and sky. Tirumular suggests the practitioner to concentrate Manipooraga chakra before heart chakra.

யோகசாதகர் தமது உடலில் உள்ள பஞ்சாட்ச குறியீடுகளான ந, ம, சி, வ, ய என்னும் பஞ்சபூத சக்கரங்களை தியானித்து தவ ஆற்றல் பெறவேண்டும். ந' நிலமாகவும், ம' நீராகவும், சி' நெருப்பாகவும் வ' காற்றாகவும், ய' ஆகாயமாகவும் வகைப்படுத்தியுள்ளார் திருமூலர். இவை முறையே சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அனாஹதம், விசுத்தி, ஆக்ஞை ஆகியன. ஏற்கனவே பார்த்து விரிந்து இருக்கும் ஆகாய வெளியில், பூமி தோன்றுவதற்கு முதலில் நெருப்பும், அடுத்து நீரும், அதன் பின் நெருப்பும், காற்றும் தோன்றிய விதத்தினை திருமூலர் சூசகமாக இங்கே தெரிவித்துள்ளார்.

Heart center / Unconditional love

5.8 நீர் நெருப்பு

பாருக்குக் கீழே பகலோன் வரும்வழி
யாருக்கும் காண ஒண்ணாத அரும்பொருள்
நீருக்கும் தீக்கும் நடுவே உதிப்பவன்
ஆருக்கும் எட்டாத ஆதித்தன் தானே

- திருமந்திரம் 1982

Paarukuk keezhe pagalon varumvazhi
Yarukkum kaana onnatha arumporul
Neerukkum theekkum naduve uthippavan
Aarukkum ettatha aathithan thane

- Tirumantiram 1982

In chakra meditation, the supreme power generates and exists between spleen and heart chakra.

Manipoorakam = water
Heart chakra = fire

யாரும் எட்டமுடியாத சூரியனை யொத்த பெரும் சக்தி, மனித உடம்பில் மணிபூரக மற்றும் அனாஹத சக்கரத்திற்கு இடையே உள்ளது.

மணிபூரகம் = நீர் / அனாஹதம் = நெருப்பு

Tirumular pranayamam

5.9 திருமூலர் பிராணயாமம்

மூன்று மடக்குடைப் பாம்பு இரண்டு எட்டுள
ஏன்ற இயந்திரம் பன்னிரண்டு அங்குலம்
நான்ற இம்முட்டை இரண்டையும் கட்டியிட்டு
ஊன்றியிருக்க உடம்பு அழியாதே

- தி.மந்திரம் 728

Moonru madakudaip paampu irandu ettuula
Enra iyanthirampannirandu angulam
Naanra immuttai irandaiyum kattiyittu
Oonriyirukka udampu azhiyathey

- Tirumantiram 728

The one who practises the Tirumular pranayamam is eternal.

திருமூலர் குறிப்பிடும் சீரிய மூச்சுப் பயிற்சிகளின் இலக்கணப்படி தொடர்ந்து சாதகம் செய்பவர்களின் உடம்பு அழியாது என்று குறிப்பிடுகிறார்.

Pranayama brings eternal bliss

5.10 கூற்றை உதைக்கும் திறன்

ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவார் இல்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளர்க்குக்
கூற்றை உதைக்கும் குறியதுவாமே

- திருமந்திரம் 571

Eatri irakki irukaalum poorikkum
Kaatraip pidikkum kanakkarivaar illai
Kaatraip pidikkum kanakkari vaalarkkuk
Kootrai uthaikkum kuriyathuvame

- Tirumantiram 571

Tirumular feels that nobody knows the methodogy of pranayama. If one knows the subtle methodology, he / she will be eternal. The practitioner should know the subtle technology of breathing exercise, TPM.

பிராணயாமம் செய்யும் சாதகர்கள் மூச்சுப் பயிற்சியின் மூச்சுக்காற்றை சூரியநாடி மற்றும் சந்திரநாடி வழியாக இலக்கணப்படி இயக்கும் வகை தெரியாமல் பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர் என்று திருமூலர் வருத்தப்படுகிறார். அக்காற்றைப் பிடிக்கும் கணக்கறிவாளருக்கு மரணத்தை வெல்லும் திறன் உண்டாகும் என்கிறார்.

The good shepherd

5.11 தொழுமின் ஒ நமனே

இரண்டு கடாவுண்டு இவ்வூரின் உள்ளே
இரண்டு கடாவுக்கும் ஒன்றே தொழும்பன்
இரண்டு கடாவும் இருத்திப் பிடிக்கில்
இரண்டு கடாவும் ஒருகடா வாமே

- திருமந்திரம் 2889

Irandu kadavundu ivvorinulle
Irandu kadavukkum onre thozhumpan
Irandu kadavum iruthip pidikkil
Irandu kadavum orukadaa vame

- Tirumantiram 2889

Ida and pingala naadis can submerge at sushumna-naadi One who acquires this subtle breathing, is the good shepherd, attains Vaasi-Yoga-breathing

சூரிய சந்திர நாடிகள் சங்கமிக்கும் சுழுமுனை நாடி. அந்த சுழுனை நாடியில் மூச்சை செலுத்தவல்லனே சிவயோகி.

Life forever

5.12 பறப்பட்டுப் போகான்

பறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட உள்ளே நின்மலம் ஆக்கில்
உறுப்பு சிவக்கும் உரோமம் கறுக்கும்
பறப்பட்டுப் போகான் புரிசடையோனே

- திருமந்திரம் 575

Purappattu pukkuth thirikinra vaayuvai
Nerippada ulle ninmalam aakkil
Uruppu sivakkum uromam karukkum
Purappattu pogaan purisadaiyone

- Tirumantiram 575

The proper yoga meditation with pranayama endures life forever. Tirumular ascertains that human body could be tender and vibrant, hair will be always black. No old age will come.

சுவாசிக்கும் காற்று வெளிச்சென்று உலவி, மீண்டும் உடலுக்குள் புகுந்து வெளிச்சென்று திரும்பும். இக்காற்று கழற்சியை பிராணயாம முறைப்படி சீராக்கத்தால் உடல் மெருகேறும், உரோமம் கறுக்கும் என்றும் இளமையுடன் வாழும் இந்த உடம்பை விட்டு இறைவன் வெளியேற மாட்டான். உடம்பு அழியாத நிலையில் இரு என்று அறிவுறுத்துகிறார் திருமூலர்.



Preserve the body forever

5.13 உடல் அழியாதிருக்க

நாட்டமிரண்டும் நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமுமில்லை மனைக்கும் அழிவில்லை.
ஓட்டமுமில்லை உணர்வில்லை தானில்லை
தேட்டமுமில்லை சிவனவனாமே

- திருமந்திரம் 604

Naattamirandum nadumookil vaithidil
Vaattamumillai manaikkum azhivillai
Ottamumillai unarvillai thaanillai
Thettamumillai sivanavanaame

- Tirumantiram 604

If the yoga practitioner concentrates his thoughts on his brow-chakra, he gets more vital energy, leads his body to Samadhi state, unperishable. He becomes Siva's state.

மூக்கிற்கு மேலே புருவ மத்தியில் எண்ணத்தைக் குவித்திட சாதகனின் உடல் தளராது, உடம்பும் அழியாது. தன்முனைப்பு அழிந்து சாதகனே சிவநிலையை அடைந்து விடுவான். இறைவனை வெளியில் தேட வேண்டிய அவசியமில்லை.



Weapon / 3 Nadis

5.14 ஆயுத எழுத்து

சக்தி வடிவு சகல ஆனந்தமும்
ஒத்த ஆனந்தம் உமையவள் மேனியாம்
சத்தி வடிவு சகளத் தெழுந்திரண்டு
ஒத்த ஆனந்தம் ஒருநட மாமே

- தி.மந்திரம் 2769

Sakthi vadivu sagala aananthamum
Ottha aanantham umaiyaval meniyaam
Satthi vadivu sagala thezhunthirandu
Ottha aanantham orunada maame

- Tirumantiram 2769

Energy is the vital force which gives us bliss whether material or spiritual. Energy by breath, ida and pingala naadis sometime submerge at sushumnanaadi leads us to eternal bliss dance deciphered by mystic Tirumular.

சூரியநாடி என்பது வலது கால் பெருவிரலிருந்து இடது நாசி வரை ஓடுவது;
சந்திரநாடி என்பது இடதுகால் பெருவிரலிருந்து வலது நாசி வரை ஓடுவது; சுழுமுனை என்பது நடுநாடியாகும். இதில் சுவாசம் போகும் போது பிரபஞ்ச பேரறிவை உயிர்நுண்ணறிவு மற்றும் சிவானந்தம் ஏற்படுகிறது.



Inner screen

5.15 அகக்காட்சியில் பிரபஞ்ச தோற்றம்

நற்சுடராகும் சிரமுக வட்டமாம்
கைச்சுடராகும் கருத்துற்ற கைகளிற்
பைச்சுடர்மேனி பதைப்புற்று இலிங்கமும்
நற்சுடராய் எழு நல்ல தென்றாளே

- திருமந்திரம் 1021

Narsudaragum siramuga vattamaam
Kaisudaragum karuthutra kaikalir
Paichchudarmeni pathaiputru ilingamum
Narsudarai ezhu nalla thenrale

- Tirumantiram 1021

The Universe appears as inner screen when one is in meditation. The first inner screen might be like this in brow chakra.

யோக சாதனையாளனின் அகக் காட்சியில் கிடைக்கும் முதல் காட்சி பிரபஞ்ச தோற்றம் இதுவே.

The core dance

5.16 கூத்தப் பிரான்

தேவரோடு ஆடித் திருஅம்பலத்து ஆடி
மூவரோடு ஆடி முனிசனத்தோடு ஆடிப்
பாவினுள் ஆடிப் பராசத்தியில் ஆடிக்
கோவினுள் ஆடிடும் கூத்தப் பிரானே

- திருமந்திரம் 2757

Thevarodu aadi thiruambalathu aadi
Moovarodu aadimunisanathodu aadip
Pavinul aadip parasatthiyul aadik
Kovinul aadidum koothap pirane

- Tirumantiram 2757

Breathing is the core dance within us explained by St. sitthar Tirumular.

சுவாசமே நம் இறை. அதுவே நம்
முள்ளே ஆடிடும் கூத்தப் பிரான்.

Concept of Maaya

5.17 பஞ்சபூத கலப்புடல்

தானும் அழிந்து தனமும் அழிந்து நீடு
ஊனும் அழிந்து உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து மனமும் அழிந்துபின்
நானும் அழிந்தமை நானறி யேனே

- திருமந்திரம் 2951

Thaanum azhinthu thanamum azhinthu needu
Oonum azhinthu uyirum azhinthudan
Vaanum azhinthu manamum azhinthupin
Naanum azhinthamai naanari yene

- Tirumantiram 2951

Here Tirumular clearly excliams that one's subtle body, mind and the conscious of I" all will dissolve with cosmos, Param, step-by-step, when one leaves this earth

தானும், தனமும், ஊனும், உயிரும், மனமொடுங்கும் ஆகாயத்தையும்; இப்படி பஞ்சபூதத்தால் ஆன மனித உடல், பின்னர் பஞ்சபூதத்திலே கரைந்து மறையும் ஆக்கமத்தை நானறியேனே என்கிறார் திருமூலர்.

Serpent power / Sleeping kundalini core

5.18 பாம்பு திறக்கும் வழி

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர்புகு மாறறி யேனே

- திருமந்திரம் 1053

Avlai ariiyaaamararumillai
Avalanri seiyyum arumtavam illai
Avalanri ivaraal aavathonrillai
Avalanrio orpugu maarari yene

- Tirumantiram 1053

Tirumular confirms that serpent power is the sleeping kundalini core which helps human being gets enlightened.

ஒரு தோணி போல எலும்போர் உடலுக்குள் இருக்கும் குண்டலினி என்கிற பாம்பைப் பெண்ணைப் பற்றி திருமூலரும் இங்கே பேசுகிறார்.

அவள் = குண்டலினி

ஐவர் = பஞ்சபூதங்கள்

ஆறு = ஆறு ஆதாரங்கள்



Kundalini

5.19 பரனறிவே பரம்

பற்றறப் பற்றில் பரம் பதியாவது
பற்றறப் பற்றில் பரனறிவே பரம்
பற்றறப் பற்றினில் பற்றவல்லோர் கட்கே
பற்றறப் பற்றில் பரம் பரமாமே

- திருமந்திரம் 2448

Patrarap patrril param pathiyavathu
Patrarap patrril paranarive param
Patrarap patrinil patravalor katge
Patrarap patril param paramaame

- Tirumantiram 2448

When meditative yogi detaches desires, he attains Sivanubaahavam.

Here the author carved this picture in the cosmic sprit art mood, deciphered the kundalini core.

ஆசையை அறுத்து, யோகப் பயிற்சியின் மூலம் குண்டலினி சக்தியை அறிந்து, மென்மேலும் சாதனை செய்பவர்களுக்கு பரனறிவு கிட்டும் என்று அருளாலிக்கிறார் திருமூலர்.



Third Eye

5.20 நெற்றிக்கண் || நவாத்தி

முக்கணன் தானே முழுச்சுடர் ஆயவன்
அக்கணன் தானே அகிலமும் உண்டவன்
திக்கணன் ஆகித்திகையெட்டுங் கண்டவன்
எக்கணன் தானுக்கும் எந்தை பிரானே

- திருமந்திரம் 1025

Mukkanan thane muzhuchudar ayavan
Akkanan thane akilamum undavan
Thikkanan aagithikaiyettum kandavan
Ekkanan thanukkum enthai pirane

- Tirumantiram 1025

Tirumular here refers that only the connecting point between Ida and pingala naadi is the sushumna naadi (third eye, brow-chakra or Pituitary point). It can induct one yoga practitioner to receive cosmic communications.

சூரியநாடி, சந்திரநாடி, இரண்டும் இணைந்து சுழுமுனைநாடி உயிர்நாடி எனப்படும். அந்த உயிர்நாடியே பரனிடம்.

Inner eye

5.21 அகக்கண்கொண்டு காண்பதே ஆனந்தம்

முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்
மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய
சுகத்தைச் சொல்லென்றால் சொல்லுமாறு எங்ஙனே

- திருமந்திரம் 2944

Mugathir kankondu kaanginra moodargal
Agathir kankondu kaanpathey aanantham
Magatgu thaithan manaalanodu aadiya
Sugathai sollenraal sollumaaru engane

- Tirumantiram 2944

When the yoga - practitioner sees the inner screen, receiving the cosmic communication is the real bliss, here in this hymn affirms Tirumular.

புறக்கண்களால் காணும் காட்சிகளைவிட அகக்கண்கொண்டு காணும் காட்சிகளே ஆனந்தம் தரவல்லவை என்கிறார் திருமூலர்.

Inner voice

5.22 சிவமணம்

பூவினில் கந்தம் பொருந்தியவாறு போல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போல உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுதறி யாமே

- தி.நமந்திரம் 1459

Poovinil kantham porunthiyavaaru pol
Seevanu kullesivamanam poothathu
Oviyam polaunarnthari vaalarkku
Naavi yanaintha naduthari yaame

- Tirumantiram 1459

Tirumular's inner voice announces that the divine fragrance blossoms where Siva dwells

சிவனுறையும் இடத்தில் சிவமணம் பூக்கும் என்று திருமூலரின் மனக்குரல் அறிவிக்கிறது.



Inner vision

5.23 அட்டமா சித்தி

சத்தன் அருள்தரின் சத்திஅருள் உண்டாம்
சத்தி அருள்தரின் சத்தன்அருள் உண்டாம்
சத்தி சிவமாம் இரண்டும் தன்னுள் வைக்கச்
சத்தியம் எண்சித்தித் தன்மையும் ஆமே

- திருமந்திரம் 333



Satthan arultaharin satthiarul undaam
Satthi arultahrin satthanarul undaam
Satthi sivamam irandum tannul vaikka
Satthiyam ensitthi tanmaiyum aame

- Tirumantiram 333

Here sitthar Tirumular confirms that one who kindles the kundalini awakening can attain 8 supernatural powers.

குண்டலினி சக்தியை விழிப்படையச் செய்யும்யோக சாதனையாளர்கள் அட்டமா சித்தி அடையப் பெறுவார்கள் என்று சொல்கிறார் திருமூல தேவநாயனார்.



Cosmic sound

5.24 'ஓம்' என்பது பிரபஞ்சம்

ஓமெனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே உருஅரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒன்முத்தி சித்தியே

- திருமந்திரம் 2676

OMenum ongarat thulle orumozhi
OMenum ongarat thulle oruaru
OMenum ongarat thulle palapetham
OMenum Ongaaram onmutthi sitthiye

- Tirumantiram 2676

Vertical position of spinal cord connected to cerebral is human gift to connect cosmic knowledge.

பெருமூளையுடன் இணைக்கும் நேரான முதுகுத்தண்டுத் தொடர்பு, பேரண்ட அறிவை மனிதருக்குப் பெற்றுத்தரும் பிரபஞ்சப் பரிசு.

Chakra and aura cleansing

5.25 அகத்தூய்மை பேணுதல்

ஆத்த மனையாள் அகத்தே இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடர் உற்றவாறே

- திருமந்திரம் 201

Aattha manaiyaal agathe irukkave
Kaattha manaiyaalai kaamurung kaalaiyar
Kaiccha palavin kaniyunna maattamal
Eeccham pazhathukku idar utravare

- Tirumantiram 201

The mind in human body represents the Universe and its particles. It always requires aura and chakra cleansing periodically, because of the nature of the universe to avoid pollution accumulated in human mind.

மாக படியக்கூடிய இடம்தான் மனம் எனும் பிரபஞ்சம். குப்பைக் கூளங்கள் கொண்ட கூட்டுப் பொருளே பிரபஞ்சம். மனித உடலின் ஆதார சக்கரங்களில் படியும் மாசினை அவ்வப்போது தவம் செய்து தூய்மைப்படுத்திட வேண்டும் என்று தனது அகக்காட்சியில் கண்ட இப்பிரபஞ்சத்திற்கு விளக்கம் தருகிறார் இந்த நூலாசிரியர்.

Universal touch

5.26 அவமே சிவம் / சிவதீட்சை

அவமும் சிவமும் அறியார் அறியார்
அவமும் சிவமும் அறிவார் அறிவார்
அவமும் சிவமும் அருளால் அறிந்தால்
அவமும் சிவமும் அவனரு ளாமே

- திருமந்திரம் 2340



Avamum sivamum ariyaar ariyaar
Avamum sivamum arivaar arivaar
Avamum sivamum arulal arinthaal
Avamum sivamum avanaru lame

- Tirumantiram 2340

Cosmic touch can be given by the Almighty to those who have spiritual thirst. And they will only feel the consciousness of Siva.

அறியாதவர்கள் சிவத்தை அறிவதில்லை; அறிந்தவர்களே சிவத்தை அறிவர். இறையருளால் உபதேசம் பெற்றவர்களே சிவத்தை அறியமுடியும்.

Chapter 6

EARTH

பூமி தத்துவம்

Duty on Earth

2.1 பிறவித்தொழில்

இன்புறுவீர் அறிந்தே எம் இறைவனை
அன்புறுவீர் தவம் செய்யும் மெய்ஞானத்துப்
பண்புறுவீர் பிறவித் தொழிலே நின்று
துன்புறு பாசத்து உழைத்து ஒழிந்தீரே

- திருமந்திரம் 2112



Inpuruveer arinthey em iraivanai
Anpuruveer tavam seyyum meignanathup
Panpuruveer pravith tholile ninru
Thunpuru paasathu ulaithu ozhintheere

- Tirumantiram 2112

Humans are always interested in the sensual pleasures and reproduction mechanism. Tirumular here directs us to turn into spiritual Tapas instead of going to the normal erotic sensual path.

மனிதனின் பிறவிப்பயன் இறைவனையறிதல். இறைவனை அறிய மனிதன் செய்ய வேண்டியது மெய்ஞ்ஞானத்தை வழங்கக்கூடிய தவமே ஆகும். மனிதர்களில் பெரும்பாலும் பிறவிப்பயனை அறியாது, பிறவித் தொழிலாகிய சிற்றின்பப் பாதையில் சென்று ஒழிகின்றார்களே என்று வருந்துகிறார் திருமூலர்.

See men in semen

அழிகின்ற விந்து அளவை அறியார்
கழிகின்ற தன்னையும் காக்கலும் தேரார்
அழிகின்ற காயத்து அழிந்து அயர்வுற்றோர்
அழிகின்ற தன்மை அறிந்தொழியாரே

- திருமந்திரம் 1936



Azhikinra vinthu alavai ariyaar
Kazhikinra tannaiyum kaakkalum theraar
Azhikinra kaayathu azhinthu ayarvutror
Azhiginra tanmai arinthozhiyaare

- Tirumantiram 1936

Tirumular cautions all human beings not to waste the sexual vital fluid which has the great secrecy.

அழிகின்ற விந்துக்குள் பல கோடி ஜீவ அணுக்கள் இருக்கின்றன. கழிகின்ற காயத்தையும் காக்கும் தன்மையையும் அறியாமல் இம்மனிதர்கள் இருக்கின்றார்களே என்று கவலை கொண்டு விந்தணுவை வீணாக்காதீர் என்கிறார் திருமூலர்.

Yoni and Maaya yoni

6.3 மோனியும் அண்ட கருந்துளையும்

வரும்வழி போம்வழி மாயா வழியைக்
கருவழி கண்டவர் காணா வழியைப்
பெரும்வழி யாநந்தி பேசும் வழியைக்
குருவழி யேசென்று கூடலும் ஆமே

- திருமந்திரம் 2056



Varumvazhi pomvazhi maayavazhiyaik
Karuvazhi kandavar kaanaa vazhiyaip
Peruvazhi yaananthi pesum vazhiyaik
Guruvazhi yesenru koodalum aame

- Tirumantiram 2056

Tirumular speaks about yoni and Maaya yoni. Yoni here refers earth, Maaya yoni, the cosmic hole.

பூமியில் இனவிருத்திக்கான அடிப்படை கூறு மோனியே. திருமூலர் இப்பாடலில் மோனியை மாயா வழி என்கிறார். மேலும் பெருவழியாம் நந்தி பேசும் வழி என்று பிரபஞ்ச கருந்துளையை குறிப்பிடுகிறார். கருந்துளையை மையப்படுத்திதான் அண்டங்களும், பேரண்டங்களும், கோடான கோடி நட்சத்திரங்களும் சுற்றிச் சுழல்கின்றன. அத்துடன் மாயக்கருந்துளையிலிருந்து புதிது புதிதான நட்சத்திரங்கள் தோன்றி வளர்கின்றன. அதேசமயம் வலுவிழந்த கோள்களும், நட்சத்திரங்களும் கருந்துளையில் சிக்கி மடிகின்றன.



Genetic engineer

6.4 கர்வலன் பேர்நந்தி

ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இலங்கிழை யோனே

- திருமந்திரம் 504 / 2175

Aavana aava azhiva azhivana
Povana pova puguva puguvana
Kaavalan pernanthi kaatithuk kandavan
Evana seyyum ilangilai yone

- Tirumantiram 504 / 2175

He is the one who can only decide, which bio-molecule should enter one woman's womb. Tirumular calls him genetic engineer of our living world.

யோனிக்குள் நுழையும் விந்தணுக்கள் ஆயிரமாயிரம் இருப்பினும், அதில் எந்த உயிரணு கருமுட்டைக்குள்ளே நுழைய வேண்டும் என்பதை தீர்மானிப்பது இறைவனே.

Man's breathing determins
the gender of baby

6.5 மூச்சுக்காற்றில் குழந்தையை தீர்மானிக்கிறது

குழவியும் ஆணாம் வலத்தது ஆகின்
குழவியும் பெண்ணாம் இடத்தது ஆகின்
குழவி இரண்டாம் அபானன் எதிர்க்கின்
குழவி அலியாகும் கொண்டகால் ஒக்கிலே

- திருமந்திரம் 482

Kuzhaviyum aanaam valatthatu agin
Kuzhaviyum pennaam idathathu agin
Kuzhavi irandaam apaanan ethirkkin
Kuzhavi aliyagum kondakaal okkile

- Tirumantiram 482

During sexual intercourse, man's breathing is in right nostril, the woman will conceive male child. If breath is in left nostril of man, the child will be female.

உடலுறவு கொள்ளும் காலத்தில் ஆணின் வலது மூக்கில் சுவாசம் ஓடினால், சூலுறும் குழந்தை ஆண். இது மூக்கில் சுவாசம் ஓடினால் சூலுறும் குழந்தை பெண். அப்படி இல்லாமல் அபானவாயு எதிர்த்து நிற்கின் இரட்டை குழந்தை சூலுறும். இரண்டு மூக்கிலும் சுவாசம் சமமாக ஓடினால் சூலுறும் குழந்தை திருநங்கையாகும் என்பது திருமூலர் வாக்கு.

Gynecological secrecy

மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே.

- திருமந்திரம் 481



Maatha utharam malamigil manthanaam
Maatha utharam salamigil moongaiaam
Maatha utharam irandokkil kannillai
Maatha utharathil vantha kuzhavikke

- Tirumantiram 481

If the pregnant woman womb has more feces, the baby becomes sluggish.

If the pregnant woman womb has more urine, the baby becomes dumb

If both feces and urine are more, the child becomes blind. Tirumular discloses this gynecological secrecy in this hymn.

குழந்தையைச் சுமக்கும் தாயின் வயிற்றில் மலம் இருந்தால், கண்ணில்லாமல் பிறக்கும் என்கிறார் திருமூலர்.

The power of semen varies

6.7 சுக்கில வேக வேறுபாடுகள்

பாய்கின்ற வாயு குறையின் குறளாகும்
பாய்கின்ற வாயு இளைக்கின் முடமாகும்
பாய்கின்ற வாயு நடுப்படின் கூனாகும்
பாய்கின்ற வாயு மாதர்க்கில்லை பார்க்கிலே

- திருமந்திரம் 480



Paaikinra vaayu kuraiyin kuralagum
Paaikinra vaayu ilaikkin mudamagum
Paaikinra vaayu naduppadin koonagum
Paaikinra vaayu maatharkillai paarkkile

- Tirumantiram 480

In this Tirumantira hymn, Tirumular reveals that the power of semen varies, according to the semen force. During sexual intercourse, if force density of the semen is shorter, the conceiving baby will be short. And if powerless, the conceiving baby will be weak. And if the density of the semen is medium, the conceiving baby will be hunchback.

கலவியின் போது பாய்கின்ற சுக்கிலத்தின் வேகம் குறையுமானால் பிறக்கும் குழந்தை குள்ளமாக இருக்கும். வேகம் இளைக்கின் முடமாகும். வேகம் மிதமாக இருப்பின் கூனாக பிறக்கும் என்று சுக்கில வேக வேறுபாடுகள் பற்றி திருமூலர் விளக்கியுள்ளார்.

Filthy

6.8 அசுத்தமான உயிரினம்

ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்
ஆசூச ஆணிடம் ஆரும் அறிகிலார்
ஆசூச ஆணிடம் ஆரும் அறிந்தபின்
ஆசூச மானுடம் ஆசூச மாமே.

- திருமந்திரம் 2551



Aasoosam assosam enpaar arivilaar
Aasoosa aanaeidam aarum arikilaar
Aasoosa aanaeidam aarum arinthapin
Aasoosa maanudam aasoosa maame

- Tirumantiram 2551

According to Tirumoolar, human evolution is filthy

பூமியில் தோன்றிய உயிரினங்களில் மிகவும் அசுத்தமான உயிரினம் மனித இனமே என்று திருமூலர் அறிவிக்கிறார்.

Impermanent

6.9 வாழ்க்கை நிலையில்லாதது

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே

- திருமந்திரம் 148



Adappanni vaitthar adisilai undaar
Madakkodiyarudu manthanangk ondaar
Idappakkame irai nonthathu enraar
Kidakkp padutthar kidanthozhin thare

- Tirumantiram 148

Eating and enjoying pleasures, aging and sickness lead human life to the graveyard.

உண்பதும், இன்பம் துய்ப்பதும், நோயுறுவதும் பின் உடலை நீங்கிச் செல்வதுமே மனித வாழ்க்கையாக அமைகிறது.

Stay away

6.10 விலகுறும் நெஞ்சினி

இலைநல ஆயினும் எட்டி பழுத்தால்
குலைநல ஆம் கனி கொண்டு உணலாகா
முலைநலம் கொண்டு முறுவல் செய்வார் மேல்
விலகுறும் நெஞ்சினை வெய்து கொள்ளீரே

- திருமந்திரம் 204

Elainala aayinum etti pazhutthal
Kulainala aam gani kondu unalaaga
Mulainalam kondu muruval seivaar mel
Vilagurum nenjinai veithu kolleere

- Tirumantiram 204

Please stay away from call-girls or socalled female-escorts who always enchant men in terms of money.

பசுமையான இலை தழைகளைக் கொண்ட எட்டி மரத்தின் கனிகளை யாரும் உண்ண மாட்டார்கள். அதுபோல கவர்ச்சிகரமான உடல் உறுப்புகளைக் காட்டி புன்னகை பூக்கும் வலைவின் மகளிரைக் கண்ணே நேரிழை விலகிச்செல்லும் நெஞ்சம் வேண்டும் என்கிறார் திருமூலர்.

Yin Yang / Siva Sakthi

6.11 சிவசக்தியின் இணைவு

அண்டம் முதலா அவனி பரியந்தம்
கண்டது ஒன்றில்லைக் கனங்குழை யல்லது
கண்டனும் கண்டியு மாகிய காரணம்
குண்டிகை கோளிகை கண்டத னாலே.

- திருமந்திரம் 1210

Andam muthala avani pariyantham
Kandathu onrillai kanangulai yallathu
Kandanum kandiyu maagiya kaaranam
Kundikai koligai kandatha nalae

- Tirumantiram 1210

Whatever materials created on this Earth is the YIN YANG combination, representing the whole Universe. The creations are in the form of male and female version. The Delta version in this picture denotes SIVA and the Yoni version indicates PARASAKTHI who are creators of this Universe confirmed by Tirumular.

பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட அனைத்துப் பொருள்கள் யாவையும் இப்பூமியிலும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. பிரபஞ்சம் பராசக்தியின் வடிவமாக உள்ளது. பூமியில் படைக்கப்பட்ட உயிரினங்கள் யாவையும் ஆண் பெண் இரு நிலைகளாக இருப்பதற்கு சிவமும் சக்தியுமே காரணம்.

Yin's ignorance

6.12 பேச்சற்ற பேதமை

பெண்ணொரு பெண்ணைப் புணர்ந்திடும் பேதமை
பெண்ணிடை ஆணும் பிறந்து கிடந்தது
பெண்ணிடை ஆணென் பிறப்பறிந் தீர்க்கின்ற
பெண்ணுடை ஆணிடைப் பேச்சற்ற வாறே

- திருமந்திரம் 1159



Pennoru pennaip punarnthidum pethamai
Pennidai aanum piranthu kidanthathu
Pennidai aanen pirapparin theerkinra
Pennudai aanidaip pecchatra vare

- Tirumantiram 1159

The woman is the source of all creatures in the world. The source of entire force is blended as yin and yang, Siva and Sakthi, male-female twin. The development of living things is a mixture of men and women, not Yin alone.

உலகில் படைக்கப்பட்ட ஜீவராசிகள் அனைத்திற்கும் பெண்ணே ஆதாரமாக விளங்குகிறாள். பெண்ணின் படைப்புகள் ஆண், பெண் என இருபாலாக பிரிந்து கிடக்கிறது. ஜீவராசிகளின் விருத்தி என்பது ஆணும் பெண்ணும் கலக்கும் கலவைதானே. பெண்ணொருபெண்ணைப் புணர்ந்திடுதல் என்பது பேதமை என்று சுட்டிக்காட்டுகிறார் திருமூலர்.



Tree within seed

6.13 விதைக்குள் விருட்சம்

படர்கொண்ட ஆலத்தின் வித்தது போலச்
சுடர்கொண்ட அணுவினைத் தூவழி செய்ய
இடர்கொண்ட பாச இருளற வோட்டி
நடர்கொண்ட நல்வழி நாடலு மாமே

- திருமந்திரம் 2009



Padargonda aalathin vitthathu pola
Sudargonda anuvinath thoovazhi seiyya
Idargonda pasa irulara votti
Nadargonda nalvazhi naadalum aame

- Tirumantiram 2009

A small seed of banyan tree contains all the qualities ie, height, branches and its huge growth in it. Likewise, human soul contains luminous bright, but it is covered by ego, proud and maaya. To cleanse that maaya and its evils, one must follow virtues and good deeds.

ஓங்கி வளர்ந்து படர்ந்த ஆலமரத்தின் அத்தனை அம்சங்களும், அதன் நுண்ணிய சிறு விதையில் ஒடுங்கியிருப்பது போல; உடலினுள்ளே கடர்கொண்டு பிரகாசிக்கும் ஆன்மா வானது ஒளிவில் ஒடுக்கமாகவுள்ளது. அந்த ஆன்மாவை தூவழி செய்ய ஆணவம், கன்மம், மாயை ஆகிய பாசப்பதிவுகள் நீங்கப் பெறும்.

God's particle in womb

6.14 மயக்கத்தால் அக்கறை வளர்த்தல்

குயிற்குஞ்சு முட்டையைக் காக்கைக் கூட்டிட்டால்
அயிர்ப்பின்றிக் காக்கை வளர்க்கின்றது போல்
இயக்கில்லை போக்கில்லை ஏனென்பதில்லை
மயக்கத்தால் காக்கை வளர்க்கின்ற வாறே

- திருமந்திரம் 488

Kuyirkunju muttaiyaik kaakkaik kootittal
Ayirppinrik kaakkai valarginrathu pol
Iyakkillai pokkilai eanenpathillai
Mayakkathaal kaakkai valarkkinra vaare

- Tirumantiram 488

Normally cuckoo lays eggs in crow's nest without knowing how to nest and incubate them. Crow can not diifferentiate the added eggs in her nest and incubates all. Tirumular here compares this same concept in human parenting system that the pregnant lady does not know the child growing in her womb as God's particle.

குயிலுக்கு முட்டை பிடித் தெரியும் ஆனால் கூடுகட்டி அடை காத்து குஞ்சு பொரிக்கத் தெரியாது. எனவே குயிலானது காக்கையின் கூட்டில் முட்டையிட்டு விடும். காகமும் குயில் முட்டையை தானிட்ட முட்டையென்று கருதி அடை காத்து குஞ்சு பொரிக்கும். இந்நிகழ்வை மனிதரின் பேறுகால குழந்தை வளர்ப்புடன் ஒப்பிடுகிறார் திருமூலர். தாயானவள் தன் வயிற்றில் சுமக்கும் கருவானது இறைவனின் துகள் என்று அறியாமல், தாயும் தந்தையும் தமது குழந்தை என்று நினைத்து பாசத்தைப் பொழிந்து வளர்க்கிறார்கள்.



Cosmic girl

6.15 [illegible]

துருத்தியுள் அக்கரை தோன்றும் மலைமேல்
விருத்திகண் காணிக்கப் போவார் முப்போதும்
வருத்தி உள்நின்ற மலையைத் தவிர்ப்பாள்
ஒருத்தி உள்ளாள் அவள்ஊர் அறியோமே

- தி.மந்திரம் 2895

Turuthiyul akkarai thonrum malaimel
Viruthigan kaanikkap povaar muppothum
Varuthi ulninra malaiyaith tavirppal
Oruthi ullal avaloor ariyome

- Tirumantiram 2895

The serpent power which helps human to know the cosmic energy can be felt but cannot be seen.

அண்டத்திலும் பிண்டத்திலும் உலவும் குண்டலினி சக்தியை எவராலும் அறியமுடியாது, ஆனால் உணரமுடியும்.

Yogini sakthi

6.16 போகி நோக்கு நுகர் நல்லாள் – யோகி

புலர்ந்தது போதென்று புட்கள் சிலம்பப்
புலர்ந்தது போதென்று பூங்கொடி புல்லிப்
புலம்பி னவளொடும் போகம் நுகரும்
புலம்பனுக் கென்றும் புலர்ந்திலை போதே

- தி.மந்திரம் 2934

Pularnthathu pothenru putgal silampap
Pularnthathu pothuenru poongodi pullip
Pulambi navalodum pogam nugarum
Pulambanuk kenrum pularnthilaii pothey

- Tirumantiram 2934

Yogi always embraces sakthi, yoga-sakthi, yogini without time and space.

காலம், நேரம், வர்த்தமானமின்றி யோகி, சிவனுந்தமையை குண்டலினி சக்தியைத்தழுவுகிறார்.



Size of a jeevan (life in microscopic view)

6.17 உயிரின் வடிவம்

மேவிய சீவன் வடிவது சொல்லிடில்
கோவின் மயிரொன்று நூறுடன் கூறிட்டு
மேவிய கூறது ஆயிரம் ஆயினால்
ஆவியின் கூறு நூறாயிரத்து ஒன்றே

- திருமந்திரம் 2011

Meviya seevan vadivathu sollidil
Kovin mayironru noorudan kooriyittu
Meviya koorathu aayiram aayinal
Aaviyin kooru noorayiratthu onre

- Tirumantiram 2011

Tirumular visioned the size of a soul through his deep meditation and confirms that dividing a single hair of a cow into one hundred thousand parts and the one single part among them is the size of a soul, (life).

உயிரின் வடிவத்தை திருமூலர் விவரிக்கும் போது, அது எவ்வளவு மிக மிக நுண்ணியமானது என்பதை ஓர் உவமையின் மூலம் விவரிக்கிறார். பசுவின் உடலிலுள்ள ஓர் உரோமத்தை எடுத்து, அதை நூறாயிரம் கூறுகளாக பிளந்தவற்றுள் கூறுகளில் ஒன்றே உயிரின் வடிவம்.



Maayapuri

ஒருங்கிய பூவும் ஓர் எட்டிதழாகும்
மருங்கிய மாயா புரியதன் உள்ளே
சுருங்கிய தண்டின் சுழுமுனையின் ஊடே
ஒருங்கிய சோதியை ஓர்ந்தெழும் உய்ந்தே

- திருமந்திரம் 2528

Orungiya poovum or ettithalagum
Marungiya maaya puriyathan ulle
Surungiya tandin suzhumunaiyin oode
Orungiya sothiyai oornthezhum uinthey

- Tirumantiram 2528

Brain has a lot of Microprocessor that is called Maayapuri by Tirumoolar.

Micro macro link is possible by connecting spinal cord and shusumna.

சஹஸ்ரார தாமரை இயல்பு நிலையில் மொட்டாக கவிழ்ந்திருக்கும். யோக சாதனையின் போது, மூச்சுக்காற்று சுழுமுனை நாடியின் வழியாக மேலெழுந்து செல்லும்போது, தாமரை திரிந்து மலரும். அப்படி சுழுமுனையின் ஊடே செல்லும் மூலக்கனல், சஹஸ்ரார தாமரையில் கடல்விடும் சோதியை தரிசிக்கும். இந்த சஹஸ்ரார தாமரையை திருமூலர் மாயாபுரி என்று அழைக்கிறார்.



Bio chip

6.19 கூடு மெய்ப்பதிவுகள்

தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்கு தலைவனும் ஆமே

- திருமந்திரம் 2228

Thane tanakkup pagaivanum nattanum
Thane tanakku marumaiyum immaiyum
Thane thanseitha vinaippayan thuippanum
Thane tanakku talaivanum aame

- Tirumantiram 2228

Human thinking process becomes actions that turned as Karmas are registered into human bio chip to everybody. They lead one's birth and rebirth.

ஒரு மனிதனின் வினைப்பதிவுகளை அவனேதான் நுகரவேண்டும். அவன் அல்லது அவனின் கடந்தகால கர்மவினைப் பதிவுகள் அவர்களுக்குள்ளேதான் இருக்கின்றன. மேலும் இப்பிறவியில் செய்கின்ற வினைப் பதிவுகளும் சேர்ந்து பிறவித் தொடராய் தொடர்ந்து வரும் என்கிறார் திருமூலர். இதையே இம்மையும் மறுமையும், தலைவனும், துய்ப்பானும் நம்முள்ளே (வினைப்பதிவுகளாக) இருக்கின்றனர் என்கிறார்.



Capital punishment

6.20 நரமாம்சம் புசிக்கக்கூடாது

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி முறித்து வைப்பாரே

- திருமந்திரம் 199

Pollap pulalai nugarum pulaiyarai
Ellarum kaana iyamanran thoothuvar
Sellagap patrith theevai naragathil
Mallakkath thalli murithu vaippare

- Tirumantiram 199

The practice of cannibalism is strictly condemned by saint Tirumular.

திருமூலர் வாழ்ந்த காலத்தில் நரமாமிசம் உண்ணும் பழக்கம் சில மனித குழுக்களிடம் இருந்துள்ளது. அதை கண்ணுற்ற திருமூலர், சினந்து பாடிய பாடல் வரிகள் இவை.

Mortal body

6.21 நினைப்பு ஒழிந்தார்களே

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணம் என்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக்கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே

- தி.மந்திரம் 145



Urellam koodi olikka azhuthittup
Perinai neeki pinam enru perittuch
Soorayang kaattidaik kondupoisuttittu
Neerinil moozhgi ninaipu ozhinthargale

- Tirumantiram 145

Death makes one mingle with cosmos, but people around his / her town cries and forgets them immediately after they dispose his / her mortal body.

பஞ்சபூதத்தால் ஆன இந்த உடம்பு, பரத்தினில் கலப்பது இறப்பு. இறந்த பின் அவரது நினைவுகளை ஒழிப்பது சிறப்பு.

Unnecessary rituals to dead body

6.22 உயிரற்ற உடலுக்கு இவ்வளவு சடங்குகளா!

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பால்துளி பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோல் பையினின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போன இக்கூட்டையே

- திருமந்திரம் 167



Kaakkai kavarilen kandaar pazhikkilen
Paalthuli peyyilen pollor pazhicchilen
Thol payyininru thozhilar aseithoottum
Kootthan purapattup pona ikkoottaiye

- Tirumantiram 167

God resides within every living particle. If one dies, the God (function or breath) goes out. Here Tirumular ridicules us why we do too many unnecessary rituals for a dead body.

இந்த மனித உடம்பிலிருந்து உயிராகிய இறைவன் வெளியேறிய பின் அந்த உடலை காக்கை கொத்தி தின்றால் என்ன, பார்ப்பவர்கள் பழித்தால் என்ன, அவ்வுடலின் மீது பால் தெளித்தால் என்ன ஒன்றும் ஆகப்போவதில்லை என்று திருமூலர் உயிரற்ற உடலுக்கு செய்யும் சடங்குகளை குறைகூறுகிறார். மேலும் மனித உடலில் கூத்தன் என்கிற இறைவனே இருக்கிறான். அதை உயிருள்ளபோதே உணர்ந்து கொள்ளுங்கள் என்று உலகோருக்கு அறிவிக்கிறார்.

No ultimate companion

பண்டம் பெய்கூரை பழகி விழுந்தக்கால்
உண்ட அப்பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழி நடவாதே

- திருமந்திரம் 144

Pandam peikoorai pazhagi vizhunthakkal
Unda appendirum makkalum pinselaar
Konda virathamum gnanamum allathu
Mandi avarudan vazhi nadavathey

- Tirumantiram 144

When one dies due to old age or sickness, the wife and children of the diseased may not follow him, nobody else. But the fasting he did, the wisdom he acquired helps him in his path to paradise.

வயது முதிர்வின் காரணமாக நோயுற்று இறக்கும்போது நம்மை அண்டிப் பிழைத்த மனைவியும், மக்களும் நம்முடன் பின் வரமாட்டார்கள். உயிரோடு இருக்கும்போது கொண்ட விரதமும், ஞானமும் தவிர, வேறு எதுவும் அவரைப் பின்தொடராது.



Thananjayan in human body

ஒத்தஅவி ஒன்பது வாயுவும் ஒத்தபின்
ஒத்தஅவி ஒன்பதின் மிக்க தனஞ்சயன்
ஒத்தஅவி ஒன்பதில் ஒக்க இருந்திட
ஒத்த உடலும் உயிரும் இருந்ததே

- திருமந்திரம் 653

Otthuavi onpathu vaayuvum otthapin
Otthuavi onpathin mikka thananjayan
Otthuavi onpathil okka irunthida
Ottha udalum uyirum irunthathey

- Tirumantiram 653

It is believed that there are 10 gases functioning in human body. They are Pranan, Apaanan, Viyanan, Uthanan, Samanan, Nagan, Koorman, Kiruthanan, Devadatthan and Thananjayan. Out of these 10, nine gases soon disappear after the death of a man. But the tenth gas Thananjayan remains in the dead body and decomposes the dead body after 3 days, if buried. The entire human body is being controlled by these 10 gases if Thananjayan associates with the other nine gases. Thananjayan is the deciding factor of human life time.

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருதானன், தேவதத்தன் ஆகிய ஒன்பது வாயுக்களும் மனிதன் இறந்தவுடன் உடலை விட்டு உடனே நீங்கிவிடும். ஆனால் பத்தாவது வாயுவாகிய தனஞ்சயன், மற்ற ஒன்பது வாயுக்களை குறைபாடும், மிகாமலும் காத்து, அந்த ஒன்பதிலும் கூடியிருந்து தலையும், உடலும் உயிரும் பல்லாண்டு பூமியில் வாழும். தனஞ்சயன், மற்ற ஒன்பது வாயுக்களைக் கட்டி மேய்க்கிறான்.



Rebirths

6.25 பிறவாமல் இருப்பது

இக்காயம் நீக்கி இனியொரு காயத்தில்
புக்கும் பிறவாமல் போம்வழி நாடுமின்
எக்காலத்து இவ்வுடல் வந்து எமக்கு ஆனதென்று
அக்கால முன்னம் அருள் பெறலாமே

- திருமந்திரம் 2106



Ikkayam neekiiniyorukaayathil
Pukkum piravaamal pomvazhi naadumin
Ekkalathu iivudal vanthu emakku anathenru
Akkala munnam arul peralame

- Tirumantiram 2106

When soul departs, it seeks the real destination to reach called "Param". Due to unfulfilled sensual desires, it takes another body again called rebirth, without previous memory data

மறுபிறவி உண்டு என்பதை திருமூலர் வலியுறுத்துகிறார். மீண்டும் பிறவாமல் இருக்க, இந்த உடல் நமக்கு எப்படி வாய்த்தது என்பதை முன் உணர்ந்தால் பிறவா அருள் கிடைக்கும் என்கிறார்.

Choosing another house

உடல் கூடு பிறப்பு இறைவன்

கூடு கெடின் மற்றொர் கூடுசெய்வான் உளன்
நாடு கெடினும் நமர்கெடு வாரில்லை
வீடு கெடின் மற்றொர் வீடுபக்கால் ஒக்கும்
பாடது நந்தி பரிசறி வார்க்கே

- திருமந்திரம் 2852

Koodu kedinmatror kooduseivaan ulan
Naadu kedinum namarkedu vaarillai
Veedu kedin matror veedupukkal okkum
Paadathu nanthi parisari varkke

- Tirumantiram 2852

Recycle of human birth continues eternally as per cosmic records.

மனிதன் குடியிருக்கும் வீடு இடிந்துவிட்டால் புதிய வீடு கட்டிக்கொள்வான். அதுபோல இறைவன் குடியிருக்கும் உடம்பாகிய கூடு அழிந்துவிட்டால், மற்றொரு கூட்டை இறைவன் செய்து கொள்வான்.

Chapter 7

GLOBAL CITIZEN

ஒன்றே குலம் ஒருவனே தேவன்





Alien Mother

7.1 Cow is our cosmic gift / பசு நம் பிரபஞ்ச தானம்

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே

- திருமந்திரம் 2104

Onre kulamum oruvane devanum
Nanre ninaimin namanillai naanaame
Senre pugangathi illai numsitthathu
Ninre nilaipera neerninain thuimmine

- Tirumantiram 2104

Alien, The Aathi yogi, Arthanaari, gifted us the cow, when he departed. Cow is our cosmic gift. All human beings are her children.

பூமிக்கு வந்த ஆதியோகி, அந்த அர்த்தநாரி, இங்கே இப்புவியின் மனித உற்பத்திக்காக தன்னை இரண்டாக பிளந்து கொடுத்துள்ளான். பசு, காளையென்று தனித்தனியாக. காளையே நாது நந்தி. வேற்றுலகவாசிகள் மனிதருக்குக் கொடுத்த கொடையே பசு. அவர்கள் பசுவையுமக்கு தானமாக கொடுத்துச் சென்றுள்ளார்கள். மனிதர்கள் பசுவின் குழந்தைகளே.

Alien foot

7.2 [illegible]

சார்ந்தவர்க்கு இன்பம் கொடுக்கும் தழல்வண்ணன்
பேர்ந்தவர்க்கு இன்னாப் பிறவி கொடுத்திடும்
கூர்ந்தவர்க்கு அங்கே குரைகழல் காட்டிடும்
சேர்ந்தவர் தேவரைச் சென்றுணர் வாரே

- திருமந்திரம் 2114

Saarnthavarku inbam kodukkum thazhalvannan
Pernthavarku innaappiravi koduthidum
Koornthavarku ange kuraikazhal kattidum
Serntavar thevarai senrunar vare

- Tirumantiram 2114

Many Tamil mystics, Sivanubava yogic practitioners received this cosmic alien foot, the foot of Aathi yogi, in their transcendal meditative mood.

[illegible] வினோதமாக வந்த அந்த அத்தநாரியின் சலங்கை ஒலி பாதம்..



Tamil siddhars are spiritual alchemist

7.3 திரும்பும் மாலங்கள்

மாலாங்கனே யிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாகமொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்ப வந்தேனே

- திருமந்திரம் 77

Maalangane yingu yaanvantha kaaranam
Neelanga meniyal Nerizhi yalodu
Moolanga maga mozhintha thirukkoothin
Seelanga vethathai seppa vanthene

- Tirumantiram 77

Tirumular here reveals his co disciple that the reason behind the creation of Sadhasiva aagamam, that is Tirumantiram in Tamil by God's wishes.

சதாசிவ ஆகமம் என்கிற திருமந்திரத்தை உருவாக்கியதன் காரணத்தை திருமூலர் இங்கே தன் சீடர் மாலங்கனை நோக்கி கூறுவதாக அமைந்திருக்கிறது இப்பாடல்.

இறைவனும் இறைவியும் தமக்கு கூறிய வேதத்தினை தமிழில் திருமந்திரமாக கூறவந்தேன் என்கிறார் திருமூலர்.

Attain holy spirits

7.4 நடுவு நின்றார் வழி சென்ற...

நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை.
நடுவு நின்றார் நல்ல தேவரும் ஆவர்
நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே

- தி.மந்திரம் 320

Naduvu ninraarkanri gnanamum illai
Naduvu ninraarkku naragamum illai
Naduvu ninraar nalla thevarum aavar
Naduvu ninarrar vazhi naanum ninrene

- Tirumantiram 320

According to Tirumular, if one who practises pranayama properly, he will fine tune the sushumnanaadi and transform into a wise man. This kind of yogic-breathing practitioner never goes to hell and he may become holy spirit and alien.

சுவாசமானது மூக்கிலுள்ள சந்திரநாடி, சூரியநாடி ஆகியவற்றின் வழியாக இடைவிடாது இயங்கும். இந்த இரு நாடிகளைத் தவிர, மூன்றாவதாக சுழுமுனை நாடி வழியாக சுவாசமானது இயங்குவதற்கு பயிற்சி வேண்டும். அந்தப் பயிற்சியை மேற்கொள்பவர்கள் ஞானவான்களாக ஆவார்கள். அவர்களுக்கு ஒருக்காலும் நரகம் இல்லை. மேலும் அவர்கள் வானவர்களாக மாறும் வாய்ப்பும் உள்ளது. எனவே 'நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே' என்று தி.மூலர் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார்.



The cosmic faculty

7.5 கணக்கறிந்தார்களே

கற்றும் சிவஞானம் இல்லாக் கலதிகள்
கற்றமும் விடார் துரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்று அன்பில் நிற்போர் கணக்கறிந்தார்களே

- திருமந்திரம் 318

Katrum sivagnanam illak kalathigal
Sutramum vidaar thurisaraar moodargal
Matrum palathisai kaanar mathiyilor
Katru anpil nirpor kanakkarinthargale

- Tirumantiram 318

One or two sperm cells entering a womb transforms into a human form. If a human loves his fellow human without caste, creed, colour, understands all are SIVA receives the SIVA consciousness. He is the learned man. Here this picture explains the same.

மனித உடம்பிலிருந்து வெளியேறும் உயிரணுக்களில் ஒன்றிரண்டுதான் இறை வடிவான மனித வடிவெடுக்கின்றன. அப்படி எடுத்தவர்களில் அன்பு நெறியில் நின்று, எல்லா உயிர்களிலும் தன்னுயிரை காண்பவர் எவரோ, அவரே கற்றறிந்த கணக்கறிவாளர், சிவஞானம் பெற்றவர்.

Avoid liquor and lust

7.6 காமமும் கள்ளும் கலதிகட்கே

காமமும் கள்ளும் கலதிகட்கே யாகும்
மாமலமும் சமயத்துள் மயலுறும்
போமதி யாகும் புனிதன் இணையடி
யோமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே

- தி.மந்திரம் 326

Kaamamum kallum kalathikatge yagum
Maamalamum samayathul mayalurum
Pomathi yagum punithan inaiyadi
yomaya aananthath theral unarvunde

- Tirumantiram 326

Liquor and lust make animal qualities in human. All pagan rituals give us arrogance, illusion, and Maya. But "Om is the Sivananda-wine, Universal nectar. When one inhales the cosmic sound "OM" with devotion of the Alien SIVA, the Adi Lord, he attains the cosmic bliss forever says Tirumoolar here confirms this.

காமமும் கள்ளும் அறிவில்லாதவர்களுக்கே ஆகும். ஆணவம், கன்மம், மாயை என்கிற மும்மலங்களை எல்லா சமயமும் தந்து மனிதர்களை மயக்குகிறது. 'ஓம்' என்பது 'சிவானந்தகள்'. அந்த ஆதி இறை பாதத்தை நினைத்து, ஓம் என்கிற பிரபஞ்ச ஒலியை உணர்ந்து ஏற்றிட ஆனந்த உணர்வு உண்டாகும்.

Semen power

7.7 சிவயோகியில் மருவி வீற்று ஜெயம்

பார்க்கின்ற மாதரைப் பாராது அகன்றுபோய்
ஓர்க்கின்ற உள்ளம் உருக அனல்மூட்டி
பார்க்கின்ற கண்ணாசை பாழ்பட மூலத்தே
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே

- திருமந்திரம் 1937

Paarkinra maatharai paarathu aganrupoi
Oorkinra ullamurukki anal mootti
Paarkinra kanaasai paazhpada moolathey
Serkkinra yogi Sivayogi thane

- Tirumantiram 1937

By controlling the five senses, not seeing the sensual look on beautiful girls and by activating his subtle power of kundalini to sahasrarar, one becomes Sivayogi and attains the state of SIVA.

பொதுவாக நம்மைக் கடந்து செல்லும் அழகிய மாதர்களைக் கண்ணுற்று பாராமல், உள்ளத்துள்ளே ஊடுருவி ஐம்புலன்களையும் கட்டுப் படுத்தி, மூலாதாரத்து குண்டலினி சக்தியை எழுப்பி, சஹஸ்ராரத்தில் சேர்க்கும் சாதனையே ஒருவரை சிவயோகியாக்கும் விந்து ஜெய சூட்சுமம் என்று திருமூலர் குறிப்பிடுகிறார்.



Moving temples

7.8 நடமாடும் கோயில்கள்

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதுஆமே

- திருமந்திரம் 1857

Padamaadak koyil bagavarku onru eeyil
Nadamadak koyil nambarku angu aaga
Nadamadak koyil nambarku onru eeyil
Padamadak koyil bagavarku athuaame

- Tirumantiram 1857

Respecting, helping, offering to our fellow citizen, the needy people around us (movable human temple) is the service to the Omnipotent.

மனிதன் படைத்த கோயில்களில் ஆண்டவன் குடியிருப்பதாக கருதிக் கொண்டு, பாலும், பழமும், பஞ்சாமிர்தம் கொண்டு பூசனை செய்வதால் ஆண்டவனுக்குப் பயனில்லை. நடமாடும் கோயில்களான மனித தெய்வங்களுக்கு உதவியால், அது ஆண்டவனுக்கு பூசனை செய்வதாக அமையும்.

The proclamation of Tirumular

7.9 திருமூலரின் பிரகடனம்

பின்னை நின்று என்னே பிறவிபெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே

- திருமந்திரம் 81

Pinnai ninru enne piravi peruvathu
Munnai nanraaga muyaltavam seikilar
Ennai nanraaga iraivan padaithanan
Thannai nanraagath Tamil seiyyumare

- Tirumantiram 81

If one gets noble birth in this world, he / she should have done good deeds with penance. That is why God chose me to write Tirumantiram particularly in Tamil language, which is the classical language of the world.

இந்த பிறவியை பயனுள்ள பிறவியாக ஆக்கவேண்டுமெனில் முந்தைய பிறவிகளில் பெரும் முயற்சி செய்து தவம் செய்திருக்க வேண்டும். நான் அவ்வாறு தவம் மேற்கொண்டதாலேதான் என்னை இறைவன் நன்றாக படைத்திருக்கிறான். எனென்றால் இறைவனைப் பற்றியும், பிரபஞ்சம் பிறந்தது குறித்து விளக்கி உலகுக்கு அறிவித்திட தமிழைத் தவிர சிறந்த மொழி எதுவும் இல்லை. ஆதலால் தமிழில் சதாசிவாகமம் என்கிற திருமந்திரத்தைப் படைக்க எனக்கு அருள் புரிந்துள்ளான் என்று திருமூலர் அறிவிக்கிறார்.



Ajapa OM

7.10 ஆன்மாவில் நிறைந்த மந்திரம் ஓம்

நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்றஉணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே

- திருமந்திரம் 85

Naanpetra inbam perugaiv vaiyagam
Vaanpatri ninra maraiporul sollidin
Oonpatri ninra unarvuru manthiram
Thaan patrap patrath talaippadum thane

- Tirumantiram 85

Tirumular achieved Sivanubavam and requested the global citizen to feel the great the same Sivabavam by meditating in the agna chakra with Ajapa mantra OM. He can experience the occult image of God.

திருமூலர் உலகுக்கு அறிவிப்பதாவது: தான் பெற்ற இன்பமாகிய சிவானுபவத்தை உலகினரும் பெற விரும்புகிறார். இந்த பிரபஞ்சம் முழுக்க வியாபித்திருக்கும் உணர்வுறு மந்திரமாகிய 'ஓம்' என்ற மந்திரத்தை முறையாக தியானித்து வருபவர்களுக்கு மறைபொருளாக உள்ள இறையன் புலப்படுவான்.

Chapter 8

MICRO-MACRO LINK

பிண்டத்தில் அண்டம்



Human antenna

8.1 உடலில் பாயும் சிவ அமுதம்

தலையடி யாவதறியார் காயத்தில்
தலையடி உச்சியில் உள்ளது மூலம்
தலையடி யான அறிவை அறிந்தோர்
தலையடி யாகவே தானிருந்தாரே

- திருமந்திரம் 2426

Thalaiyadi yava thariyar kaayathil
Thalaiyadi ucchiyil ullathu moolam
Thalaiyadi yaana arivai arinthor
Thalaiyadi yagave thanirunthare

- Tirumantiram 2426

Human head is like an antenna to receive the cosmic communications. When kundalini sakthi (serpent power) aroused from muladhara chakra thru ajna chakra to sahasrara chakra, cosmic honey will flow within human body.

மனித உடலின் மூலாதாரத்தில் உயிராற்றலாக விளங்கும் குண்டலினி சக்தியை, புருவ மத்தியில் உள்ள ஆக்கினை சக்கரத்திற்குக் கொண்டு வந்து, அந்த உயிருணர்வை தலை உச்சியில் மலரச் செய்யும் சஹஸ்ரார தாமரைக்குச் செலுத்தும் யோக வழிமுறையை அறிந்தோர்க்கு சிவஅமுதம் ஊற்றாகி உடல் முழுவதும் நிரம்பும்.

Vertical spinal cord:
A gift to human beings

8.2 ஞானத்து உழவு

ஆனை துரக்கிலென் அம்பு டறுக்கிலென்
கானத்து உழுவை கலந்து வளைக்கிலென்
ஏனைப் பதியினில் எம்பெருமான் வைத்த
ஞானத்து உழவினை நான் உழுவேனே

- திருமந்திரம் 2851

Aanai turakkilen ampoo darukkilen
Kaanathu uzhuvai kalanthu valaikilen
Eanaip pathiyinil emperuman vaitha
Gnanathu uzhavinai naan uzhuvene

- Tirumantiram 2851

Among the wild forest, though the tiger or elephant surrounds him, or encircled by poisonous arrow, he will not abandon the penance, confirms Tirumular in this hymn. Human are gifted with vertical spinal-cord to sit for meditation to receive the universal wisdom, Tirumular further affirms here.

திருமூலர், தான் மனிதராய் பிறந்த பிறவிப் பயன் என்ன என்பதைப் பற்றி தெளிவாகக் கூறுகிறார். எத்துனை துன்பங்கள் வந்தாலும் அதற்கு நான் அஞ்சேன். எனக்குக் கிடைத்த இந்த மானிடப் பிறவியில், உடலிலுள்ள ஆதார சக்கரங்களை இயக்கி, அதன் மூலம் சிவஞானம் பெறுவேன் என்கிறார்.

Invisible Four more bodies

8.3 நால்வகை உடம்பு

எண்சாண் அளவாய் எடுத்த உடம்புக்குக்
கண் கால் உடம்பில் கரக்கின்ற கைகளில்
புண்கால் அறுபத்தெட்டு ஆக்கை புணர்க்கின்ற
நண்பால் உடம்புதான் நால் உடம்பு ஆகுமே

- திருமந்திரம் 2127

Ensaan alavaai edutha udampukkuk
Kan kaal udambil karakinra kaikalil
Punkaal arupathettu aakkai punarkinra
Nanpaal udamputhan naal udampuaakume

- Tirumantiram 2127

People could only see the physical body, but Tirumular ascertains that there are four more bodies, consisting of water, fire, air, akash the subtle.

மனிதருக்கு இயற்கை வடிவமைத்துக் கொடுத்தது ஐவகை உடல்களே. அதில் (ஸ்தூல உடல்) பருவுடல் மட்டுமே நம் கண்ணுக்குப் புலப்படும். இதர நான்கு உடல்களும் கண்களுக்குப் புலப்படாது. அவை நீருடல், நெருப்புடல், காற்றுடல் மற்றும் நுண்ணுடல்.



Physical body with layers

8.4 உள்ளே கடவுள் கடவுள் உள்ளே

உருவம் நினைப்பவர்க்கு உள்ளுறும் சோதி
உருவம் நினைப்பவர் ஊழியும் காண்பர்
உருவம் நினைப்பவர் உம்பரும் ஆவர்
உருவம் நினைப்பவர் உலகத்துள் யாரே

- திருமந்திரம் 2841

Uruvam ninaipavarkk uulloorum sothi
Uruvam ninaippavar oozhiyum kaanbar
Uruvam ninaippavar umbarum aavar
Uruvam ninaippavar ulaguthul yaare

- Tirumantiram 2841

Tirumular requests human to visualise the inner body in yoga practice, inner journey. This inner engineering helps one to foresee cosmic bliss, cosmic wisdom and deluge also.

அகக்கண்களால் தமது உருவத்தை நினைப்பவர்க்கு சோதி வடிவம் தெரியும். அத்துடன் அவர்களால் ஊழிப் பிரளயத்தையும் காணமுடியும். அவர்கள் வானோர்களாக மாறவும் முடியும். ஆனால் இப்படி தவநிலை இயற்றாமல்ல உலகத்தினர் உள்ளனரே என்று திருமூலர் கவலை கொள்கிறார்.

Mismanagement of breathing

8.5 கூத்தி வளர்த்த கோழிக்குஞ்சு

ஏற்றம் இரண்டுள ஏழு துரவுள
மூத்தான் இறைக்க இளையான் படுத்தநீர்
பாத்தியிற் பாயாது பாழ்ப்பாய்ந்து போயிடிற்
கூத்தி வளர்த்ததோர் கோழிப்புள் ளாமே

- தி.மந்திரம் 2873

Eatram irandula ezhu turavula
Moothan iraikka ilaiyaan padutthaneer
Paathiyir paayathu paazhppaainthu poyidir
Koothi valarthothar kozhippul lame

- Tirumantiram 2873

Proper utility of pranayama brings SIVANUBAVAM

முக்குப் பயிற்சியையும் யோக சாதனையையும் முறையாகக் கற்றுணராத சாதகரின் முயற்சி பாழ்பட்டு விடுவது.

Mandalas in human body

8.6 மூன்று மண்டலத்து முதல்வனை

தோன்றி என்னுள்ளே சுழன்று எழுகின்றதோர்
மூன்றுபடி மண்டலத்து முதல்வனை
ஏன்றுஎய்தி இன்புற்று இருந்தே இளங்கொடி
நான்று நலஞ்செய் நலம் தருமாறே

- திருமந்திரம் 2445

Thonri ennulle suzhanru ezhuginrathor
Moonrupadi mandalathu muthalvanai
Eanrueithi inputru irunthey ilangodi
Naanru nalanjei nalam tarumaare

- Tirumantiram 2445

Serpent power by doing kundalini yoga passes thru 3 mandalas, namely, Agni, soorya, Chandra and finally reaches the pineal gland and enjoys Sivanubhavam.

குண்டலினி யோகா செய்வதன் மூலம், உயிராற்றலாகியசூலாதாரத்தில் உறங்கும் குண்டலினி சக்தி விழிப்படைந்து, முதுகுத் தண்டின் வழியாக மேல் நோக்கியவாறு உடம்பின் மூன்று (அக்னி, சூரிய, சந்திர) மண்டலங்களைக்கடந்து, சஹஸ்ரார பேரொளியை தரிசிக்கும். அதுவே பரசிவமாகும்.



Cosmic flower

8.7 ஆதிப்பிராணின் மலர் வடிவம்

திகையெட் டும்தே ரேட்டும் தேவதை எட்டும்
வகையெட் டுமாய் நின்ற ஆதிப் பிரானை
மிகையெட் டு நான்கு மற்றாங்கே நிறைந்து
முகையெட் டும் உள்நின்று உதிக்கின்ற வாறே

- திருமந்திரம் 2531



Thikaiyettum therettum thevathai ettum
Vagaiyettumai ninra aathip praanai
Vagaiyettu naangu matrange nirainthu
Mugaiyettum ulninru uthikinra vare

- Tirumantiram 2531

Yoga-practitioner visualizises the aathi yogi as cosmic flower in his Sahasra.

யோகி, தனது சஹாஸ்ராரத்தில் எட்டுத்திக்கும் நிறைந்துள்ள ஆதிப்பிராணின் மலர் வடிவத்தைத் தரிசிக்கிறார்.

Great wisdom

8.8 தூய்மணி = பிடரிக்கண்

தூய்மணி தூயனல் தூய ஒளிவிடும்
தூய்மணி தூயனல் தூரறி வாரில்லை
தூய்மணி தூயனல் தூரறி வார்கட்குத்
தூய்மணி தூயனல் தூயவும் ஆமே

- திருமந்திரம் 2554

Thooimani thooyanal thooya olividum
Thooimani thooyanal thoorari varillai
Thooimani thooyanal thoorari varkatguth
Thooimani thooyanal thooyavum aame

- Tirumantiram 2554

Tirumular here refers to Pineal gland in brain that emits the power of great wisdom.

திருமூலர் இங்கே தூய்மணி என்று குறிப்பிடுவது சஹஸ்ராரத்தில் உள்ள பிடரிக்கண்ணே. தூயனல் என்பது சுழுமுனை வழியாக எழும் மூலக்கனல் ஆகும். மூலக்கனலால் பிடரிக்கண் தூண்டப்பட்டு ஒளிர்கிறது.

Divine circuit

8.9 என்னுள்ளே இறை

உருவிலி ஊனிலி ஊனம் ஒன்றில்லி
திருவிலி தீதிலி தேவர்க்கும் தேவன்
பொருவிலி பூதப்படை யுடையாளி
மருவிலி வந்து என்மனம் புகுந்தானே

- திருமந்திரம் 2941



Uruvili oonili oonam onrilli
Thiruvili theethili thevarkkum thevan
Poruvili poothappadai yudaiyaali
Maruvili vanthu enmanam pugunthane

- Tirumantiram 2941

Here the author indicates through this picture that divine circuit is nothing, but Pineal gland in human body.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறையருள் என்னுள்ளேயும் உயிர்நாடியாய் கலந்து நிற்கின்றான்.

Sivanubavam

8.10 சிவானுபவர்

பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமுதாகும் மதுரமும்
போலும் துரியம் பொடிபட உள்புகச்
சீலம் மயிர்க்கால் தொறும் தேக்கிடுமே

- தி.மூ.திரு 2831



Palodu thenum pazhathul iratamum
Vaaliya peramuthakum mathuramum
Polum thuriyam podipadaulpugach
Seelam mayirkkal thorum thekkidume

- Tirumantiram 2831

Kundalini Yoga Meditation brings cosmic-dew (Sivanubavam) to every human bio cell, when the practitioner is in transcendal meditation, astral travel from Duriyam to duriyadheedam.

யோக சாதனையாளர் துரிய நிலையைக் கடந்து, துரியாதீத நிலைக்குச் செல்லும் போது பாலெலியில் சிவானுபவத்தை உள் பெற்று இன்பநிலை அடைகின்றார்.

Tantra, spaceless and timeless

8.11 அவன், அவள் = அதுவே

கலந்து நின்றாள் கன்னி காதலனோடு
கலந்து நின்றாள் உயிர் கற்பனை எல்லாம்
கலந்து நின்றாள் கலை ஞானங்கள் எல்லாம்
கலந்து நின்றாள் கன்னி காலமுமாமே

- திருமந்திரம் 1215



Kalanthu ninraal kanni kaathalanodu
Kalanthu ninraaluyir karpanai ellam
Kalanthu ninraal kalai gnanangal ellam
Kalanthu ninraal kanni kaalamumame

- Tirumantiram 1215

When the practitioner is in astral travel of deep meditation, he can feel that Siva and sakthi is within. The twin forces together exist as Spaceless and Timeless

தத்துவாசி

அவன் + அவள் = அதுவே

ஒருவன் + ஒருத்தி = ஒருவராமே



The great asana and mudra connects

8.12 வஜ்ராசனத்தில் -அசுவினி முத்திரை

மலைமேல் மழைபெய்ய மான்கன்று துள்ளக்
குலைமேல் இருந்த கொழுங்கனி வீழ
உலைமேல் இருந்த உறுப்பெனக் கொல்லன்
முலைமேல் அமிர்தம் பொழிய வைத்தானே

- திருமந்திரம் 2882

Malaimel mazhipeiyya maanganru thullak
Kulaimel iruntha kozhunganiveela
Ulaimel iruntha urupenak kollan
Mulaimel amirtham pozhiya vaitthane

- Tirumantiram 2882

Vajrasana and Ashwini mudra brings Sivanubavam.

வஜ்ராசனத்தில், அசுவினி முத்திரை யிட்டு, தூய நிலையில் இருக்கும் யோக சாதனையாளர் சிவானுபவம் பெறுவர்.

Cosmic dance

8.13 அண்ட பிண்ட அற்புதக்கூத்து

அங்கி தமருகம் அக்குமாலை பாசம்
அங்குசம் சூலம் கபாலம் உடன்ஞானம்
தங்கு உபயந்தரு நீலமும் உடன்
மங்கையோர் பாகமாய் மாநடம் ஆடுமே

- திருமந்திரம் 2780

Angi thamarugam akkumaalai pasam
Angusam soolam kabaalam udangnanam
Tangu ubayantharu neelamum udan
Mangaiyor pagamai maanadam aadume

- Tirumantiram 2780

Tirumular explains the great concept that every human body consists of athma, Orion constellation, stars and functions of expanding Universe

அண்டத்தில் உள்ளது பிண்டத்திலும் உள்ளதென்ற கருத்தை திருமூலர் விளக்குகிறார். ஆத்மாக்களும், அவற்றின் உறைவிடமான ஓரியன் நட்சத்திரக் கூட்டங்களும், அண்டப் பேரண்டங்களும் அவற்றின் இயக்கங்களும் கொண்ட இப்பிரபஞ்சம் மனித உடலில் கலந்து அற்புதக் கூத்தாடுகிறது.



Cosmic Ambrosia

8.14 எட்டிப்பழ இலைப்பு

கொட்டியும் ஆம்பலும் பூத்த குளத்திடை
எட்டியும் வேம்பும் இனியதோர் வாழையும்
கட்டியும் தேனும் கலந்துண்ண மாட்டாதார்
எட்டிப் பழத்துக்கு இளைக்கின்ற வாறே

- திருமந்திரம் 2901

Kottiyum aampalum pootha kulathidai
Ettiyum vempum iniyathor vazhaiyum
Kattiyum thenum kalanthunna maattathar
Ettip pazhathukku ilaikkinra vare

- Tirumantiram 2901

Cosmic Ambrosia is over the head, reachable. But sensual pleasures always pull down us.

நற்கனிகள் பல அருகில் இருந்தாலும்; எட்டிப் பழத்தின் மேல் ஆசை கொள்ளும், மோக, விகார மனிதர்களை சுனிப சம்பாஷை மூலம் சாடுகிறார் திருமூலர்.

எட்டி = ஆசை, மோகம், காமம் போன்ற இவ்வுலக உணர்வுகள், sensual pleasures

7up

8.15 கடல் ஏழுங்கண்டேனே

ஆறு தெருவில் அகப்பட்ட சந்தியில்
சாறு படுவன நான்கு பனையுள
ஏறற்கு அரியதோர் ஏணியிட்டு அப்பனை
ஏறலுற்றேன் கடல் ஏழுங்கண்டேனே

- திருமந்திரம் 2868

Aaru theruvil agappatta santhiyil
Saaru paduvana naangu panaiyula
Erargu ariyathor eaniyittu appanai
Eralutren kadal ezhungandene

- Tirumantiram 2868

Tirumular documents his own experience in this hymn allegorically. He has crossed his six aadhara-chakras, duriyam, duvathasaangam, duriyadheedham and above by deep meditation with his kundalini power. In this astral-travel, he crosses beyond galaxy where he identifies Orion constellation of seven stars.

தியானத்திலிருந்த திருமூலர், தான் கண்ட அகக்காட்சியை இங்கே தனிய சம்பாஷனையில் விளக்குகிறார். ஆறு ஆதாரக்கிரந்திகளைக் கடந்து, துரிய, துவாதசாந்த வணியில் ஏறி, ஏழு கடலுக்குமேல் இருக்கும் இறை இருப்பிடமான திருவாதிரை நட்சத்திரக் கூட்டத்தைக் கண்டேனே என்கிறார்.



Black-hole and white-hole

8.16 உண்டு உமிழும் பரன்

பரன் எங்கும் ஆகிப் பரந்துற்று நிற்கும்
திரன் எங்கும் ஆகிச் செறிவு எங்கும் எய்தும்
உரன் எங்கும் ஆய் உலகு உண்டும் உமிழ்க்கும்
வரம் இங்ஙன் கண்டு யான் வாழ்ந்துற்றவாறே

- திருமந்திரம் 2590

Paran engum aagip paranthutru nirgum
Tiran engum aagi serivu engum eithum
Uran engum aaiulagu undum umilkkum
Varam ingan kandu yaan vaazhuntutravere

- Tirumantiram 2590

In this rotating universe, all living particle makes the cosmic pillar revolve. Black hole, obsorbes, plants, animals, human, stars and planets, when they are all depleted. The subtle recycle process goes on like obsorbing and spitting. Recycle, recreation, and rebirth with another data come out through white-hole This science is experienced by Tirumular, documented here in this hymn

பிரபஞ்சம் முழுவதும் வியாபித்து நிற்கும் பரம்பொருள். பிரபஞ்சத்தில் வாழும் விண்மீன்களையும் இதர கோள்களையும் உண்ணுதல் மற்றும் உமிழ்தல் ஆகிய செயல்கள் புரிவதை நான் கண்டுகொண்டேன் என்கிறார் திருமூலர்.

Cosmic honey / Sivanubavam

8.17 அமுதம் பருகுதல்

நணுகில் அகல்கிலன் நாதன் உலகத்து
அணுகில் அகன்ற பெரும்பதி நந்தி
நணுகிய மின்னொளி சோதி வெளியைப்
பணியின் அமுதம் பருகலு மாமே

- திருமந்திரம் 2811

Nanugil agalgilan Nathan ulagathu
Anugil aganra perumpathi nanthi
Nanugiya minnoli sothi veliyaip
Paniyin amutham parugalu maame

- Tirumantiram 2811

Tirumular here speaks about the aathi-yogi, Nanthi. Meditation is the cause that guides us to reach inner nanthi and provides cosmic-honey to yoga practitioners.

நந்தியாகிய பரம்பொருளை நாம் யோகசாதனை மூலம் அணுகினால் அவன் மின்னொளியாகவும்; சோதி மயமாகவும், வெட்ட வெளியாகவும் காட்சியளிப்பான். அத்துடன் சிவ அமுதத்தையும் நமக்குப் பருக நல்குவான்.

Our destination

8.18 நாதன் இ டர்பாடு நாடுதல்

வான்நின்று இடிக்கிலென் மாகடல் பொங்கிலென்
கானின்ற செந்தீக் கலந்துடல் வேகிலென்
தானொன்றி மாருதம் சண்டம் அடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவேன் நானே

- திருமந்திரம் 2850

Vaninru idikilen magadal pongilen
Kaaninr asentheek kalanthudal vegilen
Thanonri marutham sandam adikilen
Nanonri nathanai naduven naane

- Tirumantiram 2850

Tirumular affirms that if our earth completely collapses through natural disorders, he never gives up the worshipping the Omnipotent.

வானம் பேரிடியாக இடித்தாலும்; கடல்பொங்கி பிரளய சுனாமி அலை எழுந்தாலும்; காட்டுத் தீ நாலெங்கிலும் பரவி என்னுடல் வெந்துபோனாலும், ஊழிக்காற்று அடித்தாலும் பரம்பொருளையே நான் நாடுவேன் என்று உறுதியளிக்கிறார் திருமூலர்.


Chapter 9

SPACE

பரவெளி

The purpose of human birth

9.1 மறுபிறப்பு அறுத்தல்

பறக்கின்ற ஒன்று பயனுற வேண்டின்
இறக்கின்ற காலத்தும் ஈசனை உள்கும்
சிறப்பொடு சேரும் சிவகதி பின்னைப்
பிறப்பொன்று இலாமையும் பேருல காமே

- திருமந்திரம் 2108

Parakkinra onru payanura vendin
Irakkinra kalatthum eesanai ulgum
Sirappodu serum sivagathi pinnaip
Pirapponru ilaamaiyum perula game

- Tirumantiram 2108

Saint Tirumular here speaks the subtle knowledge that the purpose of human birth is to unite with the Holy kingdom, ie Orion constellation which bestows upon human mukthi, no rebirth

உடலை விட்டு ஆன்மா நீங்குங்போது, அந்த உடலில் அடங்கியிருந்த மனிதனின் மனம், பல்வேறு விருப்பு வெறுப்புகளை கொண்டிருக்கும். அந்த நிலையின் காரணமாக அது பரம்பொருளை மறந்து விடும். அது எடுத்த இந்தப் பிறவியின் அனுபவங்களுடன் மீண்டும் பிறவித்தொடரில் சிக்கிக்கொண்டு துன்பத்தை அனுபவிக்கும். ஆசைகளை ஒழித்த மனமானது, மும்மலங்களையும் எரித்து, காற்றில் கலந்து, விண்ணில் பரந்து, கடந்தலையையும் கடந்து சிவகதி எனும் பேரொளியில் கலக்கும். அந்த ஆன்மாவிற்கு மறுபிறவி கிடையாது.

How to reach the destination?!

9.2 இமையவரோடு இணைதல்

விடுகின்ற சீவனார் மேலெழும் போது
நடுநின்று நாடுமின் நாதன்தன் பாதம்
கெடுகின்ற வல்வினை கேடில் புகழோன்
இடுகின்றான் உம்மை இமயவ ரோடே

- திருமந்திரம் 2110

Viduginra seevanar melezhum pothu
Naduninra naadumin naathantan paatham
Keduginra valvinai kedil pugazhon
Iduginraan ummai imayava rode

- Tirumantiram 2110

When death comes, every human dislikes and cries. The mind consciousness always carries the past sensual experiences he / she has felt. But here saint Tirumular guides human to think the holy kingdom in dying moments. Then the soul will reach the kingdom.

மனித உடலை விட்டு உயிர் பிரிகையில் மனம் கதறும். அக்கூச்சலிலிருந்து விடுபட்டு, நடுநின்ற இறை பாதத்தை மனம் நினைக்குமானால், அந்த ஆன்மாவை இமயவரோடு இணைத்து வைக்கிறது இறை.

Holy kingdom, SIVANUBHAVAM

9.3 கொர்பேறும் கதி சிவகதி

சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

- திருமந்திரம் 2716

Viduginra seevanar melezhum pothu
Naduninra naadumin naathantan paatham
Keduginra valvinai kedil pugazhon
Iduginraan ummai imayava rode

- Tirumantiram 2716

According to Tirumular, mere chanting the mantra "Siva Siva" is nothing to help the yoga practitioner but concentrating kundalini power in the anahatha (fire-Si) and Vishutthi (Air-Va) chakras, the practitioner can reach the Holy kingdom, SIVANUBHAVAM, and no rebirth takes place after death.

இந்தப் பாடலை மேலோட்டமாகப் பார்க்கும் போது 'சிவ சிவ' என்னும் மந்திரத்தை செபிப்பவர்களுக்கு சிவகதி கிடைக்கும் என்பது போல் தோன்றும். ஆனால் திருமூலர் கூறவருங்கருத்து வேறு. அதாவது, 'சி' என்பது நம் உடலில் மார்புப் பகுதியில் உள்ள அனாஹத சக்கரமாகும். 'வ' என்ற எழுத்து உடலில் கழுத்துப் பகுதியில் உள்ள விசுத்தி சக்கரமாகும். யோக சாதனையாளர் தவநிலையில் குண்டலினி சக்தியை மேற்கண்ட இரண்டு ஆதார மையங்களில் நிலைபெறச் செய்பவர்களுக்கு 'சிவகதி'யாகிய பிறவாநிலை கிட்டும்.

Star Boat / Vehicle for moon

9.4 நட்சத்திரப் படகு

போகின்ற வாறே புகுகின்ற அப்பொருள்
ஆகின்ற போதும் அரன்அறிவான் உளன்
சாகின்ற போதும் தலைவனை நாடுமின்
ஆகின்ற அப்பொருள் அக்கரை ஆகுமே

- திருமந்திரம் 2107

Poginra vaare pugukinra apporul
Aaginra pothum aran arivaan ulan
Saaginra pothum talaivanai naadumin
Aaginra apporul akkarai aagume

- Tirumantiram 2107

Every planet has its own vehicles. The moon has star boat which can carry aathmas (coming from earth after death) to reach Orion constellation, the Holy kingdom.

மரணத்தின்போது உடலை விட்டு நீங்கும் உயிரானது பால்வெளியை நாட வேண்டும். அவ்வாறு நாடினால், அந்த உயிர் சிலகதியை அடையும் பொருட்டு, பூமிக்கு அருகிலுள்ள சந்திரனில் புகுந்து சந்திரனின் வாகனமான நட்சத்திரப் படகில் ஏறி இறை இருப்பிடமான 'ஓரியன்' நட்சத்திரக் கூட்டத்திற்குச் செல்லும்.

Star children / Hidden truth

9.5 பரனறிவு செப்பல்

அறிவிக்க வேண்டாம் அறிவற்று அயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்
அறிவற்று அறியாமை எய்தி நிற்போர்க்கு
அறிவிக்க தம்அறிவார் அறிவோரே

- திருமந்திரம் 2327

Arivikka vendaam arivatru ayarvorkkum
Arivikka vendaam arivir serivorkkum
Arivutru ariyaamai eithi nirporkku
Arivikka thumarivaar arivore

- Tirumantiram 2327

Vertical spinal cord is the cosmic gift to human beings to receive cosmic records by sitting yoga posture. And here Tirumular emphasizes that eligible people are fit to get the cosmic knowledge.

மனிதராய் பிறந்த அனைவருக்கும் தலையில் மூளையையும், அதன் தொடர்ச்சியான செங்குத்து முதுகுத் தண்டினையும் இறைவன் படைத்துள்ளான். வேறு ஜீவராசிகள் எதற்கும் முதுகுத்தண்டு செங்குத்து நிலையில் இல்லை. செங்குத்தான முதுகுத்தண்டின் பயன் யோகசாதனை செய்து பிரபஞ்ச அறிவை பெறுவதற்கேயாகும். இந்த பிரபஞ்ச அறிவே பரனறிவாகும். இந்த பரனறிவை தகுதியான நபருக்கே அறிவிக்க வேண்டும் என்று திருமூலர் வலியுறுத்துகிறார்.

Planetary vehicles

9.6 உடம்பினை உட்கொண்ட விருந்து

உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்போடு உயிரிடை நட்பு அறியாதார்
மடம்புகு நாய்போல் மயங்கு கின்றாரே

- திருமந்திரம் 2148

Udampum udampum udampai tazhuvi
Udampidai ninra uyirai ariyaar
Udampodu uyiridai nadpu ariyaathar
Madampugu naaipol mayangu ginraare

- Tirumantiram 2148

Tirumular concerns over human being that people always concentrate only sensual pleasures and exploits one another in the name of love and lust.

They do not know the invisible other four versions of human body, ie the subtle body, mind, knowledge, and aathma. They are all integrated

St. Tirumular wants that people should know about the salient features of human body and these 4 componets

ஸ்தூல உடம்பும் சூக்கும உடம்பும் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டு பின்னிப் பிணைந்துள்ளன. அந்த ஸ்தூல உடம்புக்கும், அன்னாவிற்கும் இடையிலான நட்பை அறியாத மனிதர்கள் புலன் இன்பங்களைத் துய்த்தறிய ஆசை கொள்கின்றனர். ஆனால் மனிதர்கள் தம் உடம்பிலுள்ள அனைவரை அறியாமல், உடம்புக்குள்ளே உயிர் இருப்பதும், உயிருக்குள்ளே மனம் இருப்பதும், மனத்தினுள்ளே அறிவு நடப்பதும், அந்த அறிவுக்குள்ளே ஆன்மா அடங்கியிருப்பதும் தெரியாமல் இருக்கின்றார்கள். மடப்பாவியில் மூழ்ந்த நாய்போல, எதை தின்பது, எதை விடுவது என்று தெரியாமல் மயங்குகின்றார்களே என்று கவலைகொள்கிறார் திருமூலர்.

Who knows the cosmic functions?

9.7 பிரபஞ்சக்கூத்தை யாரறிவாரே?

சிற்பரஞ் சோதி சிவானந்தக் கூத்தனைச்
சொற்பதமாம் அந்தச்சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனைப் பொன்தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யாரறி வாரே

- திருமந்திரம் 2723

Sirparanch sothi sivananthak koothanai
Sorpathamam antha suntharak koothanaip
Porpathik koothanaip ponthillaik koothanai
Arputhak koothanai yari vare

- Tirumantiram 2723

Tirumular here explains 5 funtamental functions of the great universe in unique way and calls these functions as "koothu" (dance) He also describes human body as universe, that has 5 kinds of breath being done in the body, which nobody knows the exact methodology, he worries.

பிரபஞ்சத்தைப் படைத்துப் பராமரிக்கும் இயக்கம் ஐவகை கூத்து என்று திருமூலர் விளக்கியுள்ளார். அவை சிவானந்தக் கூத்து, சுந்தரக்கூத்து, பொற்பதிக்கூத்து, பொன்தில்லைக் கூத்து, அற்புதக்கூத்து ஆகியவை ஆகும். இறைவனின் நுண்ணிய ஐந்து ஆற்றல்களாக உடம்பிலும் இருப்பதாகவும், பிரபஞ்சத்தில் நடைபெறும் இந்தச்செயல்கள் மனித உடலிலும் நடக்கிறது. மனித உடலில் இந்த கூத்துக்கு கலாசம் என்று பெயர். இந்த கலாச சுழற்சியை முறைப்படுத்துவதே பிராணயாமம். அவ்வாறு முறைப்படுத்தி பயிற்சி பெற்றவர் பரம்பொருளைக் காண்பார்.



Darshan of cosmic hero

9.8 பிரபஞ்ச நாயகனின் விஸ்வரூபம்

ஆகாசமாம் உடல் அம்கார் முயலகன்
ஏகாசமாம் திசைஎட்டும் திருக்கைகள்
மோகாயமுக்கண்கள் மூன்றொளி தானாக
மாகாய மன்றுள் நடம் செய்கின் றானே

- திருமந்திரம் 2774

Akasamam udal amkaar muyalagan
Ekasamam thisaiettum thirukkaigal
Mokaya mukkangal moonroli thanaga
Maakaya manrul nadam seikin raane

- Tirumantiram 2774

In this Tirumantira hymn, Tirumular denotes that the vast sky is the cosmic hero's body with eight hands and three eyes dancing in the air.

இப்பாடலில் பிரபஞ்ச நாயகனாகிய பரம்பொருளின் வடிவம் சொல்லப் படுகிறது. விரிந்து பரந்த ஆகாயமே உடலாகவும் எட்டுத்திசையும் கைகளாகவும், மூன்று கண்கள் மூவகை ஒளியாகவும் ஆகாயத்திலே நடனம் ஆடுகின்றார் என்கிறார் திருமூலர்.

The shape of Aathma, "ա"

9.9 ஆத்மாவின் வடிவம்

அந்தமிலானுக்கு அகலிடம் தானில்லை
அந்தமில்லானை அளப்பவர் தாமில்லை
அந்தமில்லானுக்கு அடுத்த சொல்தானில்லை
அந்தமில்லானை அறிந்துகொள் பத்தே

- திருமந்திரம் 1031

Anthamilanuku agalidam thaanillai
Anthamillanai alappavar thaamillai
Anthamillanukku aduttha solthanillai
Anthamillanai arinthukol patthey

- Tirumantiram 1031

The God's particle resembles as aathma in every human body. The shape of the aathma (soul) is defined by Tirumular as the form of "YA" in the Tamil alphabet.

ஆதி அந்தமில்லாத இறைவன் ஒவ்வொரு சீவனுக்குள்ளும் ஆத்மாவாக கலந்து நிற்கிறான். அந்த ஆத்மா ஒவ்வொரு சீவனுக்குள்ளும் 'ய' என்கிற வடிவத்திலும், பின்னர், அது ஆகாயத்தில் ஒடுங்குகின்ற இடமும் 'ய' என்கிற வடிவமாகவும் உள்ளது என்பதை, தம் நுண்ணுணர்வால் உணர்ந்த திருமூலர், ஆத்மாவின் வடிவத்தை இப்பாடலில் தமிழ் எழுத்தின் பத்தே 'ய' என்று வரையறுக்கிறார்.



Carrier to Orion

9.10 ஓரியனுக்குச் செல்லும் ஆத்ம வாகனம்

மெய்கலந்தாரொடு மெய்கலந்தான் தன்னைப்
பொய்கலந்தார் முன்புகுதா ஒருவனை
உய்கலந்தூழித் தலைவனுமாய் நிற்கும்
மெய்கலந்தின்பம்விளைத்திடும் மெய்யர்க்கே

- திருமந்திரம் 2600



Meikalanthaorodu meikalanthan thannaip
Poikalanthar munpugutha oruvanai
Uikalanthoozhith talaivanaumaai nirgum
Meikalanthinbam vilaithidum meyyarkke

- Tirumantiram 2600

There are so many transit places of souls for rebirth according to one's karma. Tirumular refers the special space-craft designed for carrying ripe souls (aathmas), to Orion constellation, where the cosmic yogi waits to receive them.

ஊழிக்காலத்தில் உடல்களை இழந்த ஆன்மாக்களை அழைத்துக் கொண்டு செல்லும் வாகனமே ஆத்ம வாகனம்.



God is in the Betelgeuse of Orion

9.11 சிட்டன் இருப்பிடம் = உள்ளேயும் வெளியேயும்

வட்டங்கள் ஏழும் மலர்ந்திடும் தம்முளே
சிட்டன் இருப்பிடம் சேர அறிகிலார்
ஒட்டி இருந்துள் உபாயம் உணர்ந்திடக்
கட்டி இருப்பிடம் காணலும் ஆமே

- திருமந்திரம் 768



Vattangal ezhum malarnthidum thammulle
Sittan iruppidam sera arikileer
Otti irunthul upaayam unarnthidak
Katti iruppidam kaanalum aame

- Tirumantiram 768

By several names like Nanthi, naathan, irai, sivam, annal, sittan, and talaivan, Tirumular calls the creator, aathi-yogi. But they are all one representing our aathma in human body and the Betelgeuse star of Orion constellation in the sky, (Thiruvaathirai-star), is indicated in this picture. During month of February and March, this star mandala is very clear appearing near earth orbit at night sky.

நந்தி, நாதன், இறை, சிவம், அண்ணல், சிட்டன், தலைவன் என்று திருமந்திரத்தில் திருமூலர் கட்டிக்காட்டும் பெயர்களுக்குரிய ஒருவனே தேவனாகிய இறைவன். அந்த இறைவன் மனிதருக்குள் ஆன்மாவாகவும், பரவெளியில் 'ஓரியன்' நட்சத்திரக்கூட்ட மோதிரவளையமாகவும் விளங்கிவருகிறான் என்பதை திருமூலர் விளக்குகிறார்.

Chapter 10

UNIVERSE

பிரபஞ்சம்

Inner vision of cosmic function

10.1 ஆனந்தக்கூத்து

உள்ளத்தும் உள்ளான் புறத்துள்ளான் என்பார்க்கு
உள்ளத்தும் உள்ளான் புறத்துள்ளான் எம்மிறை
உள்ளத்தும் இல்லை புறத்தும் இல்லை என்பார்க்கு
உள்ளத்தும் இல்லை புறத்தும் இல்லை தானே

- திருமந்திரம் 1532

Ullatthum ullan purathullan enpaarkku
Ullatthum ullan purathullan emmirai
Ullatthum illaipurathum illai enpaarkku
Ullatthum illai purathum illai thane

- Tirumantiram 1532

Tirumular motivates the God abiding citizens that they can find HIM through an ethical way, tapas, yogic-meditation to feel the inner vision, what he has felt in both outer and inner and he strongly confirms that the atheists cannot witness God inner and outer.

மனிதனுக்கு அறிவு தோன்றிய காலம் முதலே இறை நம்பிக்கையும், இறை மறுப்பும் இருந்து வருகிறது. இது தொடர்பாக திருமூலர் நமக்கு ஒரு தெளிவான பதிலைத் தந்துள்ளார். இறை உண்டென்பார்க்கு அது உண்டு. இறை இல்லை என்பார்க்கு அது இல்லைதானே என்கிறார்.



Resting place of aathmas

10.2 பட்டப் பெயர் - அனைத்துப் பசுக்கள்

பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன் ஒருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்கோல் போடில்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே

- திருமந்திரம் 2193

Pasukkal palavannam paloru vannam
Pasukkalai meikkinra aayan oruvannam
Pasukkalai meikkinra aayankol podil
Pasukkal talaivanai patrividave

- Tirumantiram 2193

Even though aathmas, (souls) are many, their form is similar. Even if they are standing and revolving in different places, they all will eventually be mingled into divine kingdom (cosmic pillar).

இறைவனைப் பல கோயில்களில் அமைந்த ஜீவராசிகளும் தனித்தன்மை கொண்டு இயங்குகிறது. அவற்றுக்குள் ஒடுங்கி நிற்பது ஆன்மாவாகிய இறைத்துகள். இந்த ஜீவராசிகளை இயக்கும் இறைவனார், தனது இயக்கத்தை நிறுத்திவிட்டால், ஜீவன்கள் யாவும் இறைவனைப் பற்றி ஒன்றாகிவிடும்.

அதுபோல பிரபஞ்சத்தில் உள்ள நட்சத்திரங்கள், பால்வெளி மண்டலங்கள், கேலக்ஸிகள் யாவும் இறைவின் கட்டுப்பாட்டில் அடங்கியுள்ளன. இறை இயக்கம் நின்றுவிட்டால், அண்டத்தில் உள்ள கோடிக்கணக்கான மண்டலங்களும், நட்சத்திரங்களும் கருந்துளையாக இருக்கும். இறைவனுடன் ஐக்கியமாகி விடுகின்றன.

Expanding Universe

10.3 பிரபஞ்ச தரிசனம்

விண்ணா இளம்பிறை மேவிய குண்டத்துச்
சொன்னால் இரண்டும் சுடர்நாகம் திக்கெங்கும்
பன்னாலு நாகம் பரந்த பரஞ்சுடர்
என்ஆகத் துள்ளே இடங் கொண்டவாறே

- திருமந்திரம் 1023

Vinna ilampirai meviya kundathu
Sonnal irandum sudarnaagam thikkengum
Paanalu nagam parantha paranchudar
Enaagath ulle idanlondavare

- Tirumantiram 1023

Tirumular visualizes the expanding Universe in his inner vision. In our solar system, planets revolve around Sun. Sun and other stars revolve in a Milky-way, but milky ways revolve in a Galaxy. Infinite Galaxies are revolving and expanding the Universe day by day.

நட்சத்திரங்களும், கோள்களும், பால்வெளி மண்டலங்களும், அண்டங்களும், பேரண்டங்களும் கொண்ட பிரபஞ்சத்தின் வடிவம் ஒரு குண்டம் போலவும், அது தினந்தோறும் விரிவு அடைந்து, மென்மேலும் வளர்ந்து கொண்டுகிறது என்று திருமூலர், ஒட்டு மொத்த பிரபஞ்சமும் எவ்வாறு இருக்கும் என்பதை அகக்காட்சியாகக் கண்டு மகிழ்ந்து விளக்குகிறார்.

Universal dance

10.4 திருமந்திரக் கூத்து

வேதங்கள் ஆட மிகு ஆகமம் ஆடக்
கீதங்கள் ஆடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்கள் ஆடப் புவனம் முழுதாட
நாதம் கொண்டாடினான் ஞானனந்தக் கூத்தே

- திருமந்திரம் 2729

Vinna ilampirai meviya kundathu
Sonnal irandum sudarnaagam thikkengum
Paanalu nagam parantha paranchudar
Enaagath ulle idanlondavare

- Tirumantiram 2729

Human knowledge created Vedas, agamas, geethas and dogmas in accordance with universal knowledge. The universe contains stars, planets, milky ways and galaxies jointly function as they are all concerned with nature. Tirumular points out that both universal knowledge and human knowledge are the result of cosmic dance

பிரபஞ்சத்தில் தோன்றியுள்ள நட்சத்திரங்கள், கோள்கள், பால்வெளி மண்டலங்கள், அண்ட பேரண்டங்கள் யாவையும் ஒரு வரைமுறைக்குட்பட்டு இயங்கி வருகின்றன. மனிதரால் படைக்கப்பட்ட வேதங்களும், ஆகமங்களும், கீதங்களும், மேற்கூறிய இயற்கைப் படைப்புகளுடன் இணைந்து இயங்கி வருகின்றன. மனிதருள்ளும், பிரபஞ்சத்திலும் நடக்கும் இந்த இயக்கத்தினை திருமூலர் பரம்பொருளின் ஞானனந்தக் கூத்து என்கிறார்.



Unique dance of cosmos

10.5 எம்மிறையாடலால் யாவையும் ஆடிடும்

தேவர் சுரர்நரர் சித்தர் வித்தியாதரர்
மூவர்கள் ஆதியின் முப்பத்து மூவர்கள்
தாபதர் சத்தர் சமயம் சராசரம்
யாவையும் ஆடிடும் எம்மிறை யாடவே

- திருமந்திரம் 2731



Thevar surarnarar sitthar vitthiyadharar
Moovargal aathiyin muppathu moovargal
Thapathar satthar samayam saraasaram
Yavaiyum aadidum emmirai yadave

- Tirumantiram 2731

Everything is functioning, because of cyclical nature of cosmos.

பிரபஞ்ச இயக்கத்திற்கு அடிப்படை காரணம் அதன் சுழற்சி நிலையே ஆகும். அந்த சுழற்சி நிலையை திருமூலர் எம்மிறையின் நடன ஆட்டம் என்கிறார்



Trees receive cosmic messages

10.6 பொன்னின் அம்பலத்தில் மேற்குறிப்பு

அடியார் அரணடி ஆனந்தம் கண்டோர்
அடியார் ஆனவர் அத்தர் அருள் உற்றோர்
அடியார் ஆள்பவரே அடியவர் ஆமால்
அடியார் பொன் அம்பலத்து ஆடல் கண்டோரே

- திருமந்திரம் 2740



Adiyaar aranadi anantham kandor
Adiyaar aanavar atthar arul utror
Adi aalbavare adiyavar aamal
Adiyaar pon ampalathu adal kandare

- Tirumantiram 2740

If one deeply observes tree, herb, plants and their movement, one can witness the dance of Ponnambalam.

பூமியில் இயற்கையின் தயவினால் தோன்றியுள்ள மரம், செடி, கொடி முதலிய இயற்கை வளங்களை கூர்ந்து கவனிப்பவர்கள், அவற்றின் அசைவில் பொன்னம்பலத்தில் ஆடும் இறைவனின் ஆடலையே காண்பார்கள்.

Universal dance with sakthi / Yin -Yang

10.7 சிவசக்தியின் பிரபஞ்ச நடனம்

பரமாண்டத்து ஊடே பராசக்தி பாதம்
பரமாண்டத்து ஊடே படரொளி ஈசன்
பரமாண்டத்து ஊடே படர்தரு நாதம்
பரமாண்டத்து ஊடே பரன்நடம் ஆடுமே

- திருமந்திரம் 2734

Paramaandathu oode parasakthi paatham
Paramaandathu oode padaroli eesan
Paramaandathu oode padartaru naatham
Paramaandathu oode paranadam aadume

- Tirumantiram 2734

Tirumular compares the universal movement with Sivasakthi's dance in this hymn

திருமூலர் பிரபஞ்ச இயக்கத்தை சிவசக்தி நடனத்தோடு ஒப்பிடுகிறார்.



Cosmic flower

10.8 ஓரியனே விண்வெளி மலர்

உரைத்திடுங் குண்டத்தின் உள்ளே முக்காலும்
நகைத்தெழு நாற்கோணம் நன்மைகள் ஐந்தும்
பகைத்திடும் முப்புரம் பார் அங்கியோடே
மிகைத்தெழு கண்டங்கள் மேலறி யோமே

- திருமந்திரம் 1016

Uraithidum kundathin ulle mukkalum
Nakaithu ezhunaarkonam nanmaigal ainthum
Pakaithidum muppuram paarangiyode
Mikaithu ezhu kandangal melari yome

- Tirumantiram 1016

St Tirumular explains his experience of astral travelling into Orion constellation and he feels that the Orion looks like cosmic flower as depicted in this picture.

ஓரியன் நட்சத்திரக் கூட்டத்திற்கு தாம் சென்றுவந்த அனுபவத்தை விளக்குகிறார் திருமூலர். அவரது பார்வையில் ஓரியன் நட்சத்திரக் கூட்டம் 7 நட்சத்திரங்களுடன் ஒரு விண்வெளி மலரைப் போல தோன்றுவதாக வர்ணிக்கிறார்.



Cosmic fruit

10.9 குவளையும் கொம்மட்டியும்

தட்டத்து நீரிலே தாமரை பூத்தது
குட்டத்து நீரில் குவளை எழுந்தது
விட்டத்தி னுள்ளே விளங்க வல்லார்கட்குக்
குட்டத்தி லிட்டதோர் கொம்மட்டி யாமே

- திருமந்திரம் 2904

Thattathu neerile thamarai poothathu
Kuttathu neeril kuvalai ezhunthathu
Vittathi nulle vilanga vallarkatguk
Kuttathi littathor kommatti yame

- Tirumantiram 2904

The Kundalini energy crosses into one's body chakra kranthi (6 chakras) when he or she does yoga-meditation practices properly. And further the energy reaches sahasraara (duriyam) there it experiences Sivanubavam, then enters thuvathasaangam (12 inches above the head) then to Duriyathetham. In this astral travel process, one may taste cosmic bliss as cosmic fruit and may see the seven stars Orion constellation

உடலில் உள்ள குண்டலினி சக்தி ஆறு ஆதாரங்களைக் கடந்து தலை உச்சியில் உள்ள சஹஸ்ராரத்தை அடையும். சஹஸ்ராரத்தில் கிடைக்கும் சிவானுபவத்தை நுகரும் யோகசாதகர் துவாதசாங்கம் மற்றும் துரியாதீத நிலையை கடக்கும்போது ஏழு நட்சத்திரக் கூட்டத்தைக் காண்பார். அதுவே இறை இருப்பிடமான ஓரியன் நட்சத்திரக் கூட்டமாகும். இதையே இங்கே திருமூலர் குண்டலினியாகிய குவளை பூத்து கொம்மட்டி பழமாகியது என்று சூனிய சம்பாஷணையில் பேசுகிறார்.

Linga: Philosopher's stone

10.10 பிரபஞ்சத் தூணே அண்ட லிங்கம்

வழுதலை வித்திடப் பாகல் முளைத்தது
பழுதியை தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுது கொண்டோடினோர் தோட்டத்துக் குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே

- திருமந்திரம் 2869

Vazhuthalai vitthidap pakal mulaithathu
Puzhuthiyai thonidinen poosani poothathu
Thozhuthu kondodiinar thottathu kudigal
Muzhuthum pazhuthatu vazhaik kaniye

- Tirumantiram 2869

The philosopher's stone is nothing but, Sivalinga, Cosmic pillar, the black hole. Stars, Galaxies, (sakthi dynamic-energy) revolve around Cosmic pillar (Siva-static)

ஆதி அந்தமில்லாத இறையென்பது பிரபஞ்சத் தூணாகிய லிங்க வடிவில் (cosmic pillar) நியமித்து நிற்கிறது. அந்த கருந்துளையாகிய பிரபஞ்சத் தூணைச் சுற்றி நட்சத்திரங்களும், அண்டபேரண்டங்களும் சின்னஞ்சிறிய பந்துகள் வடிவில் சுற்றிச் சுழன்று வருகின்றன. தனது அகக்காட்சியில் கண்ட அந்த இறைவடிவத்தை இங்கு வரைந்துள்ளார் இந்நூலாசிரியர்.

The secrecy of Sakthi

10.11 சக்தி சக்கரம்

மார்க்கங்கள் என்ற மனோன்மணி மங்கலி
யார்க்கும் அறிய அறியாள் அவளாகும்
வாக்கும் மனமும் மருவி ஒன்றாய்விட
நோக்கும் பெருமைக்கு நுண்ணறிவு ஆமே

- திருமந்திரம் 1227

Maargangal eenra manonmani mangali
Yaarkum ariya ariyaal avalagum
Vaakkum manamum maruvi onraivida
Nokkum perumaikum nunnarivu aame

- Tirumantiram 1227

Tirumular here explains that subtle consciousness is called Manonmani in the chakra therapy. The mind which evolves from our breath to universe has created the pagan world, and all religious rituals.

Renowned scientist Stephen William Hawkins also lamented that he could not analyse the subtle inteligent mind of woman. But it is the hidden secrecy in her yoni chakra

யுத்தியே சகலசக்தி என்கிற உண்மையை மனோன்மணி என்ற குறியீடு மூலம் இங்கே திருமூலர் விளக்குகிறார். மனோன்மணியாகிய சக்தி, மனமாகிய இரண்டையும் தன்னுள் கலந்து நுண்ணறிவாய் நிற்கிறது. அந்த நுண்ணறிவே உலகில் புறச்சமயங்களைத் தோற்றுவித்துள்ளது.

அண்ட கருந்துளையை ஆய்வு செய்து மறைந்த இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கின்ஸ், பெண் சக்தியின் மனதை அறிய முடியவில்லை என்று புலம்பியுள்ளார். பெண்ணின் பிறப்பு உறுப்பு யோனிச் சக்கரத்தில் இருக்கிறது என்பதை அறியாமலே மறைந்து போனார்.

Sakthi in eye-brow chakra

10.12 புருவமத்தியில் பராசக்தி

ஆமை ஒன்றேறி அகம்படி யானென
ஓம என்றோதி உள்ளொளியாய் நிற்கும்
தாம நறுங்குழல் தையலைக் கண்டபின்
சோம நறுமலர் சூடி நின்றாளே

- திருமந்திரம் 1206



Aamai onreari agampadi yaanena
Ooma enrothi ulloliyai nirkum
Thama narunkulal thayyalaik kandapin
Soma narumalar soodi ninrale

- Tirumantiram 1206

A tortoise could control its sensual pleasures. Similarly, if a man controls his pleasures and does meditation with Ajapa prana mantra, he can experience HER in his brow chakra.

ஐம்புலன்களையும் ஆமையைப்போல கட்டுக்குள் வைத்து 'ஓம்' என்ற மந்திரத்தை உள்முகமாய், உதடசைவால் உச்சரித்து, தியானம் செய்பவர்களுக்கு பராசக்தியானவள் ஒளிவடிவாக புருவமத்தியில் தோன்றுவாள். புருவமத்தியில் பராசக்தி நறுமலர் சூடி நின்றாள், அதை திருமூலரும் கண்டுள்ளார்.


Chapter 11

WISDOM

பேரறிவு

Tirumular is nothing but cosmic wisdom

11.1 திருமூலர் ஒரு பிரபஞ்ச ஞானி

நந்தி அருளாலே மூலனை நாடிப் பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால் மெய்ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாம் எனநான் இருந்தேனே

- திருமந்திரம் 92

Nanthi arulaale moolanai naadip pin
Nanthi arulaale Sathasivan aayinen
Nanthi arulaal meignanathul nanninen
Nanthi arulaalam enanaan irunthene

- Tirumantiram 92

Tirumular reveals the great secrecy that by God's grace SuntharaNathar is transmigrated into Moolan's dead body, became SADHASIVAN, learnt cosmic knowledge and finally transformed as Tirumular. Tirumular is nothing but cosmic wisdom.

நந்தியாகிய கடவுளின் கிருபையால் சுந்தரானந்தர் மூலனின் உடலில் கூடுவிட்டு கூடுபாய்ந்து சதாசிவனாகி பிரபஞ்ச அறிவைப் பெற்றார். பின்னர் திருமூலராக மூலன் உடம்பில் வாழ்ந்து நந்தார் என்ற பெரிய ரகசியத்தை வெளிப்படுத்துகிறார் திருமூலர் என்கிற பிரபஞ்ஞானி.



Divine light

11.2 மலக்கலப்பற்றவன்

மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே மறைந்தனன் தாணு
மலக்கலப்பு அற்றால் மதியொளி யாமே

- தி.மந்திரம் 2213

Malakkalap pale marainthathu satthi
Malakkalap pale marainthathu gnagnam
Malakkalap pale marainthanan thanu
Malakkalapu atraal mathiyoli yaame

- Tirumantiram 2213

Generally, the aathma of human beings has three obstacles, namely arrogance (ego), karma, and illusion. They always hinder one not to attain cosmic energy, knowledge and wisdom. But God who is to get rid of these three malas, namely ego, mystery and illusion, always shines cosmic energy, cosmic wisdom and universal knowledge as golden light.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் ஆன்மாவை தாழ்வித் கொண்டிருப்பதால், மனிதனுக்கு மெய்யுணர்வு கிடைப்பதில்லை. ஆனால் மலக்கலப்பற்ற இறைவன் முழுமதியின் கடொளிபோல் விளங்குவான்.



Cosmic wisdom

11.3 – பிரபஞ்ச ஞானம்



பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்
பார்ப்பான் பசு ஐந்தும் பாலாய்ச் சொரியுமே

- திருமந்திரம் 2883

Paarppan agathile paarpasu ainthundu
Meipparum inri verithuth thirivana
Meipparum undaai veriyum adanginaal
Paarppan pasu ainthum paalaich soriyume

- Tirumantiram 2883

In every human body elements are five and senses are five. Consciousness are also five and the body senses have always uncontrolled desires, turbulences, and they lead one more sensual path. But if they are properly controlled like cowherd controls the cows, the inner Nanthi, Aathma of one will shower the honey wild and manna-dew all over the body.

ஆன்மாவை உள்ளீடாகப் பெற்ற மனித உடலில் ஐம்புலன்களும், ஐம்பொறிகளும் கட்டுப்பாடில்லாமல் அலைபாய்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தும் மேய்ப்பன் இருந்தால், ஐம்பொறிகளின் வெறியடங்கி அவை பிரபஞ்ச ஞானத்தை பாலாய் சொரியும்.



Cosmic launch

11.4 அடல்எரி வண்ணன்

திடரிடை நில்லாத நீர்போல ஆங்கே
உடலிடை நில்லா உறுபொருள் காட்டிக்
கடலிடை நில்லாக் கலம்சேரு மாபோல்
அடல்எரி வண்ணனும் அங்கு நின்றானே

- திருமந்திரம் 2561



Thidaridai nillatha neerpola aange
Udalidai nilla uruporul kattik
Kadalidai nillak kalamseru maapol
Adaleri vannanum angu ninraane

- Tirumantiram 2561

Human body is the temporary lodge to the God's particle, aathma. Its destination is to reach the holy kingdom. Within the human body, God's particle stays during all along the life time and guiding aathma to lead virtuous life.

உடலினுள்ளே உறைந்திருக்கும் உயிருக்கு உடம்பானது ஒரு தற்காலிக வசிப்பிடம்தான். இறையருளின் கருணையினால் இந்த உடம்பைப் பெற்ற உயிரானது, இறுதியில் இறைவனுடன் கலக்கும். இந்த உடலில் உயிர் வாழும் வரை அடல்எரி வண்ணன் ஆகிய இறைவன் உடலில் உறைந்துள்ள உயிருக்கு நன்னெறி புகட்டுவான்.



Total bliss

11.5 சுவாசமே ஆனந்த நடனம்

ஆனந்தம் ஆனந்தம் என்பர் அறிவிலர்
ஆனந்த மாநடம் ஆரும் அறிகிலர்
ஆனந்த மாநடம் ஆரும் அறிந்தபின்
தான்அந்தம் அற்றிடம் ஆனந்தமாமே

- திருமந்திரம் 2796



Anantham anantham enbar arivilar
Anantha manadam aarum arikilar
Anantha manadam aarum arinthapin
Thanantham atridam ananthamaame

- Tirumantiram 2796

The breathing methodology of inhaling and exhaling is the main function, mentioned by Tirumular as real dance, koothu. If one is too conscious with breathing, he becomes ego-less person, will bring him total bliss and happiness forever.

ஆனந்தம் ஆனந்தம் என்று எல்லோரும் சொல்வதை யாரும் அறிவிலர். ஆனந்த நடனமாடும் இறைவனையும் அறியமாட்டார்கள். ஆனந்தமாக நடனமாடும் இறைவனை தவநிலையில் ஒருவர் அறியப்பெற்றால், தான் என்ற அகங்காரத்தை விட்டுவிடுவார். தவநிலையில் அவர் சுவாசிக்கும் சுவாசமே ஆனந்த நடனம் என்பதை அறிந்து கொள்வார்.

Purifying the soul

11.6 ஆத்மசுத்தி

காரியம் ஏழில் கலக்கும் கடும்பசு
காரணம் ஏழில் கலக்கும் பரசிவன்
காரிய காரணம் கற்பனை சொற்பதப்
பாரறும் பாழில் பராபரத் தானே

- திருமந்திரம் 2505

Kaariyam eazhil kalakkum kadumpasu
Kaaranam eazhil kalakkum parasivan
Kaariya kaaranam karpanai sorpathap
Paararum paazhil paraaparath thane

- Tirumantiram 2505

The human soul is associated with ego, karma and maaya. Tirumular here confirms that the Lord Paramatma is ready to help to get rid of them.

ஆன்மாவானது மும்மலங்களினால் பிணைக்கப்பட்டு, விடுபட முடியாமல் மயங்கி நிற்கும். அம்மலங்களிலிருந்து விடுபடுவதற்கு பரமாத்மாவாகிய இறைவன், அந்த ஆத்மாவிற்கு உதவி செய்வான் என்று திருமூலர் கூறுகிறார்.



Inner pilgrimage

11.7 வடக்கு நோக்கிய யாத்திரை வீண்

வடக்கு வடக்கென்பர் வைத்தது ஒன்றில்லை
நடக்க உறுவரே ஞான மிலாதவர்
வடக்கில் அடங்கிய வையகம் எல்லாம்
அகத்தில் அடங்கும் அறிவுடை யோர்க்கே

- திருமந்திரம் 2070



Vadakku vadakenbar vaithathu onrillai
Nadakka uruvare gnana milathavar
Vadakkil adangiya vaiyagam ellam
Agathil adangum arividai yorkke

- Tirumantiram 2070

